
September 2023

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

14 YEARS ANNIVERSARY




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
1Kg
Traditional taste that Lingers

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

September 2023 சுவடி — 13
ஓலை — 6

## உள்ளே...

நிலவே நீ சாட்சி

முதல் படி

தமிழே தமிழே


சாதுர்யம் பேசாதே!

சேரமான் கனவு
தல வரலாறு
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்

காக்க காக்க

மருத்துவ தமிழ்

தரம் நிரந்தரம்



## வணக்கம் பல

நிலா... மனித வாழ்வில் காலம் காலமாக பல்வேறு வடிவங்களில் பார்க்கப்பட்டு வந்திருக்கிறது. காதலின் அழகை வர்ணிப்பதற்கும், மழலைக்கு அமுதூட்டுவதற்கும் எழுத்தாளர்களின் கற்பனை வளத்துக்கும், இன்ப துன்பத்தைச் சமமாகப் பார்ப்பதற்கு, அது வளர்வதும் தேய்வதும் போலானது என ஆன்மிகப் பெரியோர்கள் எடுத்தாண்ட நிலா!... இவ்வாறாகப் பலவித வடிவங்களில் இலக்கிய, இதிகாசங்களிலும் எடுத்தாளப்பட்டிருக்கும் நிலவில் இறங்கி சாதனை படைத்திருக்கிறது 'சந்திராயன் 3.' இச்சாதனையை முன்பே மூன்று வல்லரசுகள் நிகழ்த்திக் காட்டியிருந்தாலும், புரியாத புதிர்முடிச்சாக உள்ள தென்துருவத்தில் கால் பதித்திருப்பதன் மூலம் இந்தியா சாதனை படைத்திருக்கிறது என்று உலக நாடுகள் கொண்டாடுகின்றன.

வெகுவிரைவில் மனிதன் தனது ஆய்வுத் தளங்களை நிறுவி, நிலவை மனிதனின் இரண்டாவது பூமியாகவும் மாற்றக்கூடிய நாள் விரைவில் வரக்கூடும்! கண்ணுக்குத் புலப்படாதவற்றை மெய்ஞானத்தால் கண்டுணர்ந்தனர் மெய்ஞானிகள்! கண்ணுக்கு தெரிந்ததில் இருக்கும் மர்மங்களை முடிச்சவிழ்க்கின்றனர் நவீன விஞ்ஞானிகள்! உடலுக்கும் உள்ளத்துக்குமான பிணைப்பைப் போல், மெய்ஞானத்தாலும் விஞ்ஞானத்தாலும் மனிதன் தன்னைத் தானே மேன்மைபடுத்திக் கொள்ள வேண்டும்! இதனை விளக்கும் விதமாகத்தான் 'சந்திராயன்' பயணம் சில புதிய பார்வைகளையும், பாதைகளையும் திறந்து விட்டிருக்கிறது!

உலகைத் திரும்பிப் பார்க்க வைக்கும் விதமாக சந்திராயன் பயணத் திட்டத்தில் தமிழர்கள் பங்களிப்பு பெருமளவில் அமைந்தது ஒருபுறம் என்றால், உலக அளவில் சதுரங்க விளையாட்டில், தமிழ்நாட்டு பதின்பருவ இளம்வீரர் ஒருவர் விளிம்புவரை உலகப் பட்டத்துக்கு போராடியது வியக்க வைத்தது. அந்த வகையில் தமிழர்கள் 'நிலவேற்றல்' மற்றும் 'நினைவாற்றல்' என உலகளவில் 'பிரக்ஞை' உண்டு பண்ணி, அளப்பரிய சாதனை படைத்தவர்களை 'அய் தமிழ்' அன்போடு வாழ்த்தி வரவேற்று வணங்குகிறது!

உலகளாவிய நிகழ்வுகள், சாதனைகள் குறித்த பலவித ஆக்கங்களுடன் கலை, கதை, கவிதை, கட்டுரை என மணம் வீசும் கதம்ப மலர்களுடன் இம்மாத இதழ்! வழமைபோலவே மலர்கின்ற இம்மாத 'அய் தமிழ்' இதழை அன்போடு வரவேற்று வாசியுங்கள்!... நேசியுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



நிகழ்வு

# நிலவே

### இந்தியாவின் பெரும் கனவான சந்திரயான்–3 விண்ணில் ஏவப்படுகிறது!

இந்தியாவின் சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலாவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. நிலாவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது.

இஸ்ரோவின் இந்த சாதனை முயற்சியைத்தான் உலகம் முழுவதிலும் உள்ள விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்கள் வைத்தகண் வாங்காமல் பார்த்தனர். சந்திரயான்—3 விண்ணில் ஏவப்பட்டதன் மூலம் நிலவின் மீதான மக்களின் ஆர்வம் அதிகரித்து வருவது கண்கூடாகத் தெரிகிறது.


இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்—3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த 23—ம் தேதி தென்துருவத்தில் தரையிறங்கியது. பிறகு லேண்டரில் இருந்து பிரக்யான் ரோவர் நிலவில் இறங்கியது. லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்தும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் ஆய்வு செய்து வருகின்றன.

லேண்டர், ரோவரின் செயல்பாடுகள் குறித்து இஸ்ரோ தலைவர் சோம்நாத் திருவனந்தபுரத்தில் கூறியதாவது:

நிலவின் மிகச் சிறந்த, தெளிவான புகைப்படங்களை நாம் பெற்றிருக்கிறோம். வேறு எந்த நாட்டிடமும் இதுபோன்ற புகைப்படங்கள் கிடையாது. விக்ரம் லேண்டரும், பிரக்யான் ரோவரும் நல்ல நிலையில் உள்ளன. மிகச் சிறப்பாக ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டு வருகின்றன. நிலவில் ஒரு பகல் என்பது பூமியின் 14 நாட்களுக்கு இணையானது.

நிலவில் பகல் நேரம் தொடங்கிய கடந்த 23—ம் தேதி விக்ரம் லேண்டர் தென்துருவத்தில் தரையிறங்கியது. இதன்படி செப்டம்பர் 3—ம் தேதி வரை லேண்டரும் ரோவரும் ஆய்வு பணியில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு சோம்நாத் தெரிவித்தார்.

இஸ்ரோவின் விண்வெளி செயல்பாட்டு மையம் (எஸ்ஏசி) அகமதாபாத்தில் உள்ளது. இந்த மையத்தின் இயக்குநர் நிலேஷ் தேசாய் நிருபர்களிடம் கூறியதாவது: பிரக்யான் ரோவர் மூலம் ஒவ்வொரு






நாளும் 30 மீட்டர் தொலைவுக்கு நிலவில் ஊர்ந்து சென்று ஆய்வினை நடத்த திட்டமிட்டு இருந்தோம். ஆனால் நிலவின் கடினமான மேற்பரப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் தற்போது நாளொன்றுக்கு 12 மீட்டர் தொலைவுக்கு மட்டுமே ரோவரை நகர்த்த முடிகிறது.

லேண்டர் மூலம் நிலவின் அயனி உமிழ்வு, பிளாஸ்மா குறித்து ஆய்வு நடத்தி உள்ளோம். நிலவின் பகல் நேரம் முடிவதற்குள் ஏற்கெனவே திட்டமிட்ட அனைத்து ஆய்வுகளையும் நடத்தி முடிக்க தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். செப்டம்பர் 3—ம் தேதிக்குப் பிறகு நிலவில் இரவு நேரம் தொடங்கும். அப்போது நிலவின் வெப்பநிலை மைனஸ் 120 முதல் மைனஸ் 150 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். இந்த கடும் குளிரை லேண்டரும் ரோவரும் தாங்கி மீண்டும் செயல்படத் தொடங்கினால் இந்தியாவுக்கு வரப்பிரசாதமாக அமையும். இவ்வாறு நிலேஷ் தேசாய் தெரிவித்தார்.



கடந்த சில நாட்களாக இணையத்தில் நிலா தொடர்பான தேடல்கள் அதிகரித்துவருகின்றன. சந்திரன் தொடர்பான தெரியாத பத்து விஷயங்களை இங்கே சொல்கிறோம்.

1. நிலா வட்டமாக இல்லை

பௌர்ணமி நாளில், சந்திரன் சரியாக முழு வட்டமாகத் தோன்றும்.

ஆனால் உண்மையில் சந்திரன் ஒரு செயற்கைக்கோளைப் போல் பந்து போன்ற வட்டமானது அல்ல. அது தட்டையான உருவ அமைப்பைப் பெற்றுள்ளது. சந்திரனைப் பார்க்கும்போது, அதன் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க முடியும்.

இத்துடன், சந்திரனின் எடை அதன் வடிவியல் மையத்தில் குவிந்திருக்கவில்லை. நிலாவின் மொத்த எடையும் அதன் வடிவியல் மையத்திலிருந்து 1.2 மைல் தொலைவில் உள்ளது.

*2. நிலாவை ஒருபோதும் முழுமையாகக் காணமுடியாது*

*பொதுவாக சந்திரனைப் பார்த்தால், அதிகபட்சமாக அதன் மொத்த உருவத்தில் 59 சதவீதத்தை மட்டுமே உங்களால் பார்க்க முடியும்.*


*பூமியிலிருந்து பார்க்கும் போது நிலாவின் 41 சதவீதம் பரப்பு கண்களுக்குத் தெரியாது. விண்வெளிக்குச் சென்று அங்கிருந்து நிலாவின் 41 சதவீத நிலப்பரப்பில் இறங்கி நின்று பார்த்தால் உங்களால் பூமியைப் பார்க்க முடியாது.*

*3. நீல நிலாவுக்கும்* (Blue Moon) *எரிமலை வெடிப்புக்கும் இடையிலான தொடர்பு*

*1883 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் கிரகடோவா தீவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் காரணமாக அதனுடன் நீல நிலாவைத் தொடர்புபடுத்தும் வழக்கம் நடைமுறைக்கு வந்ததாக நம்பப்படுகிறது.*

*அந்த எரிமலை வெடிப்பு பூமியின் வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசமான எரிமலை வெடிப்புகளில் ஒன்றாக கருதப்படுகிறது. உலக அளவில் கிடைத்துள்ள தகவல்களின்படி, அந்த எரிமலை வெடிப்பின்போது எழுந்த சத்தம் மேற்கு ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள பெர்த் நகர் வரை கேட்டது.*

*அதைத் தொடர்ந்து வளிமண்டலத்தில் அதிக அளவில் சாம்பல் பரவியது. சாம்பல் நிறைந்த இரவுகளில் சந்திரன் நீல நிறத்தில் தோன்றியது. இதற்குப் பிறகுதான், எரிமலை வெடிப்பையும், நீல நிலவையும் தொடர்புபடுத்தும் பழக்கம் ஏற்பட்டது.*




*4. நிலவில் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் ரகசிய திட்டம்*

*பனிப்போரின் உச்சகட்டத்தில் நிலவில் அணு ஆயுதத் தாக்குதல் நடத்தும் திட்டத்தை அமெரிக்கா தீவிரமாகப் பரிசீலித்த ஒரு காலம் இருந்தது.*

*அதன் நோக்கம் சோவியத் யூனியனை ஒரு அழுத்தத்தின் கீழ் கொண்டுவரும் வகையில் அமெரிக்க இராணுவத்தின் சக்தியைப் பற்றி பறைசாற்றுவதே ஆகும்.*

*இந்த ரகசிய திட்டத்தை ‘நிலாவுக்கு மேற்கொள்ளப்படும் பயணங்கள் பற்றிய ஆய்வு’ என்ற நோக்கில் ‘றிகூஷீஷீழீமீநீமீ கி119’ என்ற பெயரில் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*5. நிலவில் ஏன் ஆழமான குழிகள் ஏற்படுத்தப்பட்டன*

*ஒரு பாம்பு சூரியனை விழுங்குவதால் சூரிய கிரகணம் ஏற்படுகிறது என்று தென்கிழக்கு ஆசியாவில் ஒரு பழங்கால நம்பிக்கை உள்ளது. சீனாவிலும் இதே போல் ஒரு பழக்கம் இருந்த நிலையில், கிரகணம் ஏற்படும் போது இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக சீன மக்கள் முடிந்தவரை சத்தம் போடுவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.*

*இதே போல் நிலவில் உள்ள குழிகளில் ஒரு தவளை அமர்ந்திருக்கிறது என்றும் பழங்கால சீனர்கள் நம்பினர். ஆனால் நிலவில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள், ஆழமான குழிகள், நான்கு பில்லியன்*



ஆண்டுகளுக்கு முன்பு கோள்கள் மோதியதால் உருவானவை என்பது தான் உண்மை.

6. பூமியின் வேகத்தைக் குறைக்கும் நிலா

நிலா பூமிக்கு மிக அருகில் இருந்தால், அது அண்மைநிலை (றிமீக்ஷீவீரீமீ) என்று அழைக்கப்படுகிறது.

இந்த நேரத்தில், கடல் அலையின் வேகம் வழக்கத்தை விட கணிசமாக அதிகரிக்கிறது. அப்போது, சந்திரன் பூமியின் சுழற்சி சக்தியையும் குறைக்கிறது. இதன் காரணமாக பூமி சுற்றும் கால அளவு ஒவ்வொரு நூற்றாண்டிலும் 1.5 மில்லி விநாடிகள் குறைகிறது.

7. நிலாவிலிருந்து எவ்வளவு வெளிச்சம் கிடைக்கிறது?

சூரியன் முழு நிலவை விட 14 மடங்கு பிரகாசமாக இருக்கிறது.

ஒரு பௌர்ணமியில் தோன்றும் ஒளியில் இருந்து சூரியனின் ஒளிக்கு சமமான ஒளியை நீங்கள் விரும்பினால், உங்களுக்கு 3,98,110 நிலவுகள் தேவைப்படும்.

சந்திர கிரகணம் ஏற்பட்டு, நிலா பூமியின் நிழலில் நுழையும் போது, அதன் மேற்பரப்பு வெப்பநிலை 500 பாரன்ஹீட் வரை குறைகிறது.

மேலும், இந்த கிரகணம் 90 நிமிடங்களுக்கும் குறைவான காலத்திற்கு மட்டுமே நீடிக்கும்.

8. லியோனார்டோ டாவின்சி நிலாவைப் பற்றி என்ன கண்டுபிடித்தார்?

சில நேரங்களில் நிலா ஒரு வளையம் போல் தெரிகிறது. இதை அர்த்தசந்திரா அல்லது பால்சந்திரா என்றும் அழைக்கிறோம். அத்தகைய சூழ்நிலையில், சந்திரனின் மையத்தில் சூரியன் பிரகாசிப்பது போன்ற ஒன்றைக் காண்கிறோம்.

சந்திரனின் மற்ற பகுதிகள் மங்கலான பின்னணியில் மட்டுமே தெரியும். இதை வைத்துக்கொண்டு நாம் நிலவு சுருங்குவதாக நினைக்கிறோம்.

ஆனால், நிலா சுருங்கவில்லை என்பது மட்டுமின்றி விரிவடைவதும் இல்லை என்றும், அதன் ஒரு பகுதி மட்டுமே நம் பார்வையில் இருந்து மறைகிறது என்றும் உலகில் முதன்முதலாக லியோனார்டோ டா வின்சி கண்டுபிடித்தார்.

9. சந்திரனில் உள்ள பள்ளத்தின் பெயர்கள் எதனடிப்படையில் சூட்டப்படுகின்றன?

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையம் நிலவில் உள்ள பள்ளங்களுக்கு மட்டுமல்லாமல் விண்வெளியில் தெரியும் எந்த ஒரு பொருளுக்கும் பெயர் வைக்கும் பணியையும் மேற்கொண்டுவருகிறது. சந்திரனில் உள்ள பள்ளங்களுக்கு பிரபல விஞ்ஞானிகள், கலைஞர்கள் அல்லது ஆய்வாளர்களின் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

அப்பல்லோ பள்ளம் மற்றும் மேயர் மாஸ்கோவின்ஸின் அருகிலுள்ள பள்ளங்களுக்கு


ISRO @isro · Follow

Chandrayaan-3 Mission:
Updates:

The communication link is established between the Ch-3 Lander and MOX-ISTRAC, Bengaluru.

Here are the images from the Lander Horizontal Velocity Camera taken during the descent.


#Chandrayaan_3
#Ch3 Show more



8:17 PM · Aug 23, 2023

The Fauxy · Aug 23, 2023
@the_fauxy · Follow

BREAKING: #Chandrayaan3 releases pictures of moon's surface. Potholes on lunar surface show signs of not only life but also government's existence.



amitesh kumar batsh
@batshamitesh · Follow

Potholes on moon signifies not only habitation bt also a well functioning municipal corporation ...😃😃

அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. மேயர் மாஸ்கோவின்ஸ் என்பது சந்திரனின் கடல் பகுதி என்று அழைக்கப்படுகிறது.

சந்திரனைப் பற்றி மனிதர்களுக்குத் தெரியாத மேலும் பல விஷயங்கள் உள்ளன.

அரிசோனாவின் லோவெல் அப்சர்வேட்டரி ஆஃப் ஃபிளாக்ஸ்டாஃப் (Lowell Observatory of Flagstaff) 1988 ஆம் ஆண்டில் சந்திரனைப் பற்றி ஒரு ஆய்வு நடத்தியது.

இதில் பங்கேற்ற 13 சதவீதம் பேர் நிலவு பாலாடைக்கட்டியால் ஆனது எனக் கருதுவதாக தெரிவித்தனர்.

10. நிலாவின் மர்மம் நிறைந்த தென்துருவம்

சந்திரயான்—3 செயற்கைக்கோள் சென்றடைய முயற்சிக்கும் நிலவின் தென் துருவப் பகுதி மிகவும் வியப்பை ஏற்படுத்தும் பகுதியாகக் கருதப்படுகிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவின் கூற்றின்படி, இந்த பகுதியில் பல ஆழமான குழிகளும் மலைகளும் உள்ளன என்றும், அவற்றைத் தாண்டி, சூரிய ஒளி பல பில்லியன் ஆண்டுகளாக அந்த நிலப்பரப்புகளை அடையவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

நிலவின் தென் துருவத்தில் சல்பர், அலுமினியம், கால்சியம், அயர்ன், குரோமியம், டைட்டேனியம், மாங்கனீஸ், சிலிக்கான், ஆக்ஸிஜன் உள்ளிட்ட கனிமங்கள் இருப்பது சந்திரயான் 3 உறுதி செய்துள்ளது.

நிலவின் தென்துருவத்தை ஆராயும் நோக்கில் சந்திரயான்—3 விண்கலத்தை கடந்த ஜூலை 14—ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருக்கும் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. 40 நாட்களில் பல ஆயிரம் கிலோமீட்டர்களை கடந்து திட்டமிட்டபடி நிலவின் தென்துருவத்தில் ஆகஸ்ட் 23ஆம் தேதி தரையிறங்கியது சந்திரயான் 3 விண்கலம்.

இதன் மூலம் நிலவின் மேற்பரப்பில் லேண்டரை வெற்றிகரமாக தரையிறக்கிய நாடுகளின் பட்டியலில், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவை தொடர்ந்து இந்தியா நான்காவது இடத்தை பிடித்துள்ளது. அதேநேரம், நிலவின் தென்துருவத்தில் லேண்டரை தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமை இந்தியா பெற்றுள்ளது.

நிலவில் தரையிறங்கிய பின் விக்ரம் லேண்டரில் இருந்து பிரக்யான் ரோவர் நிலவில் கால்தடம்

பதித்தது. பின் பிரக்யான் ரோவர் நிலவில் மூன் வாக் செய்யும் காட்சிகளை இஸ்ரோ வெளியிட்டது. தற்போது பிரக்யான் ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது. நிலவு தொடர்பாக இதுவரை அறியப்படாத பல்வேறு தகவல்களை சந்திரயான் 3 வழங்கும் என்பதோடு, சந்திரனின் மிகவும் மதிப்புமிக்க வளங்களில் ஒன்றான நீர் பனி பற்றிய பணியில் ரோவர் இறங்கியுள்ளது. முக்கியமாக ஹைட்ரஜன் இருந்தால் நீர் இருப்பதற்கான சாத்தியகூறுகள் அதிகமாக இருக்கும்.

ஏனெனில், ஹைட்ரஜன் 2 பகுதியும் ஆக்ஸிஜன் ஒரு பகுதியும் இணைந்தது தான் நீர். அதேபோல உலகில் மிக அரிதாக கிடைக்கும் கனிமங்களில் ஒன்று சல்பர், பூமியில் வெறும் 0.63 சதவிகிதம் மட்டுமே இருக்கக்கூடிய தனிமம் இது. இதை



கொண்டுதான் விமானங்கள் மற்றும் ராக்கெட்டுகள் உருவாக்கப்படுகின்றன. தற்போது பிரக்யான் ரோவர் அதனை கண்டு பிடித்திருப்பது நிலவின் தெந்துருவத்தில் என்ன இருக்கிறது என்ற ஆர்வத்தை உலக நாடுகள் மத்தியில் இது தூண்டியுள்ளது.

ஏராளமான தகவல்கள் தென் துருவத்தில் இருந்து கிடைக்கப்பெறலாம் என்பதே இத்திட்டத்தின் மீதான மிகப்பெரிய எதிர்பார்ப்பாகும்.

கடந்த சில தினங்களுக்கு முன் சந்திரயான் 3 மூன்று இலக்குகளை கொண்டு பயணம் செய்ததாகவும், அதில் இரண்டு இலக்குகள் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதாகவும் மூன்றாவது இலக்குக்கான பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தது. இப்படி படிப்படியாக சந்திரயான் 3 விண்கலம் தனது அய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், நேற்று நிலவை பற்றிய சில முக்கிய தகவல்களை பிரக்யான் ரோவர் வழங்கியுள்ளது.

முக்கியமாக நிலவின் தெந்துருவத்தில் மேற்பரப்பில் சில கனிமங்கள் இருப்பதாக உறுதி செய்துள்ளது. அதாவது, நிலவில் சல்பர், அலுமினியம், கால்சியம், அயர்ன், குரோமியம், டைட்டேனியம், மாங்கனீஸ், சிலிக்கான், ஆக்ஸிஜன் உள்ளிட்ட தனிமங்கள் இருப்பதை ரோவரில் உள்ள எல்ஐபிஎஸ் கருவி கண்டுபிடித்திருக்கிறது.இதுவரை எந்த நாடும் நிலவில் சல்பர் இருப்பதை உறுதிபடுத்தவில்லை. அடுத்தக்கட்டமாக நிலவில் ஹைட்ரஜன் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தும்

நிலவில் கால் பதிக்கும் கனவை நிஜமாக்கியவர்!

சந்திரயான்—3 விண்கலத்தின் இலக்கு, சந்திரனில் தரையிறங்கி ஆய்வு மேற்கொள்வது. இதற்காக வடிவமைத்து அனுப்பப்பட்டுள்ள தரையிறங்கும் சாதனமான லூனார் லேண்டருக்கு இடப்பட்டுள்ள பெயர் 'விக்ரம்'. விக்ரம் என்றால் வெற்றி என்று பொருள். அது மட்டுமல்ல, இந்த 'விக்ரம்' என்ற சாதனையின் பின்புலத்தில் மகத்தான ஒரு விஞ்ஞானியின் தீர்க்கதரிசன முயற்சிகள் ஒளிர்கின்றன. அவர்தான், இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பை (இஸ்ரோ) நிறுவிய விக்ரம் அம்பாலால் சாராபாய்.

இன்று உலக அரங்கில் விண்வெளி ஆராய்ச்சியில் இந்திய நாடு முன்னிலை வகிக்கிறது. பிற நாடுகளின் செயற்கைக்கோள்களை வர்த்தகரீதியாக விண்ணில் செலுத்தும் வல்லமையையும் இந்திய பெற்றிருக்கிறோம்.




தவிர கண்டம் தாண்டிச் செல்லும் அதிநவீன ஏவுகணைகளையும் நாம் உருவாக்கியிருக்கிறோம். இதற்கெல்லாம் மூல காரணமானவர் தான் விண்வெளி விஞ்ஞானியான விக்ரம் சாராபாய்.

குஜராத்தின் ஆமதாபாத்தில், 1919, ஆக. 12—இல், செல்வாக்கான சமணக் குடும்பத்தில் பிறந்தவர் விக்ரம் சாராபாய். அவரது தாத்தா குஜராத்தில் மருந்து உற்பத்தி ஆலை உள்ளிட்ட பல தொழிற்சாலைகளை நிறுவியவர். வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் குடும்பத் தொழில்களுடன் முடங்கிவிடாமல், கணிதம், இயற்பியல் பாடங்களில் ஏற்பட்ட ஆர்வத்தால், விஞ்ஞான ஆய்வுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார் விக்ரம்.

லண்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் டிரிப்போ பட்டம் பயின்று (1940) நாடு திரும்பிய விக்ரம், பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தில் பிரபல விஞ் ஞானி சர்.சிவி.ராமனின் வழிகாட்டலில் அண்டக்கதிர்கள் (சிஷீஊனீவீநீ ஸிணீஹ்வ) தொடர்பாக ஆராய்ச்சி நடத்தினார். 1945—இல் மீண்டும் லண்டன் சென்ற விக்ரம், ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர்ந்தார். வெப்ப பிரதேசங்களில் அண்டக் கதிர்களின் தாக்கம் குறித்த ஆய்வுக்காக அவர் 1947—இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

பிறகு நாடு திரும்பிய விக்ரம், தனது குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் 1947, நவ. 11—இல் ஆமதாபாத்தில் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தை (Physical Research Laboratory -PRL) நிறுவினார். அங்கு அண்டக் கதிர்கள் குறித்த தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். பின்னாளில் இந்தியா விண்வெளித் துறையில் பல சாதனைகளை நிகழ்த்த உந்துசக்தி அளித்த மையம் இதுவே.

விக்ரம் சாராபாய், சிறந்த விஞ்ஞானி மட்டுமல்ல, அவர் நிறுவனங்களைக் கட்டமைப்பதில் தேர்ந்தவர். நாட்டின் முக்கியமான பல ஆய்வு நிறுவனங்கள் அவரால்தான் தொடங்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டன.

குஜராத் மாநிலத்திலுள்ள ஜவுளி ஆலைகளின் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்க்க ஆமதாபாத் ஜவுளித் தொழிலக ஆராய்ச்சி சங்கத்தை (VASCSC) 1947—இல் நிறுவிய விக்ரம், 1966 வரை அதை வழிநடத்தினார். இன்று குஜராத் மாநிலம் ஜவுளித் துறையில் சிறந்து விளங்குவதற்கு இந்த அமைப்பின் பின்புலமே காரணம்.

விக்ரம் தொழில் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்ததால், மேலாண்மைத் துறையில் நாம் பின்தங்கி இருப்பதை உணர்ந்தார். அவரது கூட்டு முயற்சியால் ஆமதாபாத்தில் இந்திய மேலாண்மைப் பள்ளி 1961—இல் நிறுவப்பட்டது. அதன் முதல் இயக்குநராகவும் விக்ரம் பணியாற்றினார்.



கணிதம், அறிவியலில் மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்கவும், அறிவியல் கல்வியில் புதுமைகளைப் புகுத்தவும், விக்ரமால் சமுதாய அறிவியல் மையம் 1960—இல் ஆமதாபாத்தில் துவங்கப்பட்டது. அது தற்போது விக்ரம் சாராபாய் பெயரில் (கூிகிஷிசிஷிசி) அறிவியல் பணிகளை ஆற்றி வருகிறது.

1942—இல் கேரளத்தைச் சேர்ந்த பரத நாட்டியக் கலைஞர் மிருணாளினியை விக்ரம் திருமணம் செய்தார். இவர்கள் இருவரும் இணைந்து ஆமதாபாத்தில் நிறுவிய 'தர்ப்பண்' நிகழ்த்து கலை கல்வி நிறுவனம் இன்றும் கலைகளை வளர்த்து வருகிறது.

குஜராத் மாநிலத்தில் உள்ள ஜவுளி ஆலைகளின் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்க்க ஆணதாபாத் ஜவுளித் தொழிலக ஆராய்ச்சி சங்கம்(ஆதிரா), ஆமதாபாத்தில் இந்திய மேலாண்மைப் பள்ளி(ஐஐஎம்—ஏ), தமிழகத்தின் கல்பாக்கத்திலுள்ள அதிவேக ஈனுலை, கொல்கத்தாவிலுள்ள மாறுபடும் ஆற்றல் முடுக்கி திட்டம், ஹைதராபாத்திலுள்ள இந்திய மின்னணுவியல் நிறுவனம், ஜார்கண்ட் மாநிலம், ஜாடுகுடாவிலுள்ள யுரேனியம் உற்பத்தி நிலையம் ஆகிய நிறுவனங்கள் விக்ரம் சாராபாயால் நிறுவப்பட்டவை.

இஸ்ரோவின் உதயம்:

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, விண்வெளித் துறையில் நாடு வளர வேண்டியதன் அவசியத்தை விக்ரம் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தினார். அவருக்கு மூத்த விஞ் ஞானியான ஹோமி ஜஹாங்கீர் பாபாவும் உறுதுணை புரிந்தார்.

ருஷ்யாவின் 'ஸ்புட்னிக்' விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டதன் தொடர்ச்சியாக உலக நாடுகளில் விண்வெளித் துறை கவனம் பெற்றது.


ஆனால் இந்தியா போன்ற ஏழை நாட்டுக்கு இது தேவையில்லை என்று பலர் விமர்சித்தனர். அவர்களுக்கு விக்ரம் சாராபாய் அளித்த பதில் அவரது தொலைநோக்கையும் தேசபக்தியையும் வெளிப்படுத்தியது:

"வளரும் நாடான இந்தியாவுக்கு விண்வெளி ஆராய்ச்சி தேவையா? என்று சிலர் கேட்கின்றனர். அதன் பயன்பாட்டில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகள் போல புதிய நிலவுகளையும் கோள்களையும் கண்டுபிடிக்கும் போட்டியில் இறங்கும் எண்ணம் நமக்கு இல்லை.

ஆனால், நாம் தேசம் என்ற அளவில் மதிப்புடன் திகழ வேண்டுமானால், உலக நாடுகளிடையே நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், மனித சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காணும் அதிநவீனத் தொழில்நுட்பங்களில் வேறெந்த நாட்டுக்கும் சளைக்காதவர்களாக நாம் இருந்தாக வேண்டும்" என்றார் விக்ரம் சாராபாய்.

இந்தியாவுக்கென தனித்த ராக்கெட் ஏவுதளம் வேண்டும் என்றும் விக்ரம் சாராபாய் கனவு கண்டார். அவரும் ஹோமி பாபாவும் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் காரணமாக, அரசு அதற்கு சம்மதித்ததுடன் அதற்கான பொறுப்பை விக்ரமிடமே ஒப்படைத்தது. விக்ரமின் தளாரா முயற்சியின் பலனாக, இந் தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழு 1962—நிறுவப்பட்டது.

அதையடுத்து, கேரளத் தலைநகரான




திருவனந்தபுரத்தின் ஒருபகுதியான தும்பாவில் ராக்கெட் ஏவுதளத்தை 1963—இல் விக்ரம் அமைத்தார். நிலநடுக்கோட்டுக்கு மிக அருகில் உள்ள இந்த மையம் ராக்கெட்களை ஏவுவதற்கு மிகவும் ஏற்றதாகும். இங்குதான் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விக்ரம் சாராபாயின் கீழ் பணிபுரிந்தார் என்பது குறிப்பிட வேண்டிய தகவல்.

1963, நவ. 21—இல் தும்பாவில் இருந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவி பரிசோதிக்கப்பட்டது.

1969—இல் இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பாக (Indian Space Research Organisation-ISRO) மாற்றம் பெற்றது. அதன் வளர்ச்சிக்கும், அதில் திறம் மிகுந்த இளம் விஞ்ஞானிகள் இணையவும், அடித்தளமாக விக்ரம் செயல்பட்டார்.

இதனிடையே இந்திய அணுசக்தி ஆணையத்தின் தலைவராக இருந்த ஹோமி பாபா 1966—இல் அகால மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, அரசின் வேண்டுகோளை ஏற்று அதன் தலைவராகப் பொறுப்பேற்ற விக்ரம், 1971 வரை அதைத் திறம்பட வழிநடத்தினார். அப்போது அணுசக்தியை பாதுகாப்புக்குப் பயன்படுத்தும் நடைமுறைகளை விக்ரம் உருவாக்கினார். பல அணு உலைகள் இக்காலத்தில் உருவாக்கப்பட்டன.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கோளை விண்ணில் ஏவ வேண்டும் என்பது விக்ரமின் பெருங்கனவு. அவரது வழிகாட்டலில் இயங்கிய விஞ்ஞானிகள் குழு, அவரது மறைவுக்குப் பிறகு 1975—இல் முதல் இந்திய செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தி சாதனை படைத்தனர்.

இடைவிடாத ஆய்வுப் பணிகள், புதிய விஞ்ஞானக் கட்டமைப்புகளை நிறுவுதல், இளம் விஞ்ஞானிகளை உருவாக்குதல் போன்ற பணிகளில் துடிப்புடன் இயங்கிய விக்ரம் சாராபாய், 1971, டிசம்பர் 30—இல் தனது 52—வது வயதில் காலமானார்.

அவருக்கு பாரத அரசு, சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது (1962), பத்மபூஷண் (1966), பத்மவிபூஷண் (1972) ஆகிய விருதுகளை அளித்து கௌரவித்தது. திருவனந்தபுரம் விண்வெளி ஆய்வு மையத்துக்கு விக்ரம் சாராபாய் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அண்டக்கதிர் ஆய்வில் விக்ரம் அளித்த பணிக்காக, நிலவின் அமைதிக்கடல் பகுதியிலுள்ள கருங்குழிக்கு 1973—இல் விக்ரமின் பெயர் உலக விஞ்ஞானிகளால் சூட்டப்பட்டுள்ளது.

விக்ரம் சாராபாயின் நினைவைப் போற்றும் வகையில் அவரது பெயரிலான லூனார் லேண்டர், ஆக. 23, 2023 அன்று மாலை நிலவில் தரையிறங்கி சரித்திரம் படைத்து இருக்கிறது. "சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்!" என்று பாடிய தமிழகத்தின் மகாகவி பாரதி கண்ட கனவை நனவாக்கிய நமது விஞ் ஞானிகளுக்கு ஒரு வீரவணக்கம் சொல்வோமே!

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



மும்பை கூட்டத்தில் மேலும் சில கட்சிகள் இந்தியா கூட்டணியில் இணையும்!"

**நிதீஷ் குமார்**

(அப்படித்தான் போனமுறையும் சொன்னீங்க! ஆனா இணைவதற்கு பதிலா அணையுதே! என்ன காரணம்?)



"நீட் தேர்வுக்கு காங்கிரஸ் மற்றும் தி.மு.க கூட்டணி அரசுதான் காரணம்!"

**கரு. நாகராஜன்**

(என்னப்பா இது! இவ்வளவுநாள் இந்தப் பந்தை நீங்க வைச்சிருந்துட்டு திடீர்னு அவங்க மேலே போட்டுட்டு ஓடறீங்க?)



"மனவலிமையில் பிரக்ஞானந்தா 'அசுரன்!'

**மேக்னஸ் கார்ல்சன்**

'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்று எப்போதோ ஐயன் சொல்லியாச்சு!



"அவரவர் அவரவர் இடத்தில் இருக்கின்றனர். என்னைப் பொறுத்தவரை ஒரே ஒரு சூப்பர்ஸ்டார்தான். அது எம்ஜிஆர் மட்டுமே!"

**மன்சூர் அலிகான்**

(உண்மைதான்! அவரவர் இடத்தில் அவரவர்தான்!.. அவர் அவர்தான்!...)

# முதல்

## பிரக்ஞானந்தா: 12 வயதில் கிராண்ட் மாஸ்டர் ஆன சிறுவன்

ஆன்லைனில் நடந்த ஏர்திங்ஸ் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் எட்டாவது சுற்றில் உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை 16 வயதான பிரக்ஞானந்தா தோற்கடித்திருக்கிறார்.

தொடர்ந்து மூன்று வெற்றிகளைப் பெற்றிருந்த கார்ல்சன், கறுப்புக் காய்களுடன் ஆடிய பிரக்ஞானந்தாவின் 39 நகர்வுகளில் வீழ்ந்தார்.

அனைத்து வகையான செஸ் வடிவங்களிலும் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்துவது இதுவே முதல்முறையாகும்.

ஏர்திங்ஸ் மாஸ்டர்ஸ் ரேபிட் போட்டியில், ஒரு வெற்றிக்கு 3 புள்ளிகளும், டிராவுக்கு ஒரு புள்ளியும் வழங்கப்படுகிறது. தொடக்க கட்டத்தில் இன்னும் ஏழு சுற்றுகள் இருக்கின்றன. சென்னையைச் சேர்ந்த பிரக்ஞானந்தா, தனது பன்னிரண்டாவது வயதிலேயே சதுரங்க போட்டியில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றவர். அந்த சாதனையை 2018இல் அவர் நிகழ்த்தியபோது அவர் பிறந்து 12 வருடங்கள் 10 மாதங்கள் 13 நாட்கள் ஆகியிருந்தன. அதன் மூலம் இந்தியாவின் மிக இளம் வயது கிராண்ட் மாஸ்டர் எனும் சாதனையை பிரக்ஞானந்தா படைத்தார்.

### சென்னை சிறுவனின் இளம் சாதனை

கோடி பேர் புழங்கும் சென்னையில் இருந்து சென்று, இத்தாலி நாட்டில் சில ஆயிரம் பேருக்கு மட்டுமே தாயகமாக இருக்கும் ஊர்டிஜெய் எனும் சிறு ஊரில் நடந்த நான்காவது க்ரெடின் ஓபன் 2018 தொடரில், இறுதிச் சுற்றில் விளையாடுவதற்கு முன்னரே கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று அசத்தியிருக்கிறார் பிரக்ஞானந்தா.

க்ரெடின் ஓப்பனில் 16 வயது இரான் வீரர் ஆர்யன் கொலாமியை அபாரமாக வென்ற பின்னர் எட்டாவது சுற்றில் இத்தாலியைச் சேர்ந்த 17 வயது கிராண்ட் மாஸ்டர் மோரொனி லூகாவை வென்றார்.






# படி !

இதன் மூலம் ஒன்பதாவது சுற்றில் 2482 ரேட்டிங் மேல் வைத்துள்ள வீரரை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் மூன்றாவது முறையாக கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெறுவதற்கான அனைத்து விதிகளையும் பூர்த்தி செய்து தகுதி பெற்றார். நெற்றியில் பட்டை, எண்ணெய் வைத்து வகுடெடுத்து வாரிச்சீவப்படாத தலைமுடி, அமைதியான முகம் — எளிமையான முகத்தோற்றமும் பெருஞ்சாதனைகளுக்கும் மிகச்சிறிய புன்னகையை வெளிப்படுத்தும் சிறுவன் பிரக்ஞானந்தா. கடந்த சனிக்கிழமை உலகிலேயே

## விவேக் ஆனந்த்

சாதனையை உடைக்க பிரக்ஞானந்தாவுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. எனினும் முந்தைய தொடரில் கிடைத்த தோல்வியை பொருட்படுத்தாமல் நம்பிக்கையுடன் இத்தாலி க்ரெடின் ஓபன் 2018 தொடரை எதிர்கொண்டதன் மூலம் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் எனும் பட்டத்தையும்



இரண்டாவது இளவயது கிராண்ட்மாஸ்டர் எனும் சிறப்பை பெற்றார். பதின் பருவத்தை எட்டுவதற்கு முன்னதாக கிராண்ட் மாஸ்டர் ஆனது உலகிலேயே இருவர்தான். ஒருவர் பிரக்ஞானந்தா, மற்றொருவர் உக்ரைனைச் சேர்ந்த செர்கே கர்ஜாகின்.

கடந்த 2002ஆம் ஆண்டு தனது 12 வருடம் ஏழு மாதத்தில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று உலகின் மிகக் குறைந்த வயது கிராண்ட்மாஸ்டர் எனும் சிறப்பை பெற்றார் செர்கே கர்ஜாகின். அவரது இந்தியாவின் இளம் வயது கிராண்ட் மாஸ்டர் எனும் பட்டத்தை வைத்திருந்த பரிமார்ஜன் நெகியின் சாதனையையையும் தகர்த்துள்ளார்.

சென்னை சிறுவனின் வெற்றிக்கு பின்னணியில் இருந்தவர்களில் மிகவும் முக்கியமானவர் போலியோவால் பாதிக்கப்பட்ட அவரது தந்தை ரமேஷ்பாபு. நடுத்தர குடும்பத்தில் பிறந்த ரமேஷ்பாபு தமிழக அரசின் கூட்டுறவு வங்கியில் 23 வயதில் பணிக்குச் சேர்ந்தார். தற்போது



சென்னையிலுள்ள கொரட்டூரில் கூட்டுறவு வங்கி கிளையொன்றின் மேலாளராக பணிபுரிகிறார்.

ரமேஷ்பாபு — நாகலட்சுமி தம்பதிக்கு இரு குழந்தைகள். இவர்களது பெண் வைஷாலியும் செஸ் போட்டியில் அசத்திக்கொண்டிருக்கிறார்.

பிரக்ஞானந்தா செஸ் மேதையானதன் பின்னணி செஸ் விளையாட்டுக்கும் ரமேஷ்பாபுவுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. தனது மகன் எப்படி கிராண்ட் மாஸ்டர் ஆனார் எனும் கதையை பகிர்ந்தார் பிரக்ஞானந்தாவின் தந்தை ரமேஷ் பாபு.

''எனது மகள் வைஷாலியை செஸ் வகுப்பில் சேர்த்துவிட்டிருந்தேன். அவள் நன்றாக விளையாடினாள். ஆனால் செஸ் விளையாட்டு போட்டிகளில் பெரிய நிலைக்குச் செல்ல வேண்டுமென்றால் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டும். குடும்ப சூழ்நிலை பொருளாதார சூழ்நிலை எல்லாம் கருத்தில் கொண்டு எனது மகனை செஸ் விளையாட்டில் ஈடுபடுத்தக்கூடாது என்றுதான் திட்டமிட்டேன். ஆனால் நான்கு வயது இருக்கும்போதே அக்காவுடன் செஸ் போர்டில் நிறைய நேரத்தை செலவிட்டார் பிரக்ஞானந்தா.

தன் வயது சிறுவர்களுடன் நேரத்தை செலவிடாமல் 64 கட்டங்களின் மேல் என் மகன் கொண்டிருந்த காதல் எனது எண்ணத்தை மாற்றியது'' என்கிறார் ரமேஷ் பாபு. வைஷாலிக்கும் பிரக்ஞானந்தாவுக்கும் சுமார் நான்கு வயது வித்தியாசம் இருக்கிறது. பிரக்ஞானந்தா செஸ் விளையாட்டின் அடிப்படையை தனது அக்காவிடம் இருந்து கற்றுக் கொண்டதாகச் சொல்கிறார், சென்னை புறநகரான பாடியில் ஒரு சிறிய வீட்டில் மிடில் கிளாஸ் வாழ்க்கை நடத்தும் ரமேஷ் பாபு.

'' போலியோவால் பாதிக்கப்பட்டதால் என்னால் பெரிய பயணங்கள் செல்ல முடியாது. எனது மனைவி நாகலட்சுமிதான் அயல்நாடுகளுக்கு எனது பிள்ளைகளை அழைத்துச் செல்வார். செஸ் விளையாட்டில் இருவரும் உள்ளூரில் நன்றாக விளையாடியதால் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று அங்கேயும் வெற்றியை குவித்து இந்திய அரசின் உதவி மற்றும் செஸ் அகாடமியின் ஏற்பாடுகளில் ஆசிய அளவிலான செஸ் டோர்னமெண்ட் விளையாட்டில் பங்கேற்றனர்.

எனது மகன் தனது திறமையிலேயே நிதி உதவியோடு அயல்நாடுகளில் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு பெற்றாலும் மகனுடன் செல்லும் எனது மனைவியின் பயண செலவுகள் உள்ளிட்டவற்றை நான் பார்த்துக்கொண்டேன். தொடக்க காலகட்டங்களில் பொருளாதார ரீதியாக சிரமமாக இருந்தாலும் வருங்கால வைப்பு நிதி உள்ளிட்டவற்றில் கடன் பெற்று சமாளித்தோம். பிள்ளையின் கனவுகளுக்கு அவை ஓர் தடையாக இருக்கக்கூடாது என எண்ணினேன்'' என விவரிக்கிறார் பிரக்ஞானந்தாவின் தந்தை.

சென்னை புறநகரில் நான்கு அறை கொண்ட ரமேஷ் பாபுவின் வீட்டில் அதிகம் இருக்கும் பொருள் கோப்பைகளே. பெரும்பாலானவை சர்வதேச போட்டிகளில் அக்காவும் தம்பியும் வென்ற கோப்பைகள். இதில் 2015 டிசம்பர்

சென்னை வெள்ளத்தில் சில கோப்பைகளை பறிகொடுத்துவிட்டதாக ரமேஷ்பாபு தந்தை கூறுகிறார். எட்டு வயதுக்குட்பட்டோர் மற்றும் பத்து வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் உலக இளம் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 2013 மற்றும் 2015 வருடங்களில் பிரக்ஞானந்தா சாம்பியன் டைட்டில் வென்றிருந்தார்.



இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே பிரக்ஞானந்தா இந்திய நாளிதழ்களில் விளையாட்டுப் பக்கங்களில் பெரிய அளவில் இடம்பிடித்துவிட்டார். ஐந்து வயதில் இருந்தே செஸ் விளையாட்டில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கியவர் கடந்த 2016—ம் ஆண்டு உலகின் யங் இன்டர்னேஷனல் மாஸ்டர் (ஐ எம்) எனும் சிறப்பைப் பெற்றார். ஹங்கேரியைச் சேர்ந்த பிரபல செஸ் வீராங்கனை ஜூடிட் போல்கரின் 27 ஆண்டுகால சாதனையான உலகின் யங் ஐஎம் எனும் சாதனையை உடைத்த பின்னர், தற்போதைய முன்னணி செஸ் வீரர் செர்கே கர்ஜாக்கினின் உலகின் யங் கிராண்ட் மாஸ்டர் சாதனையை நெருங்கி வரலாற்று சாதனை படைக்கத் தவறிவிட்டாலும் தொடர் முயற்சியால் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறார் இந்தச் சென்னை பையன்.

யங் இன்டர்நெஷனல் மாஸ்டர் எப்படி கிராண்ட் மாஸ்டர் ஆனார்?

பிரக்ஞானந்தாவுக்கு செஸ் போட்டியின் நுணுக்கங்களை கற்றுத்தந்தவர் இந்திய செஸ் அணியின் பயிற்சியாளரும் கிராண்ட்மாஸ்டருமான ஆர்.பி ரமேஷ்.

"யங் இன்டர்நெஷனல் மாஸ்டர் பட்டம் வென்றதற்கு பிறகு மூன்று தொடர்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் வெல்வதற்கான தகுதியை அடைய வேண்டும் என்பது பிரக்ஞானந்தாவின் இலக்காக இருந்தது. கிராண்ட் மாஸ்டர் பட்டம் வெல்ல வேண்டும் எனில் சில விதிமுறைகள் உள்ளன. அதன்படி குறிப்பிட்ட ரேட்டிங் மற்றும் மூன்று வெவ்வேறு தொடர்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெறுவதற்கான தகுதியை அடைந்து சான்றிதழ் பெற வேண்டும்."

"கடந்த ஆண்டு நவம்பரில் இத்தாலியில் நடந்த உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் முதல் முறையாக கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெறுவதற்கான விதிகளை பூர்த்தி செய்து சான்றிதழ் வென்றார். இரண்டாவதாக ஏப்ரல் 2018—ல் ஹெர்க்லியோன் பிஷர் நினைவு கிராண்ட்மாஸ்டர் நார்ம் டோர்னமென்ட்டில் இறுதி ரவுண்ட் ராபின் போட்டியில் வென்றதன் மூலம் இரண்டாவது முறையாக கிராண்ட்மாஸ்டருக்கான தகுதியை பூர்த்தி செய்தார். மூன்றாவது முறையாக கிரெடின் ஓப்பனில் கிராண்ட் மாஸ்டருக்கான விதிகளை பூர்த்தி செய்துள்ளார்.

மேலும் திமிஞிணி ரேட்டிங்கும் 2500க்கு மேல் வைத்துள்ளார். இதனால் கிராண்ட் மாஸ்டர் பட்டம் சாத்தியமாகியுள்ளது" என்கிறார் பயிற்சியாளர் ரமேஷ்.

பிரக்ஞானந்தாவின் பிரதான யுக்தி குறித்து கேட்டபோது "கிரிக்கெட்டை போலவே செஸ் ஆட்டத்தில் ஓபனிங், மிடில், இறுதிப் பகுதி



முக்கியமானவை. பிரக்ஞானந்தாவின் யுத்தியை பொறுத்தவரையில் நடு மற்றும் இறுதிப் பகுதியில் அவர் வலுவானவர். தொடக்கத்தில் சமாளித்துவிட்டால் ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் அவர் அசத்தலாக விளையாடுவார். அதுதான் இத்தொடர்களில் நடந்துள்ளது" என்கிறார் ரமேஷ்.

கிராண்ட் மாஸ்டர் பட்டத்தால் என்ன கிடைக்கும்?

'' செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் என்பது முனைவர் பட்டம் பெறுவது போன்றது. மிகவும் இளம் வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வெல்வது எளிதில் சாத்தியமல்ல. கடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் கார்ல்சனுடன் விளையாடிய செர்கே கர்ஜாக்கின் தான் உலகின் யங் கிராண்ட் மாஸ்டர்.

''செஸ் தொடர்களை பொறுத்தவரையில் திறந்த வகை, மூடிய வகை என இரு பிரிவு டோர்னமெண்ட் உண்டு. ஓபன் செஸ் டோர்னமென்ட்டில் உலக செஸ் கூட்டமைப்பில் இருக்கும் வீரர்களில் யார் வேண்டுமானாலும் பணம் கட்டி விளையாடலாம். ஆனால் குளோஸ்டு டோர்னமென்ட் எனச் சொல்லப்படும் தொடர்களில் குறிப்பிட்ட ரேட்டிங் பெற்ற சில வீரர்களை மட்டுமே அழைத்து போட்டி போடச் செய்வார்கள்.

கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றதால் பிரக்ஞானந்தாவுடன் விளையாடுவதற்கு உலகின் பல வீரர்களும் போட்டி போடுவார்கள். இதனால் உலகின் முன்னணி வீரராக உருவாக பிரக்ஞானந்தாவுக்கு சிறப்பான வாய்ப்புகள் அமையக்கூடும்'' என விவரித்தார் ரமேஷ்.

பிரஞ்ஞானந்தா மற்றும் வைஷாலி இருவரின் வெற்றிக்கு பின்னால் இருப்பது அவர்களது தாய் நாகலட்சுமி. '' உடல் உபாதைகளையும் தாங்கி உணவு, வெப்ப நிலை வேறுபாடுகளை பொறுத்துக் கொண்டு தொடர்ச்சியாக வெவ்வேறு நாடுகளுக்கு செஸ் டோர்னமென்ட்டுக்கு தனது பிள்ளைகளை அழைத்துச் சென்றுவருகிறார்" எனக் குறிப்பிடுகிறார் பிரஞ்ஞானந்தாவின் தந்தை.

ஒன்பதாவது சுற்றில் நெதர்லாந்தைச் சேந்த 28 வயது ப்ருய்ஜர்ஸ் ரொலாண்டையும் வீழ்த்தியுள்ளார் பிரஞ் ஞானந்தா. இத்தாலியில் இதே க்ரெடின் ஓப்பனில் இரண்டாவது முறையாக கிராண்ட்மாஸ்டர் பட்டம் வெல்வதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துவிட்டார் பிரஞ் ஞானந்தாவின் மூத்த சகோதரி வைஷாலி. மூன்றாவது முறையாக தகுதிகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் வைஷாலியும் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

இந்தியாவின் இளம் கிராண்ட் மாஸ்டர் ஆகியிருக்கும் பிரக்ஞானந்தா, செஸ் களத்தில் அக்காவை வெல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சிறு வயதில் விளையாடத் துவங்கினார். ''இப்போது அவரது குறிக்கோள் உலகின் செஸ் சாம்பியன்ஷிப். அது மிகப்பெரிய இலக்கு" என்கிறார் ரமேஷ் பாபு.

வென்றிலன் என்றபோதும்...

வெற்றியை எட்டிப் பிடிக்க முடியாத தருணங்கள் ஏற்படுவது இயற்கை. வெற்றிக்காக நடத்தும் போராட்டமே, அந்தத் தோல்வியை வெற்றிக்கு நிகரானதாக்கிவிடும். உலகக் கோப்பை செஸ் போட்டியில் உலகின் தலைசிறந்த வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்செனிடம் இறுதிச்சுற்றில் தோல்வியைத் தழுவ நேர்ந்தாலும், இந்திய நட்சத்திரமான ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா தலைநிமிர்ந்து நிற்கிறார். அவர் வெளிப்படுத்திய மன உறுதியும், பொறுமையும், சாதுர்யமும் அந்தப் பதினெட்டு வயது இளைஞரை இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்த்தி இருக்கிறது.

அஜர்பைஜானின் பாகு நகரில் உலகக் கோப்பை செஸ் போட்டிக்காக அணிதிரண்டிருந்தவர்கள்,

சர்வதேச முதல்வரிசை வீரர்கள் என்பதை நாம் உணர வேண்டும். இறுதிச் சுற்றுவரை பதற்றமே இல்லாமல், வெற்றி பெற்று பிரக்ஞானந்தா எதிர்கொண்டது யாரைத் தெரியுமா? கடந்த 12 ஆண்டுகளாக, உலக செஸ் அரங்கில் தனது முதலாவது இடத்தை நழுவ விடாமல் தக்க வைத்துக் கொண்டிருக்கும் பிரசித்தி பெற்ற வீரர் மேக்னஸ் கார்ல்செனை...

இறுதிச் சுற்றில் வழக்கமான 'கிளாசிக்கல்' ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. வேறு வழியில்லாமல், இரண்டு 'டை—பிரேக்கர்' ஆட்டங்கள் மூலம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பது என்று முடிவாகியது. மூன்றாவது நாளில் நடைபெற்ற 'டை—பிரேக்கர்' ஆட்டத்தின் இரண்டாவது வாய்ப்பின் 22—ஆவது நகர்த்தலில் 'டிரா' ஆனதால், கார்ல்சென் வெற்றி பெற்றார்.

நான்கு முறை உலக சாம்பியன் பட்டம் பெற்றிருந்தாலும், இதுவரை கார்ல்செனுக்கு உலகக் கோப்பையை வெல்ல முடிந்ததில்லை. அவரது முதல் உலகக் கோப்பை வெற்றியாக இது அமைந்தது. பிரக்ஞானந்தா இதற்கு முன்னர் மூன்று முறை கார்ல்செனை வீழ்த்தி இருந்தாலும், இந்த முறை அந்த வாய்ப்பு நழுவியது. ஆனாலும், உலகக் கோப்பை செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு இறுதிச் சுற்றுவரை வந்த பெருமைக்குரிய இந்திய இளைஞர் என்று பிரக்ஞானந்தா பெருமையடையலாம்.

இறுதிச் சுற்றை அடைவதற்கு, பிரக்ஞானந்தா பல முன்னணி செஸ் வீரர்களை வீழ்த்திய விதம், பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. உலக செஸ் தரவரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கும் ஹிகாரு நகாமுராவை நான்காம் சுற்றிலும், மூன்றாம் இடத்தில் இருக்கும் ஃபாபியானோ கருனாவை அரையிறுதிச் சுற்றிலும் தோற்கடித்தார். இறுதிச் சுற்றை எட்டியிருப்பதால், அடுத்த உலக சாம்பியனைத் தீர்மானிக்கும் 'கேண்டிடேட்ஸ்' போட்டியில் இடம்பெறும் வாய்ப்பு பிரக்ஞானந்தாவுக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த முறை உலகக் கோப்பை போட்டியில் இந்தியாவின் பங்களிப்பு மிக அதிகம். காலிறுதிச் சுற்றில் பங்கெடுத்த எட்டு பேரில் நான்கு பேர் இந்தியர்கள். அந்த நால்வரில் மூவர் இன்னும் 20 வயது பூர்த்தியாகாத இளைஞர்கள். செஸ்ஸில் உலகளாவிய அளவில் முன்னணி வீரர்களை உருவாக்கும் நாடாக இந்தியா உயர்ந்திருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது.

பிரக்ஞானந்தா மட்டுமல்லாமல், குகேஷ், அர்ஜுன் எரிகைசி, பிரீதி குஜராத்தி, நிஹால் ஜெரீன், எஸ்.எல். நாராயணன் என்று விஸ்வநாதன் ஆனந்த் வகுத்த பாதையில் பயணிக்க பல இளைஞர்கள் உயர்ந்திருக்கிறார்கள். மிகக் குறைந்த வயதில் உலக 'கிராண்ட் மாஸ்டர்' பட்டம் பெற்ற 14 வயது அமெரிக்கரான அபிமன்யு மிஸ்ரா, இந்திய வம்சாவளியினர். இவர்களில் பலரும் வருங்காலத்தில் உலக சாம்பியன்களாக, செஸ் விளையாட்டு ஆளுமைகளாக வலம் வரப்போகிறார்கள்.

மேக்னஸ் கார்ல்சென் கிராண்ட் மாஸ்டரான பின் 16 மாதங்கள் கழிந்த பிறகுதான் பிரக்ஞானந்தா பிறந்தார். அவரது மூத்த சகோதரி வைஷாலியின் 'செஸ்' ஆர்வம் அவரையும் தொற்றிக் கொண்டது. 'போலியோ'வால் பாதிக்கப்பட்ட தந்தை ரமேஷ்பாபு கொடுத்த ஊக்கமும், தாயார் நாகலட்சுமி அளித்த உற்சாகமும் வைஷாலியையும் பிரக்ஞானந்தாவையும் கிராண்ட் மாஸ்டர்களாக்கின. மிகக் குறைந்த வயதில் சர்வதேச மாஸ்டர் என்கிற சாதனை இப்போதும் பிரக்ஞானந்தாவுக்கு மட்டுமே உண்டு.

20 வயதுக்கு உள்பட்ட முதல் 100 ஜூனியர் செஸ் சாம்பியன்களில் 21 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அடுத்த கால் நூற்றாண்டில், உலக செஸ் அரங்கில் இவர்கள் கொடிதான் பறக்கப் போகிறது. இந்தியா 'செஸ்' விளையாட்டில் முன்னணி இடத்தைப் பிடித்திருப்பதற்குப் பல காரணிகள் இருக்கின்றன.

'எண்ம இந்தியா' முனைப்பால் அனைவருக்கும் இணையதளம் சென்றடைந்திருப்பது முக்கியமானகாரணம். கடந்த 12 மாதங்களில் 10,000 இந்தியர்கள் செஸ் போட்டிகளில் பங்கு பெற்றிருக்கிறார்கள். கார்ல்சென் — பிரக்ஞானந்தா இறுதிச் சுற்று விளையாட்டை 13 லட்சம் இந்தியர்கள் இணையத்தில் ஆர்வத்துடன் பார்த்தனர். செல்பேசி மூலம் பல்வேறு செஸ் விளையாட்டுத் தளங்களில் சுமார் 5 கோடி விளையாட்டுகள் இணையவழியில் நடக்கின்றன என்பது தெரியுமா? அதில் பங்கு பெறும் பலரும் இந்தியக் குழந்தைகள், இளைஞர்கள்.

செஸ் விளையாட்டு செலவில்லாதது. அதற்கான பயிற்சி வகுப்புகள் கிராமங்கள் வரை இந்தியாவில் நடத்தப்படுகின்றன. அதிக அளவில் செஸ் போட்டிகள் நிகழ்வதால், புதிய பல திறமைகள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

முதலாவது இடத்தில் இருக்கும் மேக்னஸ் கார்ல்செனை பதற்றமே இல்லாமல் எதிர்கொண்ட பிரக்ஞானந்தாவால் 'டை—பிரேக்கர்' விளையாட்டில் வெற்றிபெற முடியாமல் போயிருக்கலாம். ஆனால், அடுத்தகட்டப் பாய்ச்சலுக்கான நகர்வுதான் அது. சந்திரயானைப் போலவே, செஸ் விளையாட்டிலும் இனி இந்தியாவின் காலம்...

கட்டுரை

# தமிழே

## சிந்தனைத் தோட்டம் செழிக்கட்டும்!

கம்பன் கழகங்களும், திருக்குறள் பேரவைகளும், இவையொத்த இலக்கிய அமைப்புகளும் இல்லையென்றால், இன்றைக்குத் தமிழ்கூறு நல்லுலகு என்பது இருந்திருக்குமா என்பது ஐயமே. இன்று உலகறியத் தமிழ் உரைக்கும் இளந்தலைமுறையினருக்கெல்லாம் இத்தகு இலக்கிய அமைப்புகளே தாய்வீடு எனலாம்.

அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத ஊர்களுக்கு, கிடைக்கும் வாகனங்களில் ஏறிச் சென்று, அதுவும் இல்லாத இடங்களுக்கு நடந்தும் போய், பேசிய பொழுதுகள் மறக்க முடியுமா? மீளவும் உரிய பொழுதுக்குள் ஊர் திரும்பும்போது ஏற்பட்ட சிரமங்கள் அனைத்தும் பேசிய நிகழ்வின் கலகலப்பினால் காணாது போனதை இப்போது நினைத்தாலும் சிலிர்ப்பாய் இருக்கிறது.


தனிப்பொழிவுகளைவிட, பட்டிமண்டப நிகழ்வுகளே அப்போது அதிகம். அதில் அதிகபட்சம் இருபது மணித்துளிகளுக்கு மேல் பேச வாய்ப்பே இருக்காது. இவ்வளவு தூரம் பயணம் செய்து பேசப்போவது, இந்த இருபது மணித்துளிகளுக்காகத்தானா என்ற எண்ணம் சில நேரம் தோன்றியிருக்கிறது. கூடவே, எத்தகு உயர்வான மனிதர்களைச் சந்தித்திருக்கிறோம். அவர்களுடன் சேர்ந்து எவ்வளவு சிறப்பான கருத்துகளைச் சிந்தித்திருக்கிறோம் என்கிற உணர்வே என்னுள் ஓங்கியிருந்தது.

மேடையில் ஏறிப் பேசிய நேரத்தைவிடவும், மேடையேறும் முன்பும், இறங்கிய பிறகும் பேசிய பேச்சுகளின் நேரமும் தரமும் மிகச்சிறப்பானவை. அவற்றையெல்லாம் முறையாகக் குறித்து வைக்காமல் போனோமே என்கிற ஏக்கம் இப்போதும் எழாமல் இல்லை.

பார்வையாளர்கள் மத்தியில் இருந்து கேட்டு, நுகர்ந்து களித்த செய்திகளோடு, பயின்ற தகவல்களையும் இணைத்துப் பேசும் வாய்ப்பை அருளிய இலக்கிய அமைப்புகளுக்கு எவ்வகையில் நன்றி சொன்னாலும் தீராது.

இளமைத் துடிப்போடு, எண்ணியதையெல்லாம் சொல்லியாக வேண்டும் என்கிற வேகத்தில் பேசிய மொழிகளில் சிறுமை போக்கி, பெருமை பேணிச் செழுமைசெய்த அறிஞர்களின் திருவுருவங்கள் என் மனக்கண்முன் எழுந்தன. சான்றோர் பலருடன் இருந்து உரையாடிய, அரங்குகளில் ஏறி முழங்கிய நினைவுகள் சுழன்றன. இல்லப்பணிகளுக்கு இடையே அலுவலகப் பணிகளையும் ஆற்றி அரங்கேறிய இல்லத்தரசிகள் பலர், இலக்கிய அரசியர்களாகித் தாய்மை உணர்வோடு பேசிய நினைவுகள் உடன் மலர்ந்தன.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மேடைபோட்டு, பந்தலிட்டு, ஊர் கூட்டி, விருந்து வைத்துப் பேச வைத்த அமைப்பாளர்கள் பலர் பேச்சாளர்கள் அல்லர்; பெருந்தனவந்தர்கள் அல்லர். ஆனால், செவிச்செல்வம் நிறையப் பெற்றவர்கள்; நுண்ணிய நூல் பல கல்லாதவர்கள்






கிருங்கை சேதுபதி


ஆயினும், திண்ணிய நெஞ்சம் வாய்த்த தெளிந்த நல்லறிவினர்; பலர் சொல்லிய பாடங்களை, சிந்தையில் நிறுத்திவைத்திருந்த சீலர்கள்.


தம் வீட்டுத்தேவைகளில் கூட, இவ்வளவு அக்கறையோடு முனைந்துசெயல்பட்டிருப்பார்களா என்று தெரியாது. பொதுநிகழ்வுகளை அவற்றுக்கும் மேலான சீர்மையோடு அமைப்பதில் வல்லவர்கள். தங்கும் இடம், உண்ணும் உணவு, ஒலிபெருக்கி வசதி என அனைத்தையும் சரியாகக் கணக்குப் போட்டு நடத்தத் தெரிந்த அவர்களுக்கு, கடைசியில் கையைக் கடிக்கும் நட்டத்தொகையை ஈடுகட்ட மட்டும் தெரியாது. கைத்தொகையால் கணக்கை நேர் செய்வர். அவர்களின் தியாகங்களில் மிளிர்கிறது மேடைத்தமிழ்.


நேரில் வந்து கேட்க முடியாதவர்களுக்கெல்லாம் செவிநுகர் கனிகளாக இல்லங்களில் கொண்டுவந்து அன்று பரிமாறியவை வானொலி நிலையங்கள். அந்த வசதியும் இல்லாதவர்களுக்கு, உரிய செய்திகளைத் திறம்படத் தொகுத்து வழங்கின நாளேடுகள்.

நூலகங்கள் இல்லாத ஊர்களின் வாசகசாலைகளாக முடிதிருத்தகங்களும் தேநீர்க்கடைகளும் இருந்து அத்தேவையை நிறைவு செய்தன. அந்தச் செய்திகளை, உரத்தக் குரலில் பேசுபவர் போலவே ஒருவர் படிக்கப் பலரும் இருந்து கேட்கப் பார்த்திருக்கிறேன்; ஒலிபெருக்கி இல்லாமல், உயர்ந்த மேடையில்லாமல், அந்த வாசிப்பாளர், சொற்பொழிவாளராகவே, உருமாறியிருக்கிற அழகை இரசித்திருக்கிறேன்; சில சமயங்களில் நானே அந்தப் பாத்திரம் ஏற்றிருக்கிறேன்.

பேச்சாளர்கள், அவர்களைப் பேசவைக்கும் அமைப்பாளர்கள், இருவருக்கும் தூண்டுகோல்களாக இருக்கும் கேட்பாளர்கள் என்கிற முக்கூட்டு அமைப்பில் எழுந்த இந்நல்லுறவு எத்துணை மகத்தானதாக இருந்தது என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.






கருத்தளவில் எத்தகு முரண்பாடுகள் இருந்தாலும் அவை நாகரிகம் பிறழாமல் கண்ணியம் காத்திட்ட புண்ணிய சீலர்கள் அல்லவா, அவர்கள்? பெரியார் ஈ.வெ.ரா.வையும், குன்றக்குடி அடிகளாரையும் ஒரே மேடையில் ஏற்றிப் பெருமை கொண்டது தமிழ் அல்லவா? அவர்களின் உயிரனைய பொழுதுகள் இந்த உயர்கலைக்காகச் செலவானதன் பயன் யாது?




எல்லாத் துறைகளிலும் இருக்கிற கசடர்கள் இத்துறையிலும் இல்லாமல் இல்லை. அவர்களையெல்லாம் கடந்து ஆக்கபூர்வமாகச் செயல்படும் உத்வேகத்தை, கிருபானந்தவாரியார், குன்றக்குடி அடிகளார் ஆகிய பெருமக்களின் அருள்திறத்தால் பெறவும் முடிந்தது.


செவிகள் பழுதானாலும் தன் செம்முழக்கத்தால், திருவள்ளுவரின், இளங்கோவடிகளின், பாரதியின், கம்பனின், ஷெல்லியின், ஷேக்ஸ்பியரின் கவிகள் பழுதாகாமல், கேட்போர் உளங்களில் நிறைத்த தோழர் ஜீவாவின் சீரிய பணியை, மணிமணியான கருத்துகளை, பல மணிநேரம் ஓய்வு ஒழிதல் இன்றி, ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகுற மொழிந்த எஸ்.ஆர்.கே. என்னும் எஸ். இராமகிருஷ்ணனை மறக்க முடியுமா?

அரசியல் பேசினாலும் ஆணித்தரமான கருத்துகளை எடுத்துரைக்க உலகியல் சிந்தனையாளர்களை முன்வைத்து மொழிந்த தேசிய, திராவிட இயக்கத் தலைவர்களை, அவர்களின் உந்தாற்றலால் பேச்சையே தொழிலாகக் கொண்டெழுந்த சொற்பொழிவுக் கலைஞர்களை, கல்விப் பணியோடு களம் இறங்கிச் சொல்லாடல் புரிந்த பள்ளிப் புலவர்களை, கல்லூரி, பல்கலைக் கழகப் பேராசிரியர்களை, பாடியும், நடித்தும், நடந்தும் காட்டிய சீலர்களை, எழுத்தையும் பேச்சையும் இணைத்துச் செயற்படுத்தி இயங்கிய இலக்கியவாதிகளை, நன்றியோடு நினைவுகூராமல் இருக்க முடியுமா?

பட்டிதொட்டியெங்கும் திருக்குறள் பரவியது; கம்பராமாயணம் கால்கொண்டது; இளங்கோவடிகள் எழுச்சி பெற்றார்; ஷெல்லியும், ஷேக்ஸ்பியரும், மில்டனும், ஹோமரும், கம்பனுடனும் பாரதியுடனும் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்; சமயம் கடந்த சமுதாயப் புனரமைப்பில், ஆழ்வார்களும், நாயன்மார்களும் செய்திருக்கும் அரும்பணிகள் ஆராயப்பெற்றிருக்கின்றன; வள்ளற்பெருமானும், அருணகிரிநாதரும், கச்சியப்பரும், போற்றப்பெறுகிறார்கள்; பேதம் கடந்த பேரன்பில் திளைக்கப் பல்வேறு சமய, சமயச்சார்பற்ற இலக்கியங்கள், தமிழின் ஒலியேற்றுச் செவிநுகர்கனிகளாகிக் கேட்போர்க்கு உதவின.

பண்டைத் தமிழ் இலக்கியத்துப் பட்டிமண்டபத்தைப் புதுமையாக்கிக் கம்பனை ஆராயக் களம் அமைத்தவர் கம்பன் அடிப்பொடி சா. கணேசனார்; கழகம் தோற்றுவித்தவரும் அவரே. அம்முயற்சி இன்று உலக அளவில் பரந்துபட்டு நிற்கிறது என்றால், அதற்கு உற்றுழி உதவி, நற்றுணையானவர்கள் எவ்வளவு பேர்? அதற்கும் முன்னதாகத் தென்காசியில் திருவள்ளுவர் கழகம் அமைத்துத் திறம்படச் செயல்பட்ட அமரர் சிவராமகிருஷ்ணனின் அரும்பணியை மறக்கப்போமா?

மகாகவி பாரதி பெயரில் தோன்றிய




மகத்தான அமைப்புகள் பல, ஊர்கள்தோறும் உருவாகியிருக்கின்றனவே. சங்கப்புலவர்களின் செந்நாப்புலமையை எடுத்துரைக்கும் பறம்புமலைப் பாரிவிழாவும், இடையீடின்றி நடக்கும் திருக்கோவலூர்க் கபிலர் விழாவும் ஏற்படுத்திய தாக்கங்கள் என்றும் போற்றத்தக்கன அல்லவா?

பழங்காலத்துத் தமிழ்ச்சங்கங்கள், தற்காலத்துத் தமிழ்ச்சங்கங்களாக, தமிழ்ப்பேரவைகளாக உலகமெங்கும் இப்போது புத்துயிர்ப்பெய்தி இருக்கின்றனவே. அவற்றின் பணிகள் எல்லை கடந்தவையல்லவா?

இத்தகு இலக்கிய அமைப்புகளால், பேச்சளவில் உருவாகிக்காற்றில் கலந்த பல அரிய கருத்தாக்கங்கள், கட்டுரைகளாக்கப்பட்டிருக்கின்றன; அவை மலர்களாக வெளியிடப்பெற்றிருக்கின்றன. அறக்கட்டளைப் பொழிவுகள், ஆக்கபூர்வமான ஆய்வு நூல்களாகித் தமிழுக்கு அணிசேர்த்து வருகின்றன; காட்சி, ஊடகப் பதிவுகளாகி நிலைபெறுகின்றன.

சாதி, சமய, இன, வேறுபாடு கடந்து மனிதப் பேருணர்வு நிலைபெற, இத்தகு இலக்கிய அமைப்புகள் முன்னெடுத்த செயற்பாடுகள் இன்னும் ஆராயப்படாமல் இருக்கின்றன; இவற்றின் இன்றியமையாப் பயன்கள் பலரின் கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டன. காட்சி ஊடகங்களில் செலுத்துகிற கவனம், நிகழ்த்துகலையாக அமையும் பேச்சரங்குகளின்பால் குவியவில்லை. கூட்டம் குறைகிறது; செலவு கூடுகிறது; நாட்டம் குறைவதால், அரங்க நிகழ்வுகளின் நல்தரம் சிதைகிறது.




பள்ளிக் கூடங்களைப் போலவும், பல்கலைக்கழகங்கள் போலவும், படித்தவர்களோடு பாமரர்களும் அறியத் தமிழைச் ‘சொல்லிக் கொடுத்த’ இத்தகு அமைப்புகள் பல, இப்போது, உரிய புரவலர்கள் இன்றித் தடுமாறுகின்றன; செயல் திறம் குன்றி மறைந்துவருகின்றன; செவிக்கு உணவோடு, சிறப்பாக வயிற்றுக்கும் உணவிடப் பொதுமக்களிடம் நிதிதிரட்டி, வாடகைக்கு மண்டபம் எடுத்து நிகழ்ச்சிகள் நடத்திட அரும்பாடுபடுகின்றன.

இந்நேரத்தில் இத்தகு இயக்கங்கள் முடங்கிவிடாமல் செயல்பட என்ன செய்யப்போகிறோம் என்கிற கவலை எழுகிறது. செவிநுகர் கனிகள் சிந்தும் சிந்தனைத் தோட்டங்களாகிய இலக்கிய அமைப்புகளை நாளும் நலிய விடுதல் நன்றா?

இயன்ற வரையில் இத்தகு அமைப்புகளோடு இணைந்து செயல்படுவது நமக்கு மனநிறைவு தந்தாலும், இலக்கிய அமைப்புகள் சீரிளமைத் திறம் குன்றாது செயல்பட அரசும், அரசுசார் நிறுவனங்களும் துணைநிற்க வேண்டியது இன்றியமையாதது என்று சொல்லவும் வேண்டுமா?

# சாதுர்யம்

## இந்தியாவில் சீன நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடு தளருமா?

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோதி ஆகியோருக்கு இடையேயான சந்திப்புக்குப் பிறகு, லடாக்கில் உள்ள Line of Actual Control—க்கு (எல்.ஏ.சி) அருகில் ராணுவத் துருப்புகளை குறைக்கவும், எல்லையில் பதற்றத்தைக் கட்டுப்படுத்தவும் இரு நாடுகளும் முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளன.

லடாக்கின் கால்வன் பள்ளத்தாக்கில் 2020—ஆம் ஆண்டு ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு, எல்லையில் பதற்றமான சூழல் தொடர்வதால், எல்.ஏ.சி.யின் இருபுறமும் ஆயிரக்கணக்கான வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த மோதலுக்குப் பிறகு, கிழக்கு லடாக்கில் எல்லைக்கு அருகே, நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தூரத்திற்குப் பல இடங்களில் இந்தியா தனது பிரதேசமாகக் கருதும் பகுதிகளுக்குள் சீன இராணுவம் நுழைந்தது.



சீன அதிபர் ஷி ஜின்பிங்கும், பிரதமர் மோதியும் கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசியிருந்தாலும் அது ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்பு குறித்து இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் க்வாத்ரா வியாழக்கிழமை மாலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். வினய் க்வாத்ரா கூறுகையில், "சீன அதிபர் ஷி பின்பிங் உடனான தனது சந்திப்பில், லடாக்கில் உள்ள இந்தியா—சீனா எல்.ஏ.சி.யின் சர்ச்சைக்குரிய விஷயங்கள் குறித்து பிரதமர் மோதி தனது கவலையை தெரிவித்தார்," என்றார். அவர் மேலும் கூறுகையில், "இந்தியா மற்றும் சீனா இடையேயான உறவை சீராக்க, எல்லைப் பகுதியில் அமைதியை மீட்டெடுப்பது அவசியம் என்றும், எல்.ஏ.சி—யை முழுமையாகக் கடைபிடிப்பதும், மதிப்பதும் அவசியம் என்றும் பிரதமர் மோதி கூறினார்," என்றார்.

மேலும்,எல்.ஏ.சி.யில் இருந்து துருப்புகளை திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்தவும், பதற்றங்களை முடிவுக்குக் கொண்டுவரவும் அந்தந்த நாடுகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க இரு தலைவர்களும் முடிவு செய்ததாகவும், இந்திய வெளியுறவுச் செயலாளர் கூறினார். இந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்த உடனே, கடந்த வாரம் இரு நாட்டு ராணுவ உயர்மட்ட ராணுவ ஜெனரல்களுக்கு இடையே இரண்டு நாள் பேச்சுவார்த்தைகள் நடந்தன

### சீன அறிக்கை கூறுவது என்ன?

இதற்கிடையில், பெய்ஜிங்கில் கடந்த வெள்ளிக்கிழமை சீன வெளியுறவு அமைச்சகத்தின்

# பேசாதே

## வகீல் அக்தர்



செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், பிரதமர் மோதி வேண்டுகோளின் பெயரில் சீன அதிபர் ஷி ஜின்பிங் இந்தச் சந்திப்பை நடத்தியதாகக் கூறப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின்படி, "சீனா— இந்தியா உறவுகளின் தற்போதைய நிலைமை மற்றும் பரஸ்பர நலன்களின் பிற அம்சங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆழமான மற்றும் வெளிப்படையான உரையாடலை நடத்தினர். இரு நாடுகளும் தங்கள் பரஸ்பர உறவுகளின் நலன்களை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இரு நாடுகளும் எல்லையை மதிக்க வேண்டும் எனவும் அதிபர் ஷி ஜின்பிங் கூறினார்."

மேலும், பிராந்தியத்தில் அமைதியை உறுதிப்படுத்தும் வகையில் சர்ச்சை ஒன்றிணைந்து தீர்க்கப்பட வேண்டும் என்றும் இரு நாட்டுத் தலைவர்கள் பேசியதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. கடந்த ஆகஸ்ட் 13 மற்றும் 14 தேதிகளில் லடாக்கில் நிலவும் எல்லைப் பிரச்சனை மற்றும் பதற்றத்தை முடிவுக்கு கொண்டு வர இரு நாட்டு ராணுவ தளபதிகளுக்கு இடையே நடந்த பத்தொன்பதாவது சுற்று பேச்சு வார்த்தையில் எந்த வெற்றியும் கிடைக்காத நிலையிலேயே இரு தலைவர்களின் இந்த சந்திப்பு நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்த உடனே, கடந்த வாரம் இரு நாட்டு ராணுவ உயர்மட்ட ராணுவ ஜெனரல்களுக்கு இடையே இரண்டு நாள் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இது வழக்கத்திற்கு மாறான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எந்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை. ஜி20 — முக்கியத்துவம் வாய்ந்த ஜின்பிங்கின் இந்தியப் பயணம். ஆனால் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ், பெயரிடப்படாத இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி, உயர்மட்ட இராணுவத் தளபதிகள் சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதிகளான டெப்சாங் மற்றும் டெம்சௌக்கில் படிப்படியாக துருப்புகளைக் குறைக்க திட்டமிட்டுள்ளனர்,

என்று கூறியிருந்தது. ஆனால் இதற்கு அரசியல் தலைமையின் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றனர்.

செப்டம்பர் 9 மற்றும் 10—ஆம் தேதிகளில் நடைபெறும் ஜி20 மாநாட்டில் கலந்து கொள்ள அதிபர் ஷி ஜின்பிங் டெல்லி வருகிறார் என்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது. லடாக்கில் உள்ள எல்.ஏ.சி.யில் இருந்து துருப்புகளை திரும்பப் பெறும் முடிவு எட்டப்பட்டிருந்தால், ஷி ஜின்பிங் இந்தியா வருவதற்கு முன்பு அறிவிக்கப்படும் வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். லடாக்கின் உண்மையான நிலவரத்தை மோதி அரசு மறைப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. சீன வீரர்கள் எல்.ஏ.சி.யில் இந்தியாவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மறுபுறம், சீனாவுடனான பதற்றம் குறித்த கேள்விக்கு அரசாங்கம் பொதுவாக மௌனம்தான் காத்து வருகிறது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். எல்லைப் பிரச்னைக்குப் பிறகு சீனாவுடனான இந்தியாவின் வர்த்தக உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் சீன நிறுவனங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வகையில், முதலீடுகளை அங்கீகரிக்க தனி அரசு குழு ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் ஏற்கனவே இயங்கி கொண்டிருந்த பெரிய சீன நிறுவனங்களுக்கு, அவற்றின் விரிவாக்கத்திற்காகவும், அதிக மூலதனம் முதலியவற்றை முதலீடு செய்யவும் நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டன. சீன நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் நிபுணர்கள் விசா பெறுவதில் நிறைய சிரமங்களை எதிர்கொண்டனர். சீனப் பொருட்களின் இறக்குமதிக்கு அதிக வரி விதிக்கப்பட்டது. ஆனால் ஜோஹன்னஸ்பர்க்கில் நடந்த சந்திப்புக்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையிலான பதட்டமான உறவுகள் சுமூகமாகும் வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு நடக்கும் பட்சத்தில், இந்தியாவில் சீன நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமா என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

இரு நாடுகளும் எல்லைப் பதற்றத்தை தற்காலிகமாகக் குறைத்தாலும், கிழக்கிலிருந்து மேற்கு வரையிலான எல்லைப் பிரச்சினைக்கு ஒரு கட்டத்தில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த நீண்ட காலப் பிரச்னை இரு நாடுகளுக்கும் பெரும் சவாலாக இருப்பதாகவும், இது அவ்வப்போது பிராந்தியத்தில் பதற்றம் வடிவில் தோன்றும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். 'பேச்சுவார்த்தை சாதகமான அறிகுறி' இந்த நேரத்தில் நடக்கும் எதையுமே சாத்தியக்கூறுகள் மற்றும் எதிர்பார்ப்புகளாகவே பார்க்க வேண்டும் என்கிறார் சீன விவகாரங்களில் நிபுணரான அல்கா ஆச்சார்யா.

“களத்தில் மாற்றம் ஏற்படும் வரை எந்த முன்னேற்றமும் நடந்ததாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்த நேரத்தில் இந்தியாவின் கோரிக்கைகளுக்கும் சீனாவின் நிலைப்பாட்டிற்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது,” என்கிறார் அவர். இருப்பினும், இருநாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தை சாதகமான அறிகுறி என்று கூறிய அவர், “இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டால் மட்டுமே எல்லைப் பிரச்னைக்கு தீர்வு காண முடியும்,” என்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய பதற்றமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஜோஹன்னஸ்பர்க்கில் சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் இந்தியப் பிரதமர் மோதி இடையேயான சந்திப்பு நிச்சயமாக சாதகமான அறிகுறி என்று டெல்லி பல்கலைக்கழகத்தின் சீன விவகாரங்களின் பேராசிரியரான ரிதுஷா திவாரி கூறுகிறார்.

“லடாக்கில் எல்லைப் பிரச்னையைத் தீர்க்க ராணுவ மட்டத்தில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில், ஆகஸ்ட் மாதப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இருபுறமும் சாதகமான அணுகுமுறை வெளிப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது,” என்கிறார் அவர். “செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் தில்லியில் நடைபெறும் ஜி—20 மாநாட்டின் போது சீன அதிபர் மற்றும் இந்தியப் பிரதமர் இடையேயான சந்திப்பு நடைபெறுவதும் முக்கியம். இது நடந்தால், அது ஒரு முன்னேற்றமாக கருதப்படும்,” என்கிறார் அவர்.

கால்வன் பிரச்னை மற்றும் கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, உலக அளவில் சீனாவுக்கு எதிராக நிலவும் எதிர்மறையான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்று டாக்டர் ரிதுஷா கூறுகிறார். இதில் இந்தியா முக்கியப் பங்காற்றுகிறது. கால்வனுக்கு முன், இந்தியா சீனாவுக்கு எதிராக இருக்கவில்லை.

சீனாவின் பொருளாதாரம் தற்போது கடினமான காலத்தை எதிர்கொண்டிருக்கிறது என்று அவர் கூறுகிறார். “இந்தியாவுடனான எல்லைப் பிரச்னையைச் சீனா உடனடியாக முடித்துக் கொண்டால், இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றம் முடிவுக்கு வரும். இந்தச் சூழல் சீனாவுக்கு பொருளாதார ரீதியாக சாதகமாக அமையும்,” என்கிறார் அவர்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा




## 39. நரிகளை விரட்டிய பரி!

**கொற்றவன்**

பொதிகை மலை அடிவாரத்தின் அடர்ந்த கானகத்தின் வழியே ஒரு தேர் செல்லக்கூடிய அளவுக்கு விசாலமாய் நீண்டிருந்தது பாதை.

இருமருங்கிலும் நிற்கும் பெருமரங்கள், சூரியனின் கதிர்கள் தரையில் விழாமல் மூடி மறைத்ததால், பகலிலேயே பயமுறுத்துவதாகவே இருந்த அவ்வழித்தடத்தில் அதிக சத்தமில்லாமல் குதிரையைச் செலுத்திய மூன்று குதிரை வீரர்களில், நடுநாயகமாக வழிநடத்திய வீரன் மதியொளி!

அவனுக்கு பக்கவாட்டின் இருபுறமும் தித்தனும் செழியனும் வந்து கொண்டிருந்தார்கள்.

“மதியொளி! இங்கே இப்படியொரு சதியாலோசனை நடக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை!” என்ற தித்தனுக்கு உடனடியாக மறுமொழி பகர்ந்தான் செழியன்.

“ஏன்? உனக்கு முசிறியை விட்டுவிட்டு இந்த வழித்தடத்தில் வேலை இருக்கிறதே என்ற கவலையா??”

“உன்னைப் போல் முசிறியில் மட்டுமே சுற்றிக் கொண்டிருந்தவன் நான் என நினைக்கிறாயா?”

“பிறகென்ன? சேர, சோழ, பாண்டிய நாடு முழுதுமா சுற்றி வந்திருக்கிறாய்?”

“அந்தளவுக்கு இல்லாவிடினும், இந்த பொதிய மலையைப் பலமுறை வலம் வந்தவனப்பா நான்!”

“நீ வலம் வந்த இலட்சணம்தான் உன் வாயாலேயே இப்போது வெளிப்பட்டு விட்டதே!”

அவர்களின் சலசலப்பு கண்டு சற்றே முறைத்தான் மதியொளி!

“சற்றுநேரம் அமைதியாக இருங்கள்! நாம் மிகவும் நெருங்கி வந்துவிட்டோம்! இப்படி இடப்புறம் வாருங்கள்” என்றவன், அடர்ந்த மரங்களிடையே பிரிந்த ஒரு ஒற்றையடிப் பாதை வழியே குதிரையைத் திருப்பினான்.

சாலையிலிருந்து சற்று உள்ளடங்கி அடர்வனமாக இருந்தபடியால் அதனூடே குதிரையைச் செலுத்தியவர்கள், உயர்ந்த ஓர் வாகை மரத்தினருகே வந்ததும் நின்றனர்.

குதிரையினின்று கீழே குதித்த மதியொளி, “இதோ, இங்கிருந்து பார்த்தால், அதோ… உயர்ந்த அரசமரத்தின் கிளையொன்று தெரிகிறது பாருங்கள்!” எனக் கூற, குதிரை மீதிருந்து கீழே இறங்கியவர்கள், அவன் கைகாட்டிய இடத்தைக் கூர்ந்தனர்.

“ஆம்! தெரிகிறது!” என்றனர் ஒருமித்த குரலில்.

“அங்குதான் இதோ இந்த ஒற்றையடிப் பாதை போகிறது. தித்தா! நீ அந்த மரத்தின் கிளைக்குத்தான் சென்று பதுங்கவேண்டும்! அங்கிருந்து பார்த்தால்


இங்கே செழியனின் பார்வைக்கு நீ தெரிய வேண்டும்! செழியா... நீ இங்கேயே இருந்து குதிரைகளைக் கவனித்துக் கொள்!"

"என்னப்பா இப்படி திடுதிப்பென்று என்னைக் காட்டுக்குள் விட்டுவிட்டு கிளம்புகிறீர்கள்?"

"நாம் என்ன இங்கே விருந்துண்ணவா வந்தோம்? வேட்டையாட...." என்றான் தித்தன்.

"உன் வேடிக்கை இருக்கட்டும். வேட்டையை அவர்கள் ஆடிவிடாமல் கவனமாக இரு! அதுவே போதும்!" என்றான் செழியன்.

"சரி, கவனம்! நாங்கள் வருகிறோம்" என்றபடி மதியொளியைத் தொடர்ந்து நடந்தான் தித்தன்.



அந்த அடர்வனத்தின் நடுவே நீண்ட பாதையில் நடந்த இருவரும் சற்றைக்கெல்லாம் கோயில் மண்டபத்தின் பக்கவாட்டுக்கு அருகில் உள்ள ஒரு ஆலமர மறைவை வந்தடைந்தனர்.

"நீ கோயிலைச் சுற்றிவந்து அதோ... அந்த அரசமரத்தின்மீது கவனமாக ஏறிக் கொள்! நான் இந்த ஆலமரத்தின் மீதிருந்தபடி உள்ளே என்ன நடக்கிறது என்று கவனிக்கிறேன். நாம் சைகையில் பேசிக் கொள்ளலாம்!" என்ற மதியொளியின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து அங்கிருந்து அகன்றான் தித்தன்.

அந்த மண்டபத்தை ஒட்டி இருந்த நெருக்கமாகப் பல மரங்கள் இருந்ததால், அந்தக் கோயிலும் மண்டபமும் சட்டென எவர் பார்வைக்கும் படாதபடி அந்த வழித்தடத்தில் மறைந்தே இருந்தது.

ஆலமர மறைவில் சிறிது நேரம் மறைந்து நின்று கவனித்தான் மதியொளி. அங்கே மண்டபத்தின் வாசலில் முதுகு காட்டியபடி இருவர் அமர்ந்திருப்பதும், யாரையோ எதிர்பார்த்தபடி இருப்பதும் புரிந்தது. அடிமேல் அடிவைத்து மரத்தின் மீது ஓசைபடாமல் ஏறியவனின் பார்வைக்கு இப்போது சிதிலமடைந்திருந்திருந்த கோயிலின் உட்புறமும், மண்டபத்தின் தாழ்வறையும், முகப்பில் அமர்ந்திருப்பவர்களும் தெளிவாகத் தெரிந்தனர்.

சற்றைக்கெல்லாம் அரசமரத்தின்மீது ஏறிய தித்தனும் மதியொளியின் பார்வைக்கு நன்றாகத் தெரிதான். இருவரும் கண்காணிப்பதை சைகையில் உறுதிபடுத்திக் கொண்டனர்.

அப்போது தித்தன் தன் பார்வையில் பட்டதைக் குறித்து மதியொளிக்கு சைகையில் கூறினான்.

'நீ இருக்கும் மரத்தின் அருகே மண்டத்தின் ஒரு அறையில் கைகால்கள் கட்டப்பட்டு ஒருவர் கிடக்கிறார்! கவனி!' என்பதுதான் தித்தன் சைகையில் தெரிவித்தது.

அதைக் கேட்டதும் அவனுக்கு ஏதோ பொறி தட்டியது. அதேவேகத்தில் ஓசைப்படாமல் மரத்திலிருந்து இறங்கி அந்த மண்டபத்தின் சிதிலமடைந்திருந்த சாளரம் வழியே உள்ளே எட்டிப் பார்த்தான்.

அங்கே ஒரு முதியவர் கைகால்கள் பின்னே கட்டப்பட்டு வாயில் துணி திணிக்கப்பட்டு மயங்கிக் கிடந்தார். அதைக் கண்டு அதிர்ந்தவன், மண்டபத்து முகப்பில் இருந்தவர்களை நோட்டமிட்ட பின், தன்னை அவர்கள் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்துகொண்டு ஓசைப்படாமல் அந்தச் சாளரத்தின் வழியே அறைக்குள் இறங்கினான்.



முகப்பில் அமர்ந்திருந்தாலும் அவ்வப்போது அவர்கள் திரும்பி உள்ளே பார்த்துக் கொண்டனர். ஆனாலும் உள்ளே மதியொளி, அந்தப் பெரியவரை நெருங்கி உலுக்கி, அவரை நிதானத்துக்குக் கொண்டு வந்து ஓசை எழுப்பாதபடி சைகை செய்து, அவரது கைகால் கட்டுக்களை மெதுவாக அவிழ்க்கத் தொடங்கினான். இடையிடையே அவர்கள் தன்னைக் கவனிக்கிறார்களா என்பதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை!

விறுவிறுவென கட்டுக்களை அவிழ்த்து விட்டு, அவரை முற்றிலுமாக விடுவித்த பின், முதியவர் சாளரம் வழியே வெளியேற உதவினான்.

இருவரும் அங்கிருந்து வெளியேறுவதை தித்தன் மரத்தின் உச்சிக் கிளையில் இருந்தபடி பார்த்து அதிசயித்தான்.

ஒருவழியாக அவ்விருவரும் ஆலமரத்தின் மறைவில் இருவரும் வந்து நின்றபின் சற்றே ஆசுவாசமாயினர்.

"ஐயா, ஆபத்து ஒன்றுமில்லையே! எப்படி இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டீர்கள்?" என்றான் மதியொளி.

"எப்படியோ அவர்களுக்கு என் மீது ஐயம் வந்துவிட்டது. நான் இங்கே காளி கோயிலில் வழிபட வந்தவன் என்று சொல்லியும் அவர்கள் நம்பவில்லை! நான்தான் இங்கு அவர்களது வருகையை ஒற்றர்கள் மூலமாகத் தெரிவிக்கிறேன் என்ற ஐயத்தால் என்னைக் கட்டிப் போட்டுவிட்டு மற்றவர்கள் வரும்வரை காத்திருக்கின்றனர். சரியான சமயத்தில் நீ வந்து என்னைக் காப்பாற்றினாய்! இல்லையானால் என் விதி இன்றோடு முடிந்திருக்கும்" என முதியவர் கூறும்போதே, தித்தனின் மீதும் ஒரு கண் வைத்திருந்த மதியொளி பரபரப்படைந்தான்.

தித்தன், அவ்வழியே நால்வர் வருகிறார்கள் என்பதை சைகையில் உணர்த்தியதைக் கண்டான் மதியொளி.

"ஐயா, நமது கதையைப் பிறகு பேசிக் கொள்ளலாம். இப்பொழுது இங்கே அவர்கள் எதிர்பார்த்திருந்தவர்கள் வருகிறார்கள். வந்ததும் அவர்கள் உங்களைத் தேடுவார்கள்! இனி நீங்கள் இங்கிருப்பது உசிதமல்ல! நடப்பவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்! முதலில் இங்கிருந்து விரைவாக கிளம்புங்கள்! இந்த ஒற்றையடிப் பாதை வழியே சென்றால் ஒரு வாகைமரம் இருக்கிறதல்லவா? அங்கே என் நண்பன் குதிரையுடன் காத்திருக்கிறான். அதில் ஒரு குதிரையைப் பெற்றுக் கொண்டு உடனடியாக உங்கள் மலைக்கிராமத்துக்குச் செல்லுங்கள். நாங்கள் அங்கு வந்து குதிரையைப் பெற்றுக் கொள்கிறோம். ம்!.. கிளம்புங்கள்!" எனப் பரபரத்த மதியொளியின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுப் பெரியவர் கிளம்பினார்.

"மதி!... அவர்கள் படுபாதகர்களாக இருக்கிறார்கள்! கவனம்!" என்றவர் அங்கிருந்து சந்தடியின்றி மரங்களின் மறைவில் பதுங்கிப் பதுங்கி நடந்து அந்த இடத்தை விட்டு மறைந்தார்.

மதியொளி விறுவிறுவென மரத்தின் மீதேறி அவர்களின் பார்வை படாதவாறு மரக்கிளையில்

அமர்ந்தவாறு எதிரே தெரிந்த அரசமரத்தின் மீதிருந்த தித்தனை நோக்கி 'பெரியவர் ஆபத்தின்றி தப்பிவிட்டார்!' என்பதைச் சைகையில் தெரிவித்தான்.

இதனிடையே அந்த மண்டபத்தை வந்தடைந்த நால்வரைக் கண்டதும், முகப்பில் அமர்ந்திருந்த இருவரும் எழுந்து நின்று வரவேற்றனர். எழுந்து நின்றவர்களின் முகத்தை தித்தனால் இப்போது பார்க்க முடிந்தது. அவர்கள் சேரநாட்டின் அதியன், பொறையன்.

வந்தவர்களோ, செங்கண்ணன், இளங்குமரன், சகாதேவன் ஆகிய மூவரும் மதியொளி முன்பே அறிந்தவர்கள்தான்!

அவர்கள் பேசுவது மரங்களின் மீதிருந்தவர்களுக்கு மெலிதாகவே கேட்டாலும், பேசுவது இன்னதென்று விளங்கவே செய்தது.

"இங்கு நமது சந்திப்பு குறித்து ஒற்றறிந்து சொன்னவனை நாங்கள் பிடித்து விட்டோம்!" எனப் பரபரத்தான் அதியன்.

"அப்படியா? நல்லவேலை செய்தீர்கள்!" என்றான் செங்கண்ணன்.

"உள்ளேதான் கட்டிப் போட்டு வைத்திருக்கிறோம்!" என்றான் பொறையன்.

"விவரம் போதவில்லை உங்களுக்கு! நம் ரகசியம் அறிந்தவனை விட்டு வைக்கலாமா? இந்நேரம் கணக்கைத் தீர்த்திருக்க வேண்டாமா?"

"இல்லை நீங்கள் வந்த பின்..." அதியன் வார்த்தையை முடிப்பதற்குள், "சரி!சரி வாருங்கள்!.." என மண்டபத்துக்குள் விரைந்த செங்கண்ணனைத் தொடர்ந்து அனைவரும் நடந்தனர்.

உள்ளே நுழைந்த வேகத்தில் நாலாபுறமும் பார்வையை ஓட்டிய செங்கண்ணன் "எங்கே? எங்கே அவன்?" என உறுமினான்.


உள்ளே நுழைந்த அதியனும், தொடர்ந்து வந்த பொறையனும் அதிர்ச்சியில் சிலையாகினர்.

"இங்கே தான்... என்றபடி கைகாட்டிய அதியன், " அட! எப்படி... மறைந்தான்?" அதற்கு..." எனத் தடுமாறினான்.


"வாய்ப்பே இல்லையே! கட்டுண்டவன் எப்படி?" என வார்த்தையை பொறையன் முடிக்கவில்லை, அதற்குள் உக்கிரமாய் உறுமினான் செங்கண்ணன்.

"மடையர்களே!.. கட்டிப்போட்டவனைக் காணவில்லை என்று கதையா சொல்கிறீர்கள்?"

"ஏற்கெனவே அவனுக்கு நம்மைப் பற்றித் தெரியும் என்றால், இனியும் இங்கு நாம் இருப்பது சரியல்ல" எனப் பரபரத்தான் சகாதேவன்.



“ஆம்! தப்பித்துச் சென்ற கிழவன் இங்கே மலைக்கிராமத்து மக்களைத் திரட்டிக் கொண்டு வந்து நம்மைப் பிடித்துவிடவும் வாய்ப்பிருக்கிறது. நாம் உடனடியாகக் கிளம்புவதுதான் உத்தமம்!” என்ற இளங்குமரன் சுற்றுமுற்றும் பார்த்தபடி அந்த மண்டபத்தைக் கடந்து கோயிலுக்குள் சென்று தேடத் தொடங்கினான்.




உள்ளே... உக்கிரமாய் விழிகளை விரித்தவாறு நின்றிருந்தாள் கொற்றவை.

‘இங்கு நடப்பதெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்! உன்னை விடுவேனென்று நினைத்தாயா? எனக் கேள்வி கேட்பதுபோல இளங்குமரனுக்கு தோன்றியது. உள்ளே சென்ற வேகத்திலேயே வெளியே ஓடிவந்தவன், “கோயிலுக்குள் ஒருவரும் இல்லை!” என்றான்.

“எப்படியோ நம்மில் யாரோ தவறு செய்திருக்கிறோம்! அதற்கான விளைவு என்னவென்பது விரைவில் தெரியவரும். சரி, இப்போது திட்டத்தை இங்கு வைத்து இனி பேசவேண்டாம்! காரணம், இங்கே சுவர்களுக்குக் கூட காதிருப்பது போலத் தோன்றுகிறது!” என்றவன் கோயில் மண்டபத்தை விட்டு வேகமாக வெளியே வந்து நின்றான். அவனைத் தொடர்ந்து வந்து நின்றவர்களின் முகங்களிலும் கலவரம் தெரிந்தது.

பொறையன் மட்டும், “அதெப்படி கிழவன் தப்பினான்?” எனத் தனக்குள் ஓடிய எண்ணத்தை வார்த்தைகளாக்கிக் கொட்டினான்.

“இனி அதைப் பற்றி யோசிப்பதும் விவாதிப்பதும் வீண் வேலை! இங்கே நம்மை யாரேனும் கண்காணித்துக் கொண்டிருக்கக் கூடும்! முதலில் இந்த இடத்தை அலசிப் பார்ப்போம். ஆளுக்கொரு திசையில் சென்று மண்டபத்தைக் கண்காணியுங்கள்!” என்றபடி வேகமாய் நடந்த செங்கண்ணனின் பார்வை முதலில் தனக்கு அருகில் இருக்கும் ஆலமரத்தின் மீது பதிந்தது.

சடாரென தான் நிற்கும் மரத்தின் மீது அவன் பார்வையைத் திருப்புவான் என எதிர்பாராத மதியொளி, சட்டென மறைந்து கொண்டான். அதேநேரம் தித்தனும் கவனமாக மறைந்து கொண்டான்.

சில கணங்கள் அந்த ஐவரும் கோயிலைச் சுற்றி வந்து மீண்டும் அங்கே நின்றனர்.

“இனி இங்கு நமது சந்திப்பு வேண்டாம். குமரா! நீதான் இப்போது அரண்மனையிலேயே நம்பிக்கைக்குரியவனாக இடம் பிடித்து விட்டாயே! இனி நம் திட்டம் நிறைவேறிவிடும்! அதுகுறித்து விரைவில் தெரிவிக்கிறேன். அதுவரை அரண்மனை விவகாரங்களை நீ அவ்வப்போது தெரியப்படுத்து. நாம் விரைவில் புதிய தலைவர் ஒருவரைச் சந்திக்கவிருக்கிறோம். அடுத்த சந்திப்பு நிகழ்வது அனேகமாக அவரது இடமாகக் கூட இருக்கலாம். மீண்டும் தகவல் வரும்வரை அவரவர் வேலைகளைக் கவனமாகச் செய்தபடி இருக்க வேண்டும். நம்மை யாரேனும் கண்காணிப்பதாக உணர்ந்தால் முசிறியில் உள்ள நமது இடத்துக்குச் சென்று தலைமறைவாகி விடுங்கள்! சரி, இப்போதைக்கு நாம் விடைபெறலாம்!”

செங்கண்ணன் கூறி முடித்த அடுத்த நொடியே... சற்றுத் தொலைவில் ஒரு குதிரையின் கனைப்பொலியும் அதைத் தொடர்ந்து குளம்படிகளின் ஓசையும் கேட்கவே, அனைவரும் திடுக்கிட்டுத் அத்திசை நோக்கித் திரும்பினர்.

“வாருங்கள் என்னோடு...” என்றபடி செங்கண்ணன் கோயிலின் பின்புறம் உள்ள புதர் மறைவை நோக்கி ஓடினான்.

அவனைத் தொடர்ந்தாற்போல அனைவரும் ஓடினர்.

குதிரையின் குளம்பொலி வேகமெடுத்தது.

(கனவு தொடரும்...)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# முருகன் அருள்

முருகபக்தரும் முன்கோபியும்
கெட்டவார்த்தைப் பிரயோக
சிரோன்மணியுமான
என் உறவினர் ஒருவர்
எதிரிலிருப்பவர் மனதில் நினைப்பதை
எக்ஸ்ரே செய்து சொல்வார்.
எல்லோரும் திகைத்துப் போவோம்.

நெருக்கமான சிலருக்கு
பின்வரும் நாட்களில்
என்ன நடக்குமென்று முன்னமே சொல்வார்.
அவர் சொல்வது சொன்னபடி நடந்தது
பலரின் அனுபவம்.

எப்படிச் சொல்கிறீர்களெனக் கேட்டேன்.
எல்லாம் முருகன் அருள் என்றார்.
எனக்கும் முருகன் அருள் வேண்டும்
என்ன செய்யவேண்டும் நானெனக் கேட்டேன்.
வீட்டைச் சுத்தமாக வை.
முருகனை மையத்தில் வையென்றார்.

வீட்டைப் பளிங்குபோல் செய்தேன்.
முருகன் சிலையை நடுவில் வைத்தேன்.
ஜவ்வாதும் சந்தனமும் பூசிக்கொண்டேன்.
கெட்டவார்த்தை பேசிப் பார்த்தேன்.
முருகன் அருள் கிட்டவில்லை.

**லாவண்யா**

# மீச்சிறுவெளி

ஒருவன் தொடர்ந்து செல்கிறான்
மற்றொருவன் அமர நினைக்கிறான்
கொள்கை என்னவோ ஒன்றுதான்
சூழலினை மனமும் உடலும்
ஏந்தி நடக்க இயலாமையே
குறையாகிறது.

அவனுக்கு முன்னால் நான்
எனக்கு முன்னால் யாரோ
வளைவுகளில் தவறி விழுகிறது
முன்னேற்ற பட்டியல்

வெற்றிப் பெற்றவனுக்கு
வலி சிறந்த எடுகோள்
தோல்வியை தோளில் வைத்து
செல்பவனின் கையில் அளவுகோல்

கதையம்சங்கள் நிறைந்த
நிகழ்வில் இன்றுவரை
அந்த மரமும் அல்லை
அந்த அவனும் இல்லை

கசப்பான மரத்தின் கீழ்
சர்க்கரை வியாதிக்காரனின் தடங்கள்
எறும்புகளுக்கு என்ன தெரியும்
கசப்பிற்கு இனிக்குமென்று.

**சே கார்கவி கார்த்திக்**

# கோடைத் தெருக்களில்

வெயிலிற்கு பழக்கப்பட்ட
அலுமினிய குண்டான்களில்
பனங்கீற்று கூப்புகளுக்குள்
பிய்த்த நுங்குகள்

பறித்து நிரப்பி வைக்கப்பட்ட
தலையில்லாத இளநீர்கள்

நீரற்றக் கண்ணாடித்
தொட்டிகளுக்குள்
நீந்திடாத பலாசுளைகள்
இன்னும் மெழுகு பூசை
நடைபெறாத

மாம்பழங்களும்
கோடை ஆரஞ்சும்
முழுதாகவோ

சட்டையுரித்த
துண்டங்களாகவோ
கோசாப் பழங்கள்

உட்புகுத்தப்பட்ட
மலர் ஒப்பனைகள்
அணிந்த முலாம் பழங்கள்

பழக்கப்படுத்திய
மண் பானைகளில்
கம்பு கேழ்வரகு கஞ்சியுடன்
நீர்மோரும் மிளகாய் வற்றலும்

இவ்வளவுக்கு மத்தியிலும்
மிதிவண்டியின் வேகத்தில்
விரைகிறான் சிறுவன் ஒருவன்
குளிரூட்டப்பட்டு நெகிழிகளில்
அடைபட்ட குச்சி ஐசையும்
சோடாக்களையும் வாங்க!

**அனிதா கோகுலகிருஷ்ணன்**

# எல்லாம் இன்பமயம்!

தேன் மகரந்தப் பூக்களிலே
தென்றலாய் வந்திடும் காற்றினிலே
வான்முகில் சிந்திடும் துளிகளிலே
வாழ்வை ரசித்திட வேண்டாமா?

புலரும் காலைப் பொழுதினிலே
புள்ளினம் இசைக்கும் பாடலிலே
மலரும் நிலமகள் எழில் கண்டு
மகிழ்ந்தால் இன்பம் விளையாதா?

சிந்தும் மழலை மொழியினிலே
சிரித்துக் கவரும் அழகினிலே
விந்தை மிகுந்த விளையாட்டில்
விளையா இன்பம் வேறுண்டோ?


உயர்ந்த மலையும் அருவிகளும்
ஊற்றுச் சுனையும் நீர் நிலையும்
வயல்வெளிக் காட்டும் பசுமைநிறம்
பார்த்து ரசித்தால் துயரேது?

இயற்கை அள்ளிக் கொடுக்கின்ற
எல்லா வளமும் நமக்காக
தயங்கிக் கிடந்து துன்பத்தை
தலையில் சுமப்பது சரிதானா?

**இராதை பிரபாகரன்**

## ஆருயா அந்த எக்ஸ்?

## பெற்றோரின் ஆசியுடன் பெருமிதம்!






## ஆர்யாதான் அந்த எக்ஸ்!

ஆர்யா நடிப்பில் உருவாகும் புதிய படம் 'மிஸ்டர் எக்ஸ்.' மனு ஆனந்த் இயக்கும் இப்படத்தில் ஆர்யாவுடன் கவுதம் கார்த்திக், சரத்குமார், மஞ்சு வாரியர், அனகா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

பிரின்ஸ் பிக்சர் நிறுவனம் தயாரிக்கும் இப்படம் திரில்லர் கதையம்சம் கொண்டது. மனு ஆனந்த் கடைசியாக இயக்கிய 'எஃப்.ஐ.ஆர்' படம் நல்ல வரவேற்பைப் பெற்ற நிலையில், வித்தியாசமான கதாப்பாத்திரங்களில் தோன்றும் ஆர்யாவும் மனு ஆனந்தும் இணையும் 'மிஸ்டர் எக்ஸ்' படத்துக்கான எதிர்பார்ப்பும் அதிகரித்து இருக்கிறது.

## வென்றோரின் ஆசிகள் தனிவிதம்!

சுதா சுகுமார் தயாரிப்பில், அர்ஜுன் தாஸ், ஷிவாத்மிகா இணைந்து நடிக்கும் புதிய படத்தில் காளி வெங்கட், நாசர் ஆகியோர் நடிக்கின்றனர். 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படப்புகழ் விஷால் வெங்கட் இயக்கும் இப்படம், வாழ்வின் வினோதங்களைப் பேசும் கமர்ஷியல் டிராமாவாக உருவாகிறது. அம்மாவும், அப்பாவும் கலக்கிய திரைத்துறையில் தனக்கென தனியிடத்தை உருவாக்கியே தீருவேன் எனும் முனைப்பில் களமிறங்கும் ஷிவாத்மிகா, அதற்கான பயிற்சிகளில் இறங்கி, அனைத்துக்கும் தன்னைத் தயார்படுத்திக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது!

## தனுஷுடன் இணையும் அர்ஜுனா!



## அரைசதம் கடந்து அசத்தும் வீரன்!

தனது 50—வது படத்தை இயக்கி, நடித்து வரும் நடிகர் தனுஷ், தற்போது தெலுங்கு இயக்குனர் சேகர் கம்முலா இயக்கத்தில் தனது 51வது படத்தில் நடிக்கவுள்ளார். இதில் கதாநாயகியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க தெலுங்கு நடிகர் நாகார்ஜுனா இணைந்துள்ளார். நாகார்ஜுனாவின் பிறந்தநாளான ஆக., 29 அன்று இதனைப் படக்குழுவினர் அறிவித்துள்ளனர். வரும் ஜனவரி மாதத்தில் படப்பிடிப்பு தொடங்கி, தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் இந்தப் படம் உருவாகிறது.

## சாய்ந்தாடும் பாவையல்ல!



## சதிராடும் சாய்பல்லவி!

சிவகார்த்திகேயன் தனது ‘எஸ்.கே.21’ படத்திற்கு புது ஹேர்ஸ்டைல் வைத்திருக்கிறார். இப்படத்தில் சிவகார்த்திகேயனுடன், சாய் பல்லவி ஜோடியாக முதல் முறையாக நடிக்கிறார். வெறும் நான்கு காட்சிகள், இரண்டு டூயட்டில் வந்துவிட்டு போவதாக இல்லாமல், தன் கதாபாத்திரம் வெயிட்டாக இருந்தால் மட்டுமே நடிக்க ஒப்புக் கொள்வார் சாய்பல்லவி. எனவே ‘எஸ்.கே. 21’ படத்தில் சாய் பல்லவியின் கதாபாத்திரம் நிச்சயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கும் என படக்குழுழு கூறுகிறது.

# தல வலம்

## திருப்பரிதிநியமம்

### பரிதியப்பர் கோவில்

**புலவகிரி செயபாலன்**



‘நீர்புல்கு புன்சடை நின்றிலங்க நெடுவெண் மதிச்சூடி
தார்புல்கு மார்பில்வெண் ணீறணிந்து தலையார் பலிதேர்வார்
ஏர்புல்கு சாயலெழில் கவர்ந்த இறைவர்க்(கு) இடம்போலும்
பார்புல்கு தொல்புகழால் விளங்கும் பரிதிந் நியமமே’

திருஞானசம்பந்தர்

நீட்டுங் கருதி நியமத்தோர்க்கு இன்னருளை

நீட்டும் பருதி நியமத்தோய்’ என வள்ளலார் இத்தலத்தைப் பற்றிப் போற்றிப் பாடியுள்ளார்.

காவிரியின் தென்கரையில் உள்ள 128 இல் 101 வது தலமாக கீழ்வேங்கை நாட்டில் அமைந்துள்ளது. 1500 ஆண்டுகளுக்கு மேல் உள்ள பழமையான கோயில் ஆகும்.

மூலவர் ஈசன் ஸ்ரீ பாஸ்கரேஸ்வரர், ஸ்ரீ பரிதியப்பர்.

அம்பிகை ஸ்ரீ மங்கலாம்பிகை, ஸ்ரீ மங்கலநாயகி.

தலவிருட்சம் அரசமரம் (போதிமரம்) தீர்த்தம் சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி, கருங்குழி தீர்த்தம்.

திருஞானசம்பந்தர் இத்தலம் குறித்து 11

பதிகங்களைப் பாடியுள்ளார்.

பெயர்கள்

சூரியனுக்கு அருணன், ஆதவன், பாஸ்கரன், பரிதி, இரவி, கதிரவன், பகலவன், செங்கதிரோன், ஒளி, பானு, சோதி, உதயன், ஞாயிறு, திவாகரன் எனத் தமிழ் மொழியில் நூற்றுக்கும் மேற்பட்ட பெயர்கள் உண்டு! சூரியனுக்கு அதிபதி சிவபெருமான்.

பரிதி என்று அழைக்கப்படும் சூரியன், சிவனை மதிக்காமல் அவருக்கு எதிராக தட்சனால் நடத்தப்பட்ட யாகத்தில் பங்கு பெற்றதனால், வீரபத்திரனால் (சிவன்) சபிக்கப்பட்டார். அதனால் குன்ம நோயால் பாதிக்கப்பட்டு, கடும் துன்பத்திற்கு ஆளானார்.

சிவ நிந்தனையால் உழன்ற சூரியன், அதிலிருந்து விடுபட எண்ணி 16 சிவத்தலங்களில் லிங்கப்பிரதேசத்தை செய்து ஆத்மார்த்தமாக வழிபட்டார். அவற்றுள் ஒன்று பாஸ்கரேஸ்வரர் இருக்கும் பரிதியப்பர் கோயில். ஆதியில் அரச மரங்கள் நிறைந்த வனமாக இருந்ததால், பாஸ்கரசேத்திரம் என்றும் பரிதி நியமம் என்றும் அழைக்கப்படுகிறது.

சூரியனின் பரிபூரண வழிபாட்டால் மகிழ்ந்த ஈசன், சூரியனுக்குக் காட்சி கொடுத்து ‘வேண்டிய வரம் கேள்!’ என்றார். ‘அஷ்ட மூர்த்திகளுடன் ஒருவனாக, தானும் இடம்பெற வேண்டும்! ஆகம தீக்ஷாட வழிபாட்டில் தனக்கும் பூஜைகள் நடத்தப்பட வேண்டும்!’ என சூரியன் கேட்க, அவ்வாறே வரமளித்து, ‘இத்தலம் கயிலையைப்போல் பிரகாசித்து, ஊழிக் காலத்திலும் அழியாது நிலைபெற்றிடவும், இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி எம்மை வழிபடுவோர் எல்லா நன்மைகளையும் அடைவார்!’ எனவும் அருள் புரிந்தார்.

சூரியன் ஒருமுறை கடுமையான நோயால் பாதிக்கப்பட்டார். நிவாரணம் வேண்டி சிவனை சரணம் அடைந்தார். சிவன் இத்தலத்தை உண்டாக்கி, அதில் புனித நீர்ஊற்றை உருவாக்கி, லிங்கத்தை பிரதிஷ்டை செய்து, வழிபடுமாறு அறிவுறுத்தினார். சூரியன் அவரின் அறிவுரைப்படி நடந்து நோயிலிருந்து நிவாரணம் பெற்றார். சிவபெருமான் சூரியனுக்கு அருளியதால் தமிழில் பரிதி அப்பர் பரிதீசர் என்றும் சமஸ்கிருதத்தில் பாஸ்கரேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்

ஒருவரது ஜாதகத்தில் சூரியன் இருப்பிடத்தைக் கொண்டு அவரது முன்னோர்கள் செய்த பாவ புண்ணியங்களையும் அவர்களின் பலம் மற்றும் பலவீனத்தையும் அறிந்து கொள்ளலாம்.

பிதுர்தோஷம்

ஜாதகரீதியாக பிதுர்காரகனான சூரியன், சனி, ராகு, கேது, மாந்தி ஆகிய பாவ கிரகங்களுடன் சேர்ந்தோ, அந்த பாவ கிரகங்களின் பார்வை பட்டு இருந்தாலும், அசுபஸ்தானங்களில்







மறைந்தாலும் அந்த ஜாதகருக்கோ அல்லது அந்த பரம்பரையினருக்கோ பிதுர்தோஷம் ஏற்படும் அப்படிப்பட்ட நிலையில் அந்த ஜாதகர் பிரதி தமிழ் மாதம் வளர்பிறையில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தலத்தில் உள்ள சூரிய சந்திர தீர்த்தங்களில் நீராடி, பஞ்ச மூர்த்திகள் மற்றும் சூரியனுக்கும் சேர்த்து அபிஷேகம் செய்து பொது வஸ்திரம் சாற்றி, தயிர் சாதம் நிவேதனம் செய்து பிராமணர்கள் மற்றும் ஏழைகளுக்கு தான தர்மங்களை செய்தால் அருள் கிட்டும் என தலபுராணம் கூறுகிறது.

சிம்மம் சூரியன்

கார்த்திகை, உத்திரம், உத்திராடம், நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சிம்ம லக்னம் மற்றும் சிம்ம ராசியில் பிறந்தவர்கள், ஜாதகத்தில் சூரியன் ஆட்சி உச்சம் நீச்சம் பெற்றவர்கள், சூரிய திசையை நடப்பாக கொண்டவர்கள், பிரதி தமிழ் மாதம் முதல் தேதியில் பிறந்தவர்கள் என சம்பந்தப்பட்டவர்கள் இங்கு வந்து பூஜை செய்து வழிபட்டால் நல்ல பலனை தரும் என்பது ஐதீகம்

சிபி சக்கரவர்த்தி

சூரிய குலத்தின் தோன்றலானவரும், புறாவுக்காக தன் சதையையே தந்த சிபிச் சக்கரவர்த்தி தன் வயதான காலத்தில் தன் மகனிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்து விட்டு சிவத்தலங்களை தரிசிக்கப் புறப்பட்டார். அப்போது இத்தலத்திற்கு வந்ததும் அசதியில் ஓய்வெடுக்க விரும்பினார். அப்போது சக்கவர்த்தியின் குதிரைப் பாகன் குதிரைக்கு புல் அறுத்துக் கொண்டிருக்கும் போது, அவனது அரிவாள் பூமியில் புதைந்து இருந்த லிங்கத்தின் மீது பட, லிங்கத்திலிருந்து ரத்தம் பீறிட்டது.

இதைக் கேள்விப்பட்ட சக்கரவர்த்தி. அந்த இடத்தில் இருந்த செடி கொடிகளை நீக்க உத்தரவிட்டார். அதன்படி அவர்கள் செய்ய, சிவலிங்கம் தென்பட்டது. அதற்கு அபிஷேகம் ஆராதனைசெய்து வழிபட்டார். லிங்கத்தின் மீது ரத்த வடு (தழும்பு) உள்ளது. அந்த லிங்கமே சூரியன் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகும். பின்பு அங்கு கோவிலைக் கட்டி நித்திய நைமத்திய பூஜைகளை நடத்தினார் சக்கரவர்த்தி,

பிரம்ம சர்மா என்ற வேதியன் சாபத்தின் காரணமாக பருந்தாகவும், அவனது மனைவி சுசீலை கிளியாகவும் மாறிவிட்டனர். இத்தலத்தின் மகிமையைக் கேள்விப்பட்டு இத்தலத்துக்கு வந்து



தீர்த்த குளத்தில் நீராடி, பாஸ்கரலிங்கத்தை வழிபட, சாப விமோசனம் அடைந்து சுய உருவம் அடைந்தனர்.

தனதத்தன் என்ற வணிகன் தனது அனைத்து செல்வங்களையும் இழந்து வறுமை நிலை அடைந்தான். இத்தலத்தின் தீர்த்தத்தில் புனித நீராடி பரிதீசரை மனமுருகி வழிபட, இழந்த செல்வத்தையும் திரும்பப் பெற்றான்.

சேர மன்னனின் அமைச்சர் மகனான பத்மலோசனன் என்பவன் தீய வழியில் சென்று பஞ் சமா மகா பாதங்களைப் புரிந்ததால், அவனுக்குக் கடும் குஷ்டநோய் பீடித்து துன்புற்றான். பின் தனது தவறுகளை உணர்ந்து இத்தலத்துக்கு வந்து தீர்த்தத்தில் நீராடி ஈசனை வழிபட்டதும் பாவங்கள் தீர்ந்து பரமனருள் பெற்றான்.

கங்கை பிரம்மாவின் யோசனைப்படி கடக ராசியில் குரு இணைந்திருக்கும் ஒரு வருட காலம், சூரிய புஷ்கரணியில் நீராடி இத்தல பரமனை வழிபட்டதும் பாவங்கள் தீர்ந்து பரமனருள் பெற்றார்.

கோயில்

இக்கோயில் ஐந்து நிலை ராஜகோபரத்துடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி நான்கு புறமும் தேரோடும் வீதிகள். கோயிலுக்கு நேர் எதிரே சூரியன் ஏற்படுத்திய சூரிய தீர்த்தமும், மேற்கில் சந்திரன் உண்டு பண்ணிய சந்தர தீர்த்தமும், தேவர்களால் உண்டான தேவ தீர்த்தமும் உள்ளன.

உள்பிரகாரத்தில் விநாயகர், கஜலட்சுமி, ஸ்ரீவள்ளி தெய்வானை சுப்பிரமணியர், கண்டிகீஸ்வரர் உள்ளனர். வெளிப்பிரகாரத்தில் விநாயகர், சுப்ரமணியர், காலபைரவர், சூரியன், சந்திரன், நவக்கிரகங்கள் உள்ளன. கோஷ்டத்தில் மகாவிஷ்ணு, ஸ்ரீ ஆஞ்சநேயரும் அருகருகே உள்ளனர். இத்தல பிரகாரத்தில் மூன்று சண்டிகேஸ்வரர் உள்ளனர்.

கொடிமரத்தின் அருகில் நந்தி. கருவறையில் உள்ள லிங்கம் சுயம்பு மூர்த்தியாக உள்ளார். மூலவருக்கு நேரே நந்தியின் முன்புறம் சூரியன் நின்ற நிலையில் ஈசனைப் பார்த்து வழிபடுகிறார். இதுபோல் வேறு எந்தத் தலத்திலும் காண முடியாது என்று சொல்லலாம்!

சூரியன் வழிபட்ட தலங்களில் இதுவும் ஒன்று! மற்றது தலைஞாயிறு, சிறுகுடி, திருமங்கலக்குடி, செங்குன்றம், சூரியனார் கோயில், திருமீயச்சூர் ஆகும்.

சூரிய ஒளி

சுயம்பு மூர்த்தியாக உள்ள இவர் (மூலவர்) மீது ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் 18, 19 மற்றும் 20 தேதிகளில் (மார்ச், ஏப்ரல்) சூரிய கதிர்கள் படும்!

சிறப்பு பிதுர் கடன்

பிதுர்தோஷ நிவர்த்தி தலமாகப் போற்றப்படும் இத்தலத்தில், இறந்த முன்னோர்களுக்கு சூரிய தீர்த்தத்தில் நீராடி, அக்கரையில் பிதுர் கடன் தீர்ப்பவர்களுக்கு, காசி, ராமேஸ்வரத்தில் செய்த பலனைத் தரும் என்பது ஐதீகம்! அப்படிச்



## கல்வெட்டு

திருஞானசம்பந்தர் இத்தல ஈசனைப் போற்றிப் 11 பதிகங்களைப் பாடியுள்ளார் என்பதன் மூலம் இக்கோயில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே இருந்திருக்கலாம் என அறியப்படுகிறது.

மேலும் இது சோழர் காலத்தில் கற்கோயிலாக புனரமைக்கப்பட்டு, விஜயநகர ஆட்சி காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று கல்வெட்டு செய்தி தருகிறது. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸ்வாமி பொன்விழா திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.



ஆலயத்தின் உள் தோற்றம்

## திருவிழா

தினமும் நான்கு கால பூஜைகள் நடத்தப்படுகின்றன. திருவிழா வைகாசி விசாகம், ஆனி திருமஞ்சனம், ஆடி வெள்ளிக்கிழமைகள், விநாயகர் சதுர்த்தி, ஐப்பசியில் கந்த சஷ்டி, கார்த்திகையில் திருக்கார்த்திகை விழா, தைப்பூசம், மாசில் மகா சிவராத்திரி, ரத சப்தமி, மாதாந்திர பிரதோஷ நாட்களில் பூஜைகளும் வழிபாடும் நடைபெறும்!

தோஷம் நீங்கவும், ஆயுள் வேண்டியும் பக்தர்கள் ஈசனுக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் செய்து வஸ்திரங்கள் சாற்றி வழிபடுவர்!

செய்பவர்களுக்கு தெய்வ கடாட்சமும், சிறந்த வாழ்வும் கிடைக்குமாம்! மன உளைச்சல், சித்தபிரம்மை போன்றவை நீங்க வழிபாடு செய்ய இது உகந்த தலம்!

இக்கோயில் இந்து சமய அறநிலைத்துறைக்கு உட்பட்டது என்றாலும், தஞ்சை கீழ்வேங்கை நாட்டார்களுக்கு சொந்தமானது.

## ஆயுள்

மார்கண்டேயர் மார்கழி திருவாதிரையில் அவதரித்தார். அவர் இத்தலத்தில் உருவம் இல்லாமல் வழிபட்டு வருவதாக நம்பப்படுகிறது. அதனால் திருக்கடையூரில் நடப்பது போலவே 60, 70 மற்றும் 80 வயது உடையவர்கள் நீண்ட ஆயுள் வேண்டி (ஆயுஷ் ஹோமம்) வழிபாடு செய்து கொள்கிறார்கள்.

## கோயில் நேரம்

தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4:30 மணி முதல் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும்.

## இருப்பிடம்

தஞ்சாவூர் புது பேருந்து நிலையத்திலிருந்து ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை செல்லும் வழியில் 18 கி.மீ. தொலைவில் மேல்உளூர் என்ற ஊர் அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. டவுன் பஸ் வழித்தடம் 64 உள்ளது. கும்பகோணத்திலிருந்து 46 கி.மீ. தூரத்திலும் பட்டுக்கோட்டையில் இருந்து 33 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)




# ஆசை அகத்திணையா?

## (கவிதைத் தொகுப்பு)




**ஆசிரியர்: க.சுமித்ரா சத்தியமூர்த்தி**

**விலை : ரூ. 100**

**வெளியீடு:**

**60/1, சுப்பையாபிள்ளை தெரு,**
**பட்டுக்கோட்டை(அஞ்சல்),**
**தஞ்சாவூர்.**
**கைபேசி: 97897 43053**

மித்ரா சத்தியமூர்த்தி படைப்பாக்கத்தில் அண்மையில் வெளிவந்திருக்கும் 'ஆசை அகத்திணையா' என்னும் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் கவிதைகள், அகம் சார்ந்த கவிதைகள். அவை உள்ளீடற்ற வெறும் காதல் கவிதைகள் என்றளவில் நீர்த்துப் போகாமல் அதன் உள்ளார்ந்து பேசும் அரசியல் வழியாக தனித்தன்மை பெறுகின்றன. அகம் சார்ந்த கவிதைகளுக்கு பெரும்பான்மை வாய்ப்பு வழங்கியிருக்கிறார் கவிதாயினி. ஆனால் அவை முற்றிலும் மாறுபட்ட நுண்ணுணர்வு தொனிக்க படைப்பாக்கம் கொண்டிருக்கின்றன.

கவிதை வரிகளின் மூலம் சக மனிதர்கள், மரங்கள், அணில், குருவி, மலர்கள், மழை, காற்று, வெயில் என திணை பேதமற்று யாவற்றின் மீதும் கொண்டிருக்கும் பெருங்காதல் வெளிப்படுகிறது. மருதம் மற்றும் நெய்தல் நிலப்பரப்பின் அத்தனை வாசங்களும் சுமித்ராவின் கவிதை வெளிக்குள் கதாபாத்திரங்களாக வந்துபோகின்றன.

சிறுகதை



# அம்மாவின் பிடிவாதம்!

## சாய்ரேணு சங்கர்

பக்கத்திலிருக்கும் ஆம்பூர்தான் மாமிக்குத் தாய்வீடு. நெல்லை மாவட்ட வழக்கம், மணப்பெண்ணுக்குச் சீராகத் தங்கத்தில் கைக்கடிகாரம் பண்ணுவது. அப்படி கையில் தங்கக் கடிகாரமும் கழுத்தில் வைர அட்டிகையுமாக வந்தவள் நித்யகல்யாணி.

வீட்டினுள் நுழையும்போதே விநாயகர் படமும் சிருங்கேரி ஆச்சார்யாள் கையுயர்த்தி ஆசீர்வதிக்கும் படமும் தென்படும்.

“திருநெல்வேலில ஆச்சார்யாள் விஜய யாத்திரையப்போ எடுத்த போட்டோ. எங்க மாமனார் பாத பூஜை பண்ணியிருக்கார்!”— ஒவ்வொருவரிடமும் சொல்வாள் நித்யகல்யாணி மாமி.

இன்றைக்கு எல்லோரும் அவள் வீட்டில் கூடியிருக்கிறோம், அவள் சொல்ல மாட்டாள்.

நாள் தவறாமல் காந்திமதியம்மனைத் தரிசித்தாக வேண்டும் அவளுக்கு. என்றைக்கு சுந்தரம் மாமாவின் கையைப் பிடித்துக் கொண்டு அந்த வீட்டில் நுழைந்தாளோ, அன்றிலிருந்தே இதுதான் பழக்கம்.

பக்கத்திலிருக்கும் ஆம்பூர்தான் மாமிக்குத் தாய்வீடு. நெல்லை மாவட்ட வழக்கம், மணப்பெண்ணுக்குச் சீராகத் தங்கத்தில் கைக்கடிகாரம் பண்ணுவது. அப்படி கையில் தங்கக் கடிகாரமும் கழுத்தில் வைர அட்டிகையுமாக வந்தவள் நித்யகல்யாணி.

புகுந்த வீட்டில் அவளுக்குச் செல்வாக்கு அதிகம்தான். மாமியார், மாமனார்கூட அவளை ஒன்றும் சொல்ல மாட்டார்கள். அவர்கள் மத்தியதரக் குடும்பம்தான். மாமனார் பள்ளி ஆசிரியர்.

சுந்தரம் மாமா, படிப்பை முடித்ததும் அவருக்கு மதராஸில் வேலை கிடைத்தது. கைநிறையச் சம்பளம். தாய், தந்தையரும், “க்ஷேமமா போயிட்டு வா!” என்று ஆசீர்வாதம் செய்துவிட்டார்கள். மாமியோ கிளம்ப மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துவிட்டாள்.

“எல்லாம் இங்கே கிடைக்கற வேலையே போதும். காந்திமதியைப் பார்க்காம என்னால இருக்க முடியாது!” என்று ஒரேயடியாய் மறுத்துவிட்டாள்.

சுந்தரம் மாமாவுக்கு இதில் வருத்தம்தான். என்றாலும், மனைவியை எதிர்த்துப் பேசி அவருக்கு வழக்கமே கிடையாது. செல்வாக்குள்ள இடம் என்பது தவிர, மாமியின் எழில் எப்படி? சிவப்பு என்றால் அப்படியொரு சிவப்பு. மடிசாரில் அம்பிகை மாதிரி ஜொலிப்பாள்!

ஒன்பது கஜம் புடவை ஆறு கஜமாகி, அதுவும் முடியாமல் நைட்டிக்கு மாறி… இதோ படுத்துக் கொண்டிருக்கிறாளே, கொஞ்சமாவது கம்பீரம்



குறைந்திருக்கிறதா சொல்லுங்கள்.

மாமாவும் கொஞ்சம் ஷோக் பேர்வழி. மாமனார் வாங்கிக் கொடுத்த ஸ்கூட்டரில் ஒன்பது மணிக்கு வேலைக்குக் கிளம்பினால், ஐந்தரை மணிக்கு டாண் என்று வீட்டில் நிற்பார், ஆத்துக்காரியைக் கோயிலுக்குக் கூட்டிப் போக! கோயிலிலிருந்து வந்ததும் லைப்ரரி. அப்புறம் எட்டரை மணிக்கு சாப்பாடு, இருட்டுக்கடை அல்வா, காரா சேவு, வெற்றிலை பாக்கு… நண்பர்களோடு சீட்டு. வாரக் கடைசி என்றால் மாமியோடு க்ஷேத்திரங்கள். தனியாகச் சினிமா. மாமாவை 'நித்யகல்யாண சுந்தரம்' என்று கேலி செய்பவர்கள் உண்டு.

குழந்தைகள் உடல்நிலை, படிப்பு, வீட்டின் பொருளாதாரம் அனைத்தும் மாமியின் கவலை. "எல்லாத்தையும் காந்திமதிட்ட விட்டுட்டேன்!" என்று மாமி அடிக்கடிச் சொல்வாள். காந்திமதியும் கவனித்துக் கொண்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தைகள் எல்லோரும் சமர்த்து, படிப்பில் படுசுட்டி!

முதல் பிள்ளை அகிலன், "கெமிஸ்ட்ரி படிக்கப் போறேம்மா!" என்று அம்மாவிடம் சொன்னான். வீட்டுக் கஷ்டம் தெரிந்த பிள்ளை. காலேஜ் ஃபீஸுக்கு மேல் அம்மாவிடம் எதுவும் கேட்க மாட்டான். வேதியியலில் முதுகலைப் படிப்பு முடித்ததும் புனேயில் பெரிய வேலை கிடைத்துவிட்டது. அம்மாவிடம்தான் முதலில் வந்து சொன்னான். காந்திமதிக்கு அர்ச்சனை செய்தாள் மாமி.


அகிலனுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் ஆனது. மாட்டுப் பெண்ணுக்கும் புனேயில் வேலை கிடைத்துவிட்டது. அங்கேயே ஃப்ளாட் வாங்குவதற்கும் வாய்ப்பு வந்தது. உடனே நெல்லைக்கு வந்து அம்மாவிடம் விஷயத்தைச் சொன்னார்கள்.

"ஏண்டா… நீ வாங்கற ஆத்தை இங்கே வாங்கலாமே! சீக்கிரம் மாத்திண்டு இங்கேயே வந்துடுவேன்னு சொன்னியே?" என்றாள் மாமி.

"இல்லேம்மா, அங்கே நல்ல வேலை, எப்படி வரது சொல்லு? குழந்தையையும் அங்கேயே

ஸ்கூல்ல சேர்த்தாச்சு!" என்று அகிலன் எடுத்துச் சொன்னதும் ஒப்புக்கொண்டாள்.

அன்றுதான்



முதன்முறையாக, "இருந்தாலும் உங்கம்மாக்குப் பேராசை! நாம அங்கே நமக்காக வீடு வாங்கணும்னா, இங்கே தனக்காக வாங்கச் சொல்றா பாருங்கோ! உங்க சம்பாத்தியத்தில், தான் மட்டும் பெரிய வீட்டில் இருக்கணும், நாம வாடகை வீட்டில் கஷ்டப்படணும்னு எண்ணம்!" என்று அகிலனிடம் குற்றம் சொன்னாள் அவன் மனைவி.

"சேச்சே... அப்படியெல்லாம் இல்லை. ஏதோ அவளுக்கு இந்த ஊரிலே 'சொல்க்ஷேத்தியா' (செல்வாக்குடன்) இருக்கணும்னு ஆசை!" என்று சமாளித்தான் அகிலன்.

"அப்போ, நாம சொல்க்ஷேத்தியா இருக்க வேண்டாமா?"

அகிலன் பதில் சொல்லவில்லை.

காந்திமதியின் பாதத்தில் வைத்து எடுத்து, டாக்குமென்ட்டை மாமி கொடுத்ததும் புனேக்குத் திரும்பிவிட்டார்கள், வீடும் வாங்கியாகிவிட்டது.

மாமியும் மாமாவும் கிரஹப்ரவேசத்திற்குப் போயிருந்தார்கள். மாட்டுப் பெண் முதலில் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. கிரஹப்ரவேசத்திற்கு மாமி எடுத்து வைத்த இரண்டு பெரிய வெள்ளி விளக்கும், குழந்தை கழுத்தில் போட்ட தங்கச் செயினும் அவளைச் சுமுகமாக்கிவிட்டன!

ஒரு வாரமானது. "நான் கிளம்பறேண்டா..." என்றாள் மாமி, பிள்ளையிடம்.

"அங்கே வேலைக்காரி சரியா வரதில்லை. அப்பாவும் உடம்பு என்னவோ போலிருக்குங்கறார். கொஞ்ச நாள் இரேம்மா..." என்றான் அகிலன்.

''காந்திமதியைப் பார்க்காம இருக்க முடியலை. இப்போ என்ன? வந்துண்டு போயிண்டு இருக்கப் போறோம்!" என்று கிளம்பிவிட்டாள் மாமி.

மாமியின் பெண்கள் இருவருக்கும் கல்யாணம் நன்றாக நடந்தது. அவர்கள் குடும்பங்களுக்கே எவ்வளவோஒத்தாசையாக இருந்திருக்கிறாள் நித்யகல்யாணி மாமி. பிரசவங்களுக்கு எல்லாம்பதறிக் கொண்டுஓடுவாள். பெண்களானாலும் சரி, மருமகள்கள் ஆனாலும் சரி, பெண்களின் நாத்தனார்கள் என்றாலும் சரி!

ஆனால், ஒரே வாரம்தான். "காந்திமதியைக் கண் தேடறது" என்பாள். வந்துவிடுவாள்.

"இந்த அம்மாவுக்குக் காந்திமதி ஒரு சாக்கு!" என்று பெற்ற பெண்களே அலுத்துக் கொண்டதுண்டு.

"அப்படி ஊரில் என்னதான் இருக்கு அம்மா?" என்று இரண்டாம் மாட்டுப் பெண்ணும் வேடிக்கையாகக் கேட்பாள், கலிஃபோர்னியாவிலுள்ள பிள்ளையின் வீட்டுக்கு அவர்கள் போனபோது!

"தெரியாதாக்கும்? அங்கே அக்ரஹாரத்தில் வீடு வீடாகப் போய் வம்பளக்க வேண்டாமா? அதுக்குத்தானே மங்கலிப் பொண்டுகள், காரடையான் நோன்பு இதெல்லாம் பண்றது!" என்று கிண்டல் செய்வான் இரண்டாம் பிள்ளை ஸ்ரீதர்.

அமெரிக்காவில் ஒரு மாதத்துக்கு மேல் தங்கவில்லை. இத்தனைக்கும் ஆறுமாத விசாவில் போனது. மாமாகூடத் திரும்பி வந்து சீட்டாட்ட நண்பர்களிடமெல்லாம் சொல்லி வருத்தப்பட்டார்.



எடுத்துக்கொண்டு வரும்போது வழுக்கி விழுந்துவிட்டாள். கணுக்கால் எலும்பு பிசகிக் கொண்டுவிட்டது. அக்கம்பக்கத்தவர்கள் உதவியால் அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தார் மாமா.

பெரிய பெண் வந்து பார்த்துக் கொண்டாள். அவளால் எத்தனை நாள் இருக்க முடியும்? "நம்மாத்தில் வந்து இரேம்மா..." என்று கேட்டுப் பார்த்தாள். "அங்கே நங்கநல்லூரில் நம்ம ஆத்துக்குப் பக்கத்திலே கோயில்!" என்று ஆசைகாட்டிப் பார்த்தாள். நடக்கவில்லை.

"இங்க பாரு... உன்னால முடிஞ்ச மட்டும் இரு, அப்புறம் காந்திமதி பாடு. என்னை மட்டும் எங்கேயும் கூப்பிடாதே!"

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் பெண். "இந்தக் கீக்கிடத்தில் சமைக்க என்னாலாகாது!" என்று அப்பாவிடம் பொறுமிவிட்டு, ஆள் ஏற்பாடு பண்ணிவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

"என் மேலே கோப்படாதேடி! ஏதோ என் காலத்தைத் தாமிரபரணிக் கரையிலேயே கழிக்கணும்னு ஆசை!" என்று பெண் கிளம்பும்போது மாமி சொன்னதில், அவளே கரைந்துதான் போனாள். "புரியறதும்மா. இருந்தாலும், காலத்துக்குத் தகுந்த மாதிரி கொஞ்சம் வாழப் பழகிக்கோ!" என்றாள்.

மாமிக்குத் தள்ளாமை வந்துவிட்டது. சரியாக நடக்க முடியவில்லை. வீட்டு வேலைகள் செய்ய முடியவில்லை. எந்தப் பெண்ணாலும் பிள்ளையாலும் உதவிக்கு வர இயலவில்லை. மாமாதான் கஷ்டப்பட்டு ஒரு சமையல் பண்ணி வைப்பார். சாப்பாட்டை எடுத்துப் போட்டுக் கொள்ளக்கூட முடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறாள் மாமி. ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குப் போவதற்குள் மூச்சு வாங்கும். ஆனால், கோயிலுக்குத் தட்டுத் தடுமாறிப் போய் வந்துவிடுவாள்!

"இவ பிடிவாதம் இருக்கே..."

பேரக் குழந்தைகள் வளர்ந்தன. எல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை நெல்லைக்கு வரும். "போ பாட்டி, உன் பாத்ரூம் அவுட்ஸைட்ல இருக்கு. ஐம் அஃப்ரைட், தேர் ஆர் ஈவன் மைஸ். ஐல் நாட் கம் எனிமோர்!" என்று கோபப்படும்.

"எவரி இயர் யூ ஷுட் டெஃபினிட்லி கம்!" என்று ஆங்கிலத்தில் விளாசிவிடுவாள் மாமி. என்றாலும், பேரக்குழந்தைகள் வருகிறார்கள் என்றால் க்ளீனிங், ரிப்பேர் பாத்ரூமே என்று அமர்க்களப்படும். சில வருஷங்களுக்கு முன்னால் வீட்டினுள்ளேயே (அந்த அக்ரஹார வீட்டு இடுக்கில்) ஒரு பாத்ரூம் கட்டினார்கள்.

மாமிக்கு வேலைக்காரிகள் சரியாக அமைந்ததே கிடையாது. பாவம், எத்தனையோ நாள் கஷ்டமான வேலைகளையெல்லாம் சுணங்காமல் செய்திருக்கிறாள்!

ஒருமுறை கிணற்றில் நீர் இறைத்து

மூத்த பிள்ளை ரிடையர் ஆகிவிட்டான். "அகிலா, (மாமி 'அயிலா' என்று வட்டார வழக்கில் கூப்பிடுவதே ஒரு அழகு!) இங்கே வந்து இரேண்டா... சொந்த ஊரில் இருக்க வேண்டாமா?" என்று கூப்பிட்டுப் பார்த்தாள் மாமி.

"உன்னை மாதிரி என்னால் இருக்க முடியாதும்மா. என் குழந்தைகளுக்கு எந்த ஊர் நல்லதோ அங்கேதான் இருக்க முடியும்!" என்று நாசூக்காய் இடித்துக் காட்டிவிட்டு, சென்னையில் செட்டில் ஆகிவிட்டான். இரண்டாவது பிள்ளையும்



அமெரிக்காவை விட்டுவிட்டு பெங்களூருவுக்கு வந்துவிட்டான்.

ஆயிரம் கஷ்டங்களுக்கு நடுவில் நூல் பிடித்தாற்போல் போய்க் கொண்டிருந்த மாமியின் வாழ்வில் இடி விழுந்தது. சுந்தரம் மாமா போய்விட்டார்! மாரடைப்பு. எத்தனையோ உபாதைகள் மாமிக்கு இருக்க, மாமா அவளை முந்திக்கொள்வார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

காரியம் முடிந்ததும் பிள்ளைகளும் பெண்களும் அவரவர் ஊர்களுக்குப் போய்விட்டார்கள். மாமி நெல்லையிலேயே இருந்தாள். அட்டென்டர் போட்டார்கள். பெண்களும் பிள்ளைகளும் மருமகள்களும் மாறி மாறி வந்து இருந்தார்கள்.

“எங்களுக்கும் வயசாயிண்டு வரது. இப்படில்லாம் அலைய முடியலை. எங்களோட வந்து இருந்தாக்க எவ்வளவோ சௌகரியம், கேக்க மாட்டேங்கறா. பிடிவாதம் பிடிக்கறா. நீங்களாவது சொல்லுங்கோ...” என்று அக்கம்பக்கத்தில் இருப்பவர்களிடம் குறைசொன்னான் அகிலன்.

“உங்கம்மா பிடிவாதம் தெரியாதா அகிலா? நாங்க சொன்னா மட்டும் கேப்பாளோ?” என்பார்கள் அவர்கள்.

உலகமே மாறுகிறது. நெல்லையும் எவ்வளவோ மாறிவிட்டது. நித்யகல்யாணி மாமி மட்டும் அப்படியே இருந்தாள். அப்படியொரு பிடிவாதம், வைராக்கியம்!

நேற்றுகூட ஆட்டோவில் கோயிலுக்குப் போய்விட்டு வந்தாள். அட்டென்டர் அவளைப் பிடித்துக்கொள்ள, வாக்கரை அவள் பிடித்துக் கொண்டு தட்டுத் தடுமாறி வீட்டினுள் வந்தாள். அக்கடா என்று சாய்ந்தாள். சாய்ந்தவள் சாய்ந்தவள்தான். பிராணன் போய்விட்டது.

அண்டை வீட்டார் தகவல் கொடுக்க, குடும்பத்தார் வந்திருக்கிறார்கள். தெருவே இன்று நித்யகல்யாணி மாமி வீட்டில்தான் இருக்கிறது.

அகிலனின் கண்ணீரில் ஒரு நிம்மதி இருக்கிறாற்போலப்படுகிறது. பெண்கள் கதறி அழுகையிலேயே, ‘இந்தப் பதினாறு நாளோட போச்சு... இனிமே இங்கே வர வேண்டாம்!’ என்ற எண்ணம் தெரிகிறது.

அதோ ஸ்ரீதர்... அடுத்தாத்து மாமியுடன் பேசிக் கொண்டிருக்கிறான். “கடைசிவரையில எங்க யாராத்துக்கும் வந்து இருக்க மாட்டேன்னுட்டா. எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் அவளைப் பார்த்துண்டோம். அம்மாவோட பிடிவாதம் இருக்கே...”

யாரோ பதில் சொல்கிறார்களே!

“ஏண்டாப்பா... அம்மா பிடிவாதத்தைப் பற்றிப் பேசறியே, உங்க பிடிவாதம் ஒண்ணும் குறைச்சலா இல்லையே! உங்களில் ஒருத்தருக்குக்கூட சொந்த ஊருக்கு அடிக்கடி வரணும், கோயில் திருவிழாவில் கலந்துக்கணும்— இப்படியெல்லாம் தோணினதே இல்லையே! ரிடையர் ஆனதுக்கப்புறமாவது இங்கே வந்து இருப்போம்... அம்மா—, அப்பாவுக்கு உதவியா இருப்போம்னு அகிலனுக்குத் தோணித்தா? நீ கலிஃபோர்னியாலேருந்து வந்து சாஃப்ட்வேர் கம்பெனி வெச்சியே, அதை உன் ஊர்ப் பசங்களுக்கு உதவியா இங்கே தொடங்குவோம்னு உனக்குத் தோணித்தா?

மாமி இந்த ஊரில் இருந்தாங்கறது பெரிசில்லை, அவ எவ்வளவோ பேருக்குப் படிக்க உதவி பண்ணியிருக்கா, பக்கத்து வீடுகளில் பெண்களுக்குக் கஷ்டம்னா ஒத்தாசையா ஓடி வந்திருக்கா. கோயிலுக்குத் தினமும் போறதுதான் உங்களுக்குத் தெரியும், அங்கே எவ்வளவோ கைங்கரியம் பண்ணியிருக்கா.

பிறந்த மண்ணு மேலயும் பேணிக் காத்த கோயில் மேலயும் பற்று வைக்கணும். நம் காலத்துக்குள்ள அதுக்கு நம்மாலானதைச் செய்யணும். உங்கம்மா இதை வாழ்நாள் பூரா செஞ்சுக் காட்டியிருக்கா. இதைப் பிடிவாதம்னு சொல்றவா சொல்லட்டும்!”

யாருடைய குரல் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை, தாமிரபரணியின் குரலாக இருக்கலாம்... ஆச்சார்யாள் படத்திலிருந்து வந்திருக்கலாம்... இல்லாவிட்டால், காந்திமதியே தன்னுடைய உயிர்த் தோழிக்காகப் பேசிக் கொண்டிருக்கலாம்!


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# தமிழர்

## வ. உ. சிதம்பரம்பிள்ளை – கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி

தூத்துக்குடி என்றாலே பலருக்கும் நினைவில் வருவது முத்துக்கள் தான். அந்த முத்துக்களில் ஒன்றாக பிறந்தவர் தான் வ.உ. சிதம்பரனார். வ.உ. சிதம்பரனார், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள, ஒட்டப்பிடாரம் என்னும் இடத்தில் 1872—ஆம் ஆண்டு செப்டம்பர் 5—ஆம் நாள் உலகநாதர் — பரமாயி அம்மாள் என்ற தம்பதிக்கு மகனாக பிறந்தார்.

வ.உ.சி — யின் தந்தை உலகநாதர், அப்போது இந்தியாவில் இருந்த மிகமுக்கியமான வழக்கறிஞர்களில் ஒருவர். இதுதான் வ.உ.சியையும் தனது கல்வி முடிந்து, தந்தையின் வழியில் செல்ல காரணமாக இருந்தது. வ.உ.சி ஒட்டப்பிடாரத்திலும் அருகில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்திலும் தனது பள்ளி படிப்பை நிறைவு செய்தார்.பள்ளி படிப்பு முடிந்ததும் ஒட்டப்பிடாரத்தில் உள்ள மாவட்ட நிர்வாக அலுவலகத்தில் வேலைக்கு சேர்ந்தார். ஒரு சில ஆண்டுகள் வேலை செய்த பிறகு சட்ட கல்லூரியில் சேர்ந்து சட்ட படிப்பை படித்து முடித்தார்.

தந்தை போலவே தானும் மிகச்சிறந்த வழக்கறிஞராக வரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த வ.உ.சி—க்கும், அவரது தந்தையின் செயல்பாடுகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. அவரது தந்தை சமுதாயத்தில் உள்ள பணக்காரர்கள் பிரச்சனைகளுக்கு மட்டுமே வாதாடுவார். ஆனால் வ.உ.சி அவர்கள் ஏழை மக்களின் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக, பல நேரங்களின் தனது தந்தையின் விருப்பத்திற்கு எதிராக வாதாடி இருக்கிறார்.

தனது சிறப்பான வாத திறமையினாலும் பல வழக்குகளில் சிறப்பாக வாதாடி வெற்றி கண்டதாலும் பலராலும் ஈர்க்கபட்டு மிகசிறந்த வழக்கறிஞர் என்ற பெயர் பெற்றார்.

திருமண வாழ்க்கை :

1895—ஆம் ஆண்டு வள்ளியம்மை என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்ட வ.உ.சி. ஆனால் அவர் 1900—ஆம் ஆண்டு தனது முதல் பிரசவத்தின் போது இறந்து விட்டார் அதன்பிறகு 1901—ஆம் ஆண்டு மீனாட்சி அம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இந்திய தேசிய காங்கிரஸ்—ல் வ.உ.சி :

அரசியல் மீது கொண்ட ஆர்வத்தால் 1905—ஆம் ஆண்டு தன்னை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைத்து கொண்டார்.






எஸ். சுகுமார்

இந்தியாவில் சுதேசி இயக்கம் தலைதூக்கிய அந்த நேரத்தில், தலைவர்களான லாலா லஜபதி ராய், பால கங்காதர திலகர், போன்ற பலரும் ஆங்கிலேய வர்த்தக வற்புறுத்தலுக்கு முற்று புள்ளி வைக்க முயற்சி செய்து வந்தனர்.அதே காரணத்திற்காகவும், இந்திய பாரம்பரிய கைத்தொழில்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் அரவிந்தோ கோஷ், சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி ஆகியோர் சென்னை மாகாணத்தில் இருந்து போராடினர்.இதுதான் வ.உ.சியை இந்திய காங்கிரஸ் கட்சியில் சேரவும், சென்னை மாகாண உறுப்பினர்கள் உடன் இணைந்து போராடவும் தூண்டியது. அதன்பிறகு இந்திய தேசிய காங்கிரஸ் அமர்வின் சேலம் மாவட்ட அமர்வை தலைமை தாங்கினார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி:

அடுத்த கட்டமாக தமிழகம் — இலங்கை இடையிலான ஆங்கிலேய கப்பல் போக்குவரத்து கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார். வ.உ.சியின் சுதந்திர போராட்ட முறை மற்ற சுதந்திர போராட்ட வீரர்களின் பாணியில் இருந்து மாறி காணப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கு எதிராக தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கப்பல் விட்டதை வெறும் வணிகமாக அவர் பார்க்கவில்லை. கப்பலுக்காக தன் சொத்தை விற்று கடன் வாங்கி இரண்டு கப்பல்களுடன் கப்பல் போக்குவரத்தை இலங்கைக்கும் தூத்துகுடிக்கும் இடையில் தொடங்கினார்.

அதற்கு முன் ஆங்கிலேயர்கள் அந்த போக்குவரத்தை பயன்படுத்தி அதிக கட்டணம் வசூல் செய்து பெரிய லாபம் பார்த்துவந்தனர். வ.உ.சியின் “சுதேசி கப்பல்” வந்ததும் அது மக்களிடம் அதிக செல்வாக்கை பெற்று வளர்ந்தது. காரணம் வ.உ.சி ஆங்கியேலர்களை எதிர்த்து கப்பல் விட்ட தகவல் நாடு முழுவதும் காட்டு தீ போல பரவியது. இதனால் ஆங்கிலேயர்களுக்கு பெரும் வருமான இழப்பு ஏற்பட்டது. அது மட்டுமில்லாமல் கப்பலை வைத்து வ.உ.சி தூத்துக்குடி முழுவதும் சுதந்திர உணர்வை ஏற்படுத்தினார்.

அப்போது இருந்த திருநெல்வேலி ஆட்சியர் மேலிடத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இந்த பகுதியில் குறிப்பாக வ.உ.சி கப்பல் போக்குவரத்தை தொடங்கிய பின்பு, மக்களிடையே சுதந்திர போராட்ட உணர்வு அதிகரித்துள்ளது, என்று தெரிவித்தார். அது ஆங்கிலேயர்கள் மத்தியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியது. சுதேசி கப்பல் :

வ.உ.சி கப்பல் போக்குவரத்தை ஒரு வணிகமாக



மட்டும் பார்க்காமல் எதில் கைவைத்தால் ஆங்கிலேயனுக்கு வலிக்கும் என்பதை தெரிந்து வைத்திருந்தார். அவர்கள் வணிகம் செய்யத்தான் வந்தவர்கள் என்பதால் அவர்களின் வணிகத்தில் கைவைத்து அதில் இருந்து மக்கள் மத்தியில் சுதந்திர போராட்ட எண்ணத்தை ஊக்குவித்தார். ஆங்கியலேய அரசாங்கம் மற்றும் ஆங்கிலேய வியாபாரிகளின் கோபத்தை தாண்டியும் வ.உ.சி கப்பல்கள் தூத்துக்குடி கொழும்பு இடையில் வழக்கமான சேவையை தொடங்கியது. சுதேசி நிறுவனம் ஆங்கிலேயே கப்பல் நிறுவனத்துக்கு கடும் போட்டியாக உருவெடுத்தது.

ஆங்கிலேயர்கள் இந்த போட்டியை சமாளிக்க முடியாமல் கட்டணத்தை குறைக்க முடிவு செய்து சுதேசி கப்பல் கட்டணத்தை விட குறைவாக அறிவித்தனர். அதற்கு பதிலடி கொடுக்க வ.உ.சியும் தனது கட்டணத்தை மேலும் குறைத்தார். கடைசியில் ஆங்கிலேய கப்பல் கம்பனி பயணிகளை இலவசமாக அழைத்து செல்வதாக கூறி கூடுதலாக பயணிகளுக்கு குடைகளை பரிசாக வழங்கியது. வ.உ.சியால் இலவசமாக வழங்க முடியாததால் சுதேசி கப்பல் நிறுவனம் திவால் ஆகும் நிலைக்கு சென்றுவிட்டது.

சிறை வாழ்க்கை :

அதன் பிறகு நாட்டில் சுதேசி இயக்கத்தை விரிவாக்கவும் ஆங்கிலேயர்களின் தவறான வியாபார கொள்கையை மக்களுக்கு எடுத்து சொல்லவும், ஆங்கில அரசுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக திருநெல்வேலியில் உள்ள கோரல் மில்ஸ் தொழிலார்களை ஒன்று திரட்டினார். ஆங்கிலேய அதிகாரிகள் ஏற்கனவே அவர் மீது கொண்டிருந்த வெறுப்பினால், அரசுக்கு எதிராக செயல் படுவதாக குற்றம் சாட்டி, 1908 மார்ச் 12—ஆம் தேதி அவரை கைது செய்தனர்.

அவரை கைது செய்த பின்னர் நாட்டில் வன்முறை வெடித்தது அப்போது காவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் வன்முறை ஏற்பட்டு நான்கு பேர் மரணம் அடைந்தனர். ஆங்கியேலர்கள் அவருக்கு எதிராக பொய் வழக்குகளை தயார் செய்து வந்த நிலையில் வ.உ.சிக்கு பெருமளவில் ஊடக ஆதரவு கிடைத்தது. இதனால் அவரை எப்படியும் வெளியில் கொண்டு வரவேண்டும் என்று பலரும் நிதி சேர்க்க ஆரம்பித்தனர்.

அப்போது தென் ஆப்பிரிக்காவில் இருந்த மகாத்மா காந்தியும், வ.உ.சியின் பாதுகாப்புக்காக நிதி சேகரித்து இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். கைதுக்கு பின் வ.உ.சி கோயம்பத்தூரில் உள்ள மத்திய சிறையில் ஜுலை 9, 1908 முதல் டிசம்பர் 1, 1910 வரை சிறை வைக்கப்பட்டார்.

செக்கிழுத்த செம்மல் :

அவரின் புரட்சிகரமான மனப்பான்மையை பார்த்த ஆங்கிலேயர்கள் அவருக்கு தெளிவாக ஆயுள் தண்டனை வழங்கினர். சிறைச்சாலையில் மாட்டிற்கு பதிலாக வ.உ.சியை செக்கு இழுக்க செய்து ஆங்கிலேயர்கள் அவர்க்கு சித்தரவை கொடுத்தனர். அதனால் அவருக்கு “செக்கிழுத்த செம்மல்” என்ற பெயரும் உண்டு.

இப்படி பல தொல்லைகளை சிறையில் அனுபவித்த போதும் அவர் சும்மா இருக்கவில்லை. தனது சட்ட மனுக்கள் மூலம் அவரது சுதேசி நடவடிக்கைகளை தொடர்ந்து வந்தார். மேலும் தனது சுயசரிதையையும் எழுத ஆரம்பித்தார். சிறையில் இருக்கும் போதே தத்துவ எழுத்தாளரான ஜேம்ஸ் ஆலன் அவர்களின் புத்தகங்களை தமிழில் மொழி பெயர்த்தார். அதுமட்டுமில்லாமல் திருக்குறள், தொல்காப்பியம் போன்ற தமிழின் மிக முக்கியமான காவியங்களுக்கு விளக்க உரை எழுதி உள்ளார்.

வ.உ.சி. இயற்றிய நூல்கள்

வ.உ.சி. இயற்றிய நான்கு நூல்களுமே கவிதைகளால் ஆனவைதான். அவைமெய்யறிவு, மெய்யறம், பாடல் திரட்டு, சுயசரிதைவ.உ.சி. யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள், திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்)—1917, தொல்காப்பியம் (இளம்பூரனார் உரையுடன்)—1928

வ.உ.சி., பல்வேறு செய்திகள் குறித்து பல்வேறு இதழ்களில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். வ.உ.சி. நிதி ஆதாரம் இல்லாததால் எழுதப்பட்ட பல புத்தகங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் இப்போது கையால் எழுதப்பட்ட பிரதிகள் கிடைக்கவில்லை. அவைகள் காணாமல் போய்விட்டனர். அவற்றுள் சில: மனமும் உடம்பும், வினையும் விதியும், விதி அல்லது ஊழ், கடவுளும் பக்தியும், கடவுள் ஒருவரே, மனிதனும் அறிவும்.

வ.உ.சி.யின் அரசியல் சொற்பொழிவு

வ.உ.சி. ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர், சேலத்தில் நடைபெற்ற மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில் இவர் பேச்சு “எனது அரசியல் பெருஞ்சொல்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

பத்திரிக்கை ஆசிரியராக வ.உ.சி

வ.உ.சி. இந்து நேசன், விவேகபானு, தி நேசனல் போன்ற பத்திரிகைகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இப்படி சிறையில் தனது கடின உழைப்பை வெளிப்படுத்தியதால் அது அவருடைய உடல்நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதனால் ஆங்கிலேயர்கள்

வ.உ.சியை விடுதலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். அதன்படி டிசம்பர் 12 ,1912 அன்று அவரை விடுதலை செய்தனர். விடுதலைக்கு பின்பு சிறை வாசலில் பெரிய அளவில் தனது ஆதரவாளர்களின் கூட்டத்தை எதிர்பார்த்த வ.உ.சிக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. வறுமை :




வழக்கறிஞர் உரிமம் அவரிடம் இருந்து பறிக்கப்பட்டதால் அவரால் தொடர்ந்து வாதிட முடியவில்லை. சுதேசி கப்பல் நிறுவனமும் 1911—இல் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதால் மிக ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டு, மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் சென்னையில் குடியேறினார். அங்கு ஒரு மண்ணெண்ணெய் வியாபாரத்தை தொடங்கினார். ஆனால் அதில் அவரால் வெற்றி பெற முடியவில்லை. இறக்க குணமும் தாராள மணமும் கொண்டவர்களால் எப்படி லாபம் தரும் வியாபாரத்தில் வெல்ல முடியும். அதன் பிறகு சென்னையில் இருந்த பல தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் நல அமைப்புக்கு தலைவரானார். பிறகு 1920—இல் இந்திய தேசிய காங்கிரசின் கொல்கத்தா அமர்வில் சேர்ந்தார்.

அரசியல் வாதியாகவும், வழக்கறிஞர் ஆகவும் மட்டும் இல்லாமல் சிறந்த அறிஞர் ஆகவும் விளங்கினார். சிறையில் இருக்கும் போது தனது சுயசரிதையை தொடங்கிய அவர் 1912—இல் சிறையில் இருந்து விடுதலை பெற்று அதனை முடித்தார்.

செல்வந்தரான குடும்பத்தில் பிறந்தும் வசதியான வழக்கை வாழாமல், சிறை, போராட்டம் என தன் வாழ்நாள் முழுவதும் இந்திய மக்களின் விடுதலைக்காகவே உழைத்த அந்த மாமனிதர் 1936, நவம்பர் 18—ஆம் நாள், தூத்துகுடியிலுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் அலுவலகத்தில் காலமானார்.

'கப்பலோட்டிய தமிழன்' என்றும் 'தமிழ் ஹெல்ம்ஸ்மேன்' என்றும் 'கப்பல் செலுத்துகிற திசையைக் காட்டுபவர்' என்ற பட்டங்களைப் பெற்றார்.

- சுதந்திரத்திற்கு பின்னர், அவரை நினைவுகூரும் வகையில், தூத்துக்குடி துறைமுகம் 'வ.உ.சி போர்ட்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- அவரது பெயரில் தூத்துக்குடியில் ஒரு கல்லூரியும் உள்ளது.

- செப்டம்பர் 5, 1972, அவரது நூற்றாண்டு விழாவை நினைவுக்ப்பரும் வகையில், இந்திய தபால் மற்றும் தந்தித்தொடர்புத் துறை ஒரு சிறப்பு தபால்தலையை அவரின் பெயரில் வெளியிட்டது.

- கோயம்புத்தூரிலுள்ள 'வ.உ.சி பூங்கா' மற்றும் 'வ.உ.சி மைதானம்' மிக முக்கியமான பொது பூங்காவாகவும், சந்திப்புக் கூடமாகவும் இருக்கின்றது.

- விடுதலைப் போராட்டத்தில், அவரது புரட்சிகரமான செயலுக்காக கோயம்புத்தூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறை வளாகத்தில் உள்ளே ஒரு 'நினைவுச்சின்னம்' அவருக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- திருநெல்வேலியையும், பாளையங்கோட்டையையும் இணைக்கும் பாலத்திற்கு 'வ.உ.சி பாலம்' என பெயரிடப்பட்டது.

- 'கப்பலோட்டிய தமிழன் வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை' வாழ்க்கைக் கதையை அடிப்படையாக கொண்டு, 1961ல் தமிழ் படம் வெளியானது. அதன் முன்னணி பாத்திரமாக சிவாஜி கணேசன் அவர்கள் நடித்துள்ளார்.

காலவரிசை

1872: செப்டம்பர் 5 ம் தேதி பிறந்தார்.

1895: வள்ளியம்மையை மணமுடித்தார்.

1901: அவரது மனைவி நோயால் இறந்தார்.

1905: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக அரசியலில் நுழைந்தார்.

1906: நவம்பர் 12ஆம் தேதி அன்று தனது சொந்த கப்பல் நிறுவனமான 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியைத்' துவக்கினார்.

1908: மார்ச் 12ஆம் தேதி அன்று ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

1908: ஜூலை 9ம் தேதி கோயம்புத்தூர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார்.

1911: அவரது கப்பல் கம்பெனியான 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' கலைந்தது.

1912: டிசம்பர் 12 ஆம் தேதி அன்று சிறையில் இருந்து வெளியிடப்பட்டார்.

1920: கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அமர்வில் ஆயத்தமானார்.

1936: நவம்பர் 18ஆம் தேதி அன்று இறந்தார்.

புதினம்



# சிவகாமியின்


## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## பட்டிக்காட்டுப் பெண் 28

**வ**ரவேற்பு வைபவங்கள் எல்லாம் முடிந்த பிறகு நமசிவாய வைத்தியரின் வீட்டுக்குள்ளே மாமல்லரும் பரஞ்சோதியும் பிரவேசித்தார்கள்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி திடீரென்று தங்கள் சின்னஞ்சிறு இல்லத்துக்குள் பிரவேசிக்கவே, அந்த வீட்டாரெல்லோரும் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். தளபதிக்குரிய வீர உடை தரித்திருந்த காரணத்தினால் பரஞ்சோதியை நிமிர்ந்து பார்த்துப் பேசக்கூட அவர்களுக்குக் கூச்சமாயிருந்தது. பரஞ்சோதிக்கோ அதைவிடக் கூச்சமாயிருந்தது.

கூடத்தில் போட்டிருந்த ஆசனம் ஒன்றில் யாரும் சொல்லாமல் தாமே மாமல்லர் உட்கார்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். நிலைமையை ஒருவாறு அறிந்துகொண்டார். கண்களில் கண்ணீர் ததும்ப நின்ற மூதாட்டிதான் பரஞ்சோதியின் தாயார் என்று ஊகித்துத் தெரிந்து கொண்டு, "எங்கள் வீர தளபதியைப் பெற்ற பாக்கியசாலியான தாயைத் தரிசிக்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவோ ஆவலாயிருந்தது; அந்த பாக்கியம் இன்று கிட்டிற்று!" என்று சொல்லிவிட்டு பரஞ்சோதியைப் பார்த்து, "தளபதி! இது என்ன? அன்னைக்கு நமஸ்காரம் செய்யும். தொண்டை மண்டலத்துக்குப் போனதனால் மரியாதை கூட மறந்து




போய்விட்டதென்றல்லவா நாளைக்கு எல்லாரும் குறை சொல்லுவார்கள்?" என்றார்.

உடனே பரஞ்சோதி முன்னால் சென்று அன்னையின் பாதங்களில் நமஸ்காரம் செய்தார். நமஸ்கரித்த குமாரனை வாரி எடுத்து உச்சி முகர வேண்டுமென்ற ஆசை அந்த அம்மாளுக்கு எவ்வளவோ இருந்தது. ஆனால் குமார சக்கரவர்த்தி அங்கு வீற்றிருந்ததும், தன் குமாரன் போர்க்கோல உடை தரித்திருந்ததும் அவளுக்குத் தயக்கத்தை உண்டு பண்ணிற்று. பிறகு, நமசிவாய வைத்தியருக்கும் பரஞ்சோதி நமஸ்காரம் செய்துவிட்டுத் திரும்பி வந்து மாமல்லரின் பக்கத்திலே அமர்ந்து உச்சி மோட்டைப் பார்த்தார்.

நமசிவாய வைத்தியர், மாமல்லரை நோக்கி, "இந்தக் குடிசைக்குத் தாங்கள் வந்தது எங்களுடைய பாக்கியம்!" என்றார்.

மாமல்லர் அவரை நோக்கி, "ஓகோ! நமசிவாய வைத்தியர் என்பது தாங்கள் தானே? தங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். தங்கள் குமாரி என் சிநேகிதரை ரொம்பவும் பயப்படுத்தி வைத்திருக்கிறாள் போலிருக்கிறது. அதோ அந்தக் கதவண்டை நிற்பவள்தான் தங்கள் புதல்வி? பார்த்தால் வெகு சாதுவாகத் தோன்றுகிறாள். ஆனால் பல்லவ சைனியத்தின் தலை சிறந்த தளபதியை, — வாதாபியின் யானைப் படையைச் சிதற அடித்த தீரரை, — கங்க நாட்டானையும், பாண்டியராஜனையும் புறமுதுகிடச் செய்த மகாவீரரை, ரொம்பவும் பயப்படுத்தியிருக்கிறாள். இனிமேலாவது அப்படியெல்லாம் செய்ய வேண்டாமென்று தங்கள் குமாரியிடம் சொல்லுங்கள்.

28

# சபதம்


கல்கி

பரஞ்சோதியை இங்கே அழைத்து வருவதற்கு நான் என்ன பாடுபட வேண்டியிருந்தது தெரியுமா? கையைப் பிடித்துப் பலாத்காரமாய் அழைத்து வரவேண்டியிருந்தது. அம்மா! தாங்களே கேளுங்கள், தங்கள் புதல்வர் இங்கே வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாரா, இல்லையா என்று! கேளுங்கள், அம்மா!" என்று மாமல்லர் கூறியபோது பரஞ்சோதியின் அன்னை மகனை அன்பும் கர்வமும் ததும்பிய கண்களால் பார்த்து, "குழந்தாய்! மாமல்லர் பிரபு சொல்வது உண்மையா? எங்களையெல்லாம் வந்து பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா?" என்றாள்.

"ஆம், அம்மா! பல்லவ குமாரர் உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்லுவதில்லை. ஆனால் ஏன் எனக்கு இங்கு வந்து உங்களையெல்லாம் பார்க்கப் பிடிக்கவில்லையென்று அவரையே கேளுங்கள்!" என்றார் பரஞ்சோதி.

அன்னை கேட்க வேண்டுமென்று வைத்துக் கொள்ளாமல் மாமல்லரே சொன்னார்: "தங்கள் அருமை மகன் காஞ்சிக்குப் போய்க் கல்வி கற்றுப் புலவராகத் திரும்பி வருகிறேன் என்று தங்களிடம் வாக்குறுதி, கூறிவிட்டுப் புறப்பட்டாராம். அந்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லையாம். போனபோது எப்படிப் போனாரோ அப்படியே திரும்பி வந்திருக்கிறார். அதனால் உங்களையெல்லாம் நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாயிருக்கிறதாம் எப்படியிருக்கிறது கதை?"

இவ்விதம் மாமல்லர் சொன்னதும் பரஞ் சோதியின் தாயார் மகனுக்கு அருகில் வந்து உட்கார்ந்து அவனுடைய முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே, "அப்பா! குழந்தாய்; நீ படித்தால் என்ன, படிக்காவிட்டால் என்ன? ஏதோ சிவபெருமான் அருளால் நீ உயிரோடு நல்லபடியாய்த் திரும்பி வந்தாயே அதுவே



எனக்குப் போதும். அந்நாளில் உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வந்த அண்ணாவிமார்களை நீ அடித்து விரட்டினாயே, அதற்காகவெல்லாம் நான் உன்னை எப்போதாவது கோபித்ததுண்டா?" என்றாள்.

இதைக் கேட்ட மாமல்லர் சிரித்துக் கொண்டே சொன்னதாவது: "என்ன? என்ன? உபாத்தியாயர்களை அடித்து விரட்டினாரா உங்கள் மகன்! நல்ல வேளை! நான் பிழைத்தேன்! இந்தச் சாதுப் பிள்ளைதான் என்னைத் தனக்குப் படிக்கக் கற்றுக் கொடுக்கும்படி தொந்தரவு செய்தார். அவர் சொல்வது உண்மை என்று எண்ணிக் கொண்டு நான் பாடம் கற்பிக்க ஆரம்பித்திருந்தேனானால் என்னையும் அப்படித்தானே அடித்துத் துரத்தியிருப்பார்? பிழைத்தேன்!" என்று சொல்லி மீண்டும் சிரித்தார் நரசிம்மவர்மர்.

பரஞ்சோதி அவரைப் பரிதாப நோக்குடன் பார்த்துக் கூறினார்: "பிரபு! இது ஏதோ சிரிப்பதற்குரிய விஷயமாக நினைக்கிறீர்கள். உண்மையில் அப்படியல்ல. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு ஆகையால், என் தாயார் நான் கல்வி கல்லாமல் திரும்பி வந்திருப்பதைப் பொறுக்கிறாள். ஆனால் என் மாமாவைக் கேளுங்கள். படிப்பில்லாத இந்த மூடனுக்கு அவர் தமது மகளைக் கட்டிக் கொடுப்பாரா என்று கேளுங்கள்!...."

நமசிவாய வைத்தியரும் அந்தப் பரிகாசப் பேச்சில் கலந்து கொள்ள எண்ணி "என்னைக் கேட்பானேன்? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணையே கேளுங்களேன்? அவளுக்குச் சம்மதமாயிருந்தால் எனக்கும் சம்மதந்தான்!" என்றார்.


அச்சமயம் ஏதோ கதவு திறந்த சத்தம் கேட்கவே எல்லாரும் அந்தப் பக்கம் நோக்கினார்கள். உமையாள் கதவைத் திறந்து கொண்டு உள் அறைக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

"எல்லாரும் சேர்ந்து பரிகாசம் செய்தால், குழந்தை என்ன செய்வாள்?" என்று உமையாளின் தாயார் முணுமுணுத்தாள்.

பிறகு நமசிவாய வைத்தியர், சக்கரவர்த்தி குமாரரைப் பார்த்து, "பரஞ்சோதியின் பராக்கிரமச் செயல்களைக் குறித்து அடிக்கடி கேள்விப்பட்டுக் கொண்டுதானிருக்கிறோம். அவனால் இந்தச் சோழ நாடே பெருமை அடைந்திருக்கிறது. மறுபடியும் இந்தப் பக்கம் எப்போது வருவானோ என்னவோ என்று எல்லாரும் ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். ஏதோ எங்கள் அதிர்ஷ்டம் இவ்வளவு சீக்கிரத்தில் அவன் இங்கு வரலாயிற்று. அவனோடு தாங்களும் விஜயம் செய்தது, எங்கள் பூர்வ ஜன்ம தவத்தின் பலன் என்றுதான் சொல்ல வேண்டும். புவிக்கரசராகிய தாங்கள் வந்திருக்கும் சமயத்தில் நாவுக்கரசர் பெருமானும் இவ்வூருக்கு வந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட நல்ல சந்தர்ப்பம் மறுபடி எங்கே கிடைக்கப் போகிறது? இப்போதே ஒருநாள் பார்த்துச் சுப முகூர்த்தத்தில் விவாகத்தை நடத்தி விடுவோம். உமையாளையும் உங்களுடனேயே அழைத்துப் போய் விடுங்கள்!" என்று நமசிவாய வைத்தியர் கூறி நிறுத்தினார்.

அப்போது மாமல்லர், "பார்த்தீரல்லவா தளபதி! எப்படியும் உமக்குக் கல்வி கற்பித்துப் புலவராக்கி விடுவது என்று வைத்தியர் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகிறது. வேறு எந்த உபாயமும் பயன்படாமற் போகவே, அவருடைய மகளைக் கொண்டே உமக்குக் கல்வி போதிக்கத் தீர்மானித்திருக்கிறார். ஆகா! கடைசியாக, நீர் அடித்துத் துரத்த முடியாத உபாத்தியாயர் ஒருவர் உமக்கு ஏற்படப் போகிறாரல்லவா?" என்றதும் ஸ்திரீகள் உள்பட எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

பிறகு, குமார சக்கரவர்த்தி நமசிவாய



வைத்தியரைப் பார்த்து, “ஐயா! அதெல்லாம் முடியாது. பல்லவ சாம்ராஜ்யத்தின் வீர தளபதிக்குத் தலைநகரத்திலே சக்கரவர்த்தியின் முன்னிலையிலேதான் கல்யாணம் நடைபெற வேண்டும். இது என் தந்தையின் ஆக்ஞை. காஞ்சிக்கு நாங்கள் போனவுடனே ஆள் விடுகிறோம், எல்லாரும் வந்து சேருங்கள். இன்னும் ஒரு விஷயமும் சொல்லி வைக்கிறேன். அப்படி ஒருவேளை உங்களுடைய குமாரி கல்வி கேள்விகளில் வல்ல புலவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் அதற்கும் வழி இருக்கிறது. காஞ்சியில் எங்கள் குலகுரு ருத்ராச்சாரியார் இருக்கிறார்; வயது தொண்ணூறுதான் ஆகிறது. தாடி ஒரு முழ நீளத்துக்குக் குறையாது. அவர் அறியாத கலையோ அவர் படியாத ஏடோ ஒன்றும் கிடையாது. அவரை வேண்டுமானாலும் உங்கள் புலமை மிகுந்த மகளைக் கல்யாணம் செய்து கொள்ளச் செய்கிறேன்!” என்று பலத்த சிரிப்புக்களிடையே கூறி விட்டு, “தளபதி! வாரும், போகலாம்! திருநாவுக்கரசரைத் தரிசித்து விட்டு வரலாம்!” என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.



மாமல்லரும் பரஞ்சோதியும் நாவுக்கரசர் பெருமானை அவர் தங்கியிருந்த திருமடத்தில் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தவுடன், பரஞ் சோதியின் தாயார் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு, “இங்கே வா, தம்பி! ஒரு சமாசாரம்!” என்று உள் அறைக்கு அவரை அழைத்துக் கொண்டு போனாள்.

அங்கே தரையில் படுத்துத் தேம்பிக் கொண்டிருந்த உமையாளைக் காட்டி, “பார்த்தாயா உன்னுடைய பரிகாசப் பேச்சு இந்தப் பெண்ணை என்ன பாடுபடுத்தியிருக்கிறது! இப்படி செய்யலாமா, அப்பா!” என்றாள்.

பரஞ்சோதி மனம் இளகியவராய், “ஐயோ! இது என்ன பழி; நான் ஒன்றும் பரிகாசம் செய்யவில்லையே?” என்றார்.

“செய்ததையும் செய்துவிட்டு இல்லை என்று சாதியாதே! இந்தக் குழந்தை என்ன சொல்லுகிறாள் தெரியுமா? நீ காஞ்சிப் பட்டணத்துக்குப் போய் அரண்மனை உத்தியோகமும் சக்கரவர்த்தியின் சிநேகிதமும் சம்பாதித்துக் கொண்டாயாம். இந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டம் இல்லையாம். அதனாலேதான் இப்படியெல்லாம் பேசுகிறாயாம்!”

“ஐயோ! அப்படி இல்லவே இல்லை, அம்மா!”

“இல்லையென்றால் நீயே இந்தப் பெண்ணுக்குச் சமாதானம் சொல்லித் தேற்று. நான் எவ்வளவோ சொல்லியும் இவள் கேட்கவில்லை!” என்று கூறிவிட்டு, பரஞ்சோதியின் தாயார் வெளியேறினாள்.

அன்னையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பரஞ்சோதி உமையாளைத் தேற்றத் தொடங்கினார். ஆனால் உமையாள் அவ்வளவு சீக்கிரம் தேறுகிறதாகக் காணவில்லை. வெகு நேரம் பரஞ்சோதி தன்னைத் தேற்ற வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டதாகத் தோன்றியது. தேறுவது போல் ஒருகணம் இருப்பாள், மறு கணத்தில் மறுபடியும் விம்மவும் விசிக்கவும் தொடங்கி விடுவாள். உமையாள் பட்டணத்து நாகரிகம் அறியாத பட்டிக்காட்டுப் பெண்தான். ஆனபோதிலும் தன்னுடைய மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உபாயம் அவளுக்குத் தெரிந்திருந்தது. பரஞ்சோதி சீக்கிரம் வெளியில் போவதற்கு முடியாத வண்ணம் வெகுநேரம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியத்தை அவள் உண்டு பண்ணிக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு நீளமான நாடகத்துக்கும் ஒரு முடிவு உண்டு அல்லவா? அவ்விதம் இந்தப் பொய்ச் சோக நாடகத்துக்கும் முடிவான மங்களம் பாட வேண்டிய சமயம் வந்த போது உமையாள் பரஞ் சோதியிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாள். தன்னையே அவர் மணந்து கொள்ள வேண்டும் என்பதாகத்தான்.

அவ்வாறு சத்தியம் செய்து கொடுத்த பின் பரஞ்சோதி கூறினார்: “ஆனால், உமா! ஒன்று சொல்கிறேன், நம் கல்யாணம் உன் தந்தை சொன்னது போல் அவ்வளவு சீக்கிரமாக நடைபெறாது. வெகு காலம் நீ காத்திருக்க வேண்டியிருக்கலாம். என் சிநேகிதர் மாமல்லருக்கு எப்போது திருமணம் நடக்கிறதோ, அப்போதுதான் நமது கலியாணமும் நடைபெறும். அவருக்கு முன்னால் நான் இல்லறத்தை மேற்கொள்ள மாட்டேன்!”

“தங்களுக்காக அவசியமானால் யுக யுகமாக வேண்டுமானாலும் காத்திருக்கிறேன்!” என்றாள் உமா.

(சபதம் தொடரும்)




## சூழல் காத்தல் தேசம் காத்தல்

நமது சுற்றுச்சூழல் நாளுக்குநாள் மோசமடைந்து வருகின்றது. நிலம், நீர், காற்று என அனைத்தும் மாசடைந்து வருகின்றன. சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதில் மனிதனின் நடவடிக்கைகள் பெரும் பங்கு வைக்கின்றன. நாம் மட்டுமல்ல, நம் சந்ததியினரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது நம் சுற்றுச்சூழலாகும். அதனைக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

சூரியனிடமிருந்து தேவையான ஆற்றலை பூமி பெறுகிறது. கார்பன் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்கள் வாயு மண்டலத்தில் பரவி உள்ளன. இந்த வாயுக்கள் பசுமை இல்ல வாயுக்கள் என்று அழைக்கப்படுகின்றது. இதில் வெளிப்படும் வாயுக்களை பூமி பாதி அளவு எடுத்து க் கொள்ளும்.

தற்போது மாறிவரும் பருவநிலையால் மழை சரியாகப் பொழிவதில்லை. அதாவது, அதிகமாகவோ குறைவாகவோ பொழிகிறது. அண்டார்டிகாவில் பனி உருகிவருகிறது. இயற்கை சீற்றங்களும் ஏற்பட காரணமாகிறது. ஓசோன் படலம் விரிசல் அடைவதற்கும் முக்கியக் காரணம் காற்றில் வெளிப்படும் குளோரோ புளோரோ கார்பன், மீத்தேன் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி முன்னேற்றம் அடைந்திருந்தாலும் அதை பயன்படுத்தும் நாம் சுற்றுச்சூழல் மாசடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 'சுற்றுச்சூழல் அமைப்பின் மறுசீரமைப்பு' என்ற கோட்பாட்டை ஐ.நா. சபை அண்மையில் அறிவித்துள்ளது.

மறு சீரமைப்பு என்பது சுற்றுச்சூழல் மோசமடைவதை தடுப்பது என்பதாகும். சமீப காலமாக பிரேஸில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்பட பல நாடுகளை புரட்டி போட்ட காட்டு தீ, ஆப்பிரிக்காவை அச்சுறுத்திய வெட்டுக்கிளி தாக்குதல் மற்றும் உலகையே உலுக்கிய கொவைட் 19 என பல அபாயங்களை சந்தித்து வருகிறோம்.

புவி வெப்பமயமாதலும் உலகை அச்சுறுத்தி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடினால் மட்டும் போதாது. உலகில் உள்ள மரங்களில் முக்கால் பங்கு மரங்கள் உயிரினங்களின் இருப்பிடமாகும். கரிமில வாயு வை உள்வாங்கி, நமக்கு உணவு, எரிபொருள், மருந்து எல்லாவற்றையும் அளித்து வருபவை காடுகள்தான்.

அரசு சுற்றுச்சூழல் நலனைக் கருத்தில் கொண்டு சுற்றுலாத் தலங்களை காடுகளில் அமைப்பதை தவிர்க்க வேண்டும். மனிதர்களைத் தவிர வேறு எந்த உயிரினத்தாலும் பூமிப்பந்திற்கு பாதிப்பு இல்லை. சூழல் காக்க உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் முன் வர வேண்டும்.

இன்றைய மனிதர்கள் அனைத்தையும் விலைபொருளாக பார்க்கின்றனர். விரைவில்






# காக்க

## ரெ. சுப்பா ராஜு

சுவாசிக்கும் காற்று விற்பனைக்கு வரலாம். இப்போதே பெருநகரங்களில் ஆக்சிஜன் பார்கள் வந்துவிட்டனவாம். வாகனப் பயன்பாட்டைக் குறைத்தால் சுற்றுச்சூழல் மேம்படும். புகை கக்கும் வாகனங்களுக்கு பதிலாக மிதிவண்டியை கூடுமானவரை பயன்படுத்தலாம் இதனால் சூழல் காக்கப்படுவதுடன் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

செய்தித்தாள் ஒன்றை ஒன்பது முறை மறுசுழற்சி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். எனவே செய்தித்தாள்களை மறுசுழற்சி செய்வது மூலம் மரங்கள் வெட்டப்படுவதை தவிர்க்கலாம் என்று சொல்லப்படுகிறது. அனைத்துத் துறையிலும் மறுசுழற்சி மறுபயன்பாடு என்ற வழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.




சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் குறைந்தபட்சம் புகை வாகனங்களைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் பிறந்த நாளுக்கு ஒரு மரம் நட வேண்டும். நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டை படிப்படியாகக் குறைத்து தவிர்க்க வேண்டும். மின்னணுக் கழிவுகளைகளையும் நெகிழி கழிவுகளையும் மண்ணில் வீசி விடாமல் முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

கடலில் கழிவுப் பொருட்களைக் கொட்டுதல் கூடாது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. காடுகளிலும் நெகிழிப் பொருட்களையும் கண்ணாடித் துண்டுகளையும் போடுதல் கூடாது. இதனால் விலங்குகளுக்குப் பெரும் கெடுதல் ஏற்படுகிறது. மேலும், காட்டுத்தீ ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

பொருட்களை வாங்க கடைக்கு செல்லும் பொழுது துணிப்பைகளைக் கொண்டு செல்ல வேண்டும். உணவுகளை எடுத்துச் செல்லும்போது பாத்திரங்களை பயன்படுத்துங்கள். நீர் குப்பிகளைத் தவிர்த்து விடுங்கள். உலோக நீர் பாட்டில் எடுத்துச் செல்லுங்கள். ஒரு நுகர்வோராக உங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படுவதன் மூலம் நீங்கள் மகத்தான மாற்றத்தை உண்டாக்க முடியும்.

‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’ என்பது போல் நமது




நிலப்பரப்புகளையும் கொண்டமைந்துள்ளது.மேலும் புதுப்பிக்க முடியா வளங்களாகிய கனிமங்கள், எரிபொருட்கள் போன்றனவற்றையும் உள்ளடக்கியுள்ளது. அந்த இயற்கைச் சூழலில் பல்வேறுபட்ட உயிரினங்கள், மனிதர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிர்களும் இயற்கையோடு இணைந்த வாழ்வினை வாழ்ந்து வருகின்றன.

கணக்கிட முடியா பேருயிர்களையும், சிற்றுயிர்களையும் தன்னகத்தே கொண்டமைந்த இயற்கையை பேணி பாதுகாத்தால் மட்டுமே பூமியின் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்க முடியும். நாம் வாழும் சூழலானது ஆரோக்கியமாக இருந்தால் மாத்திரமே நீண்ட காலம் நீடித்து வாழ முடியும். இயற்கையின் அரும்பெரும் கொடைகளை உள்ளடக்கிய சூழலானது பல்வேறுபட்ட காரணிகளால் மாசடைதலிற்கு உட்படுகின்றது. பல்வேறு மனித நடவடிக்கைகளே பெரும்பாலும் மாசடைதலை ஏற்படுத்துகின்றன.

சூழல் மாசடைதலை நீர் மாசடைதல், நிலம் மாசடைதல், வளி மாசடைதல் என வகைப்படுத்தலாம். நீரானது தாவரங்களினதும், உயிரினங்களினதும் வாழ்தகமைக்கு மிக அவசியமானது. பூமியின் எழுபத்தைந்து வீதமான பரப்பு நீரினாலே சூழப்பட்டுள்ளது. இந்த நீரானது தொழிற்சாலைக் கழிவுகளை நீர்நிலைகளில் கொட்டுவதாலும், கிருமி நாசினிகளை

சுற்றுச்சூழலைக் காப்பதும் மாசுபடுத்துவம் நாம்தானே! நெகிழி பைகளைத் தவிர்ப்பதன் மூலம் நெகிழிக் கழிவு உற்பத்தியாகும் தொடர் சங்கிலி துண்டிக்கப்படுகிறது.

ரசாயன விவசாயத்தில் மண் வளம் பாதிக்கப்படுவதுடன் சுற்றுச்சூழலும் மனித ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. மரங்களின் வெளிமூச்சு மனிதனின் உயிர் மூச்சாகிறது என்பதை நாம் உணர வேண்டும். இறந்தவர்களைப் புதைக்கின்ற இடங்களில் ஒரு மரம் நட்டால் சில மாதங்களில் அங்கு மரச்சோலை உருவாகும் .

மாண்டவரே மரமாக ஓங்கி வளர்ந்துஉயிருடன் வளர்கிறார் என்ற உணர்வுபூர்வமான திருப்தி கிடைக்கும். வேளாண் காடுகளையும் நாம் அதிகமாக வளர்க்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்பிற்கான தீர்வை பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும.

மலைப்பகுதிகளையும்தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எவரெஸ்ட் போன்ற மலை சிகரங்களில் ஏறுபவர்கள் கூட தாங்கள் பயன்படுத்திய பொருட்களை அங்கு வீச அனுமதி இல்லை. தாங்களே கீழே உள்ள முகாமுக்கு வரும் பொழுது அவற்றைக் கொண்டு வர வேண்டும் என்பதை விதி ஆகும். எனவே, சூழல் காப்போம்; தேசம் காப்போம்.

சுற்றுச்சூழல் எனப்படுவது எம்மைச் சுற்றியுள்ள இயற்கைப் பரப்பாகும். இவ் இயற்கையானது காடுகள்,கடல்கள் மற்றும் பல்வேறு






விவசாயத்திற்குப் பயன்படுத்தும் போது அவை நீரில் கலப்பதாலும் மாசடைகின்றது.

நிலமானது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் குப்பைகளை நிலத்தில் புதைப்பதாலும், சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவதாலும் மாசடைதலிற்கு உட்படுகின்றது. மேலும் அனைத்து உயிர்களின் சுவாசத்திற்கு இன்றியமையாததாக விளங்கும் வளியானது வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் புகையினாலே அதிகளவில் மாசுபடுகின்றது. இவ்வாறு சுற்றுச்சூழலில் காணப்படும் இயற்கை வளங்களானவை மனித செயற்பாடுகளினால் அழிவிற்கு உள்ளாகின்றன.

சூழலைப் பாதுகாப்போம்

அதிகரித்து வரும் மாசடைதலானது தாவர மற்றும் விலங்கு உயிர்ப் பல்வகைமையையும், ஏனைய உயிர்களின் நீடித்ததன்மையையும், மனித இனத்தின் வாழ்தகைமையும் கேள்விக் குறியாக மாற்றியுள்ளது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமாயின் சூழலானது அதன் உயிர்த்தன்மை மாற்றமடையாதவாறு பாதுகாக்கப்படல் வேண்டும். சூழல் பாதுகாப்பு எனப்படுவது நிலம், நீர், வளி உட்பட அனைத்து இயற்கை வளங்களையும் பாதிக்காதவாறு மனித நடவடிக்கைகளை மேற்கொள்வதையும், அருகிவருகின்ற புதுபிக்கக் கூடிய வளங்களை மீள உருவாக்குவதையுமே குறிப்பிடுகின்றது.

தற்போதைய அவசர உலகில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது. இவை சூழலிற்கு மட்டுமின்றி மனிதர்களிற்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்தவல்லன. எனவே இவற்றைத் தவிர்த்து கடதாசி மற்றும் துணிப்பைகளையும், கண்ணாடி மட்பாண்டப் பொருட்களையும் பயன்படுத்த வேண்டும். அத்துடன் வேளாண்மை நடவடிக்கைகளின் போது இரசாயன கிருமி நாசனிகள், செயற்கைப் பசளைகள் போன்றவற்றை தவிர்த்து இயற்கை உரங்களையும், பூச்சி நாசினிகளையும் பயன்படுத்த வேண்டும். இதனால் நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் இரசாயனங்கள் ஏதுமற்று எமக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை பெற்றுத் தரும்.

சூழல் பாதுகாப்பு நடைமுறைகள்

மனித நடவடிக்கைகளால் சூழலிற்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக சர்வதேச ரீதியிலும் நாடுகள் அதன் தனிப்பட்ட ரீதியிலும் பல்வேறு சட்ட திட்டங்களை இயற்றியுள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்து பல்வேறு மாநாடுகள் நடாத்தப்பட்டு, நாடுகளிற்கிடையில் ஒப்பந்தங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் கியோட்டா உடன்படிக்கை, வியன்னா மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஓசோன் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கை போன்றன முக்கியமானவையாகும். அமெரிக்கா, மற்றும் நோர்வே போன்ற நாடுகள் சூழலிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் குளோரோ புளோரோ காபன், மெதேன் போன்றவற்றின் பயன்பாட்டில் கடுமையான சட்டதிட்டங்களை ஏற்படுத்தியுள்ளன. அனைத்து உயிர்களினதும் வாழ்விடமாகவுள்ள சூழலை பேணிப்பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

சிறுவயது முதலே சிறுவர்களிற்கு சூழல் பாதுகாப்பின் அவசியத்தை கற்றுத்தருவதோடு, மக்களிடையே சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

சூழலை பாதிக்காத வகையில் எமது செயற்பாடுகளை மேற்கொண்டு இயற்கை வளங்களை பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்போமாக.




## பிரமிக்க வைக்கும் நீர்ப்பிரமி

இ மருத்துவ குணங்கள் நிறைந்த அத்திப்பழத்தின் பயன்களை அறிவோம்...!

அத்திப்பழம் மருத்துவ குணங்கள் நிறைந்த பழமாகும். குறிப்பாக, சர்க்கரை நோய், சர்க்கரைப் புண், உடல் வீக்கம், கட்டிகள் நீர்க்கட்டிகள், புண், சொறி சிரங்கு, நமைச்சல் போன்ற பாதிப்புகள் உள்ளவர்களுக்கு அத்திப் பழம் மிகச் சிறந்த பலன் தருகிறது.

அத்திப்பழம் உனவை சீரணிக்க செய்து சுறுசுறுப்பைத் தந்து, பித்தத்தை வியர்வை மூலம் வெளியாக்கி, ஈரல், நுரையீரலிலுள்ள தடுப்புகளை நீக்குகிறது. அத்திப் பழத்தைத் உண்பதால் வாய்நாற்றம் நீங்குவதுடன் தலை முடியும் நீளமாக வளர்கிறது.

அத்திப்பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும்.

போதை பழக்கம் மற்றும் இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப் பழங்களைக் காடியில் ஒருவாரம் வரை ஊறவைத்து அதனைத் தினமும் இரண்டு பழங்கள் வீதம் ஒரு வேளை சாப்பிடலாம். சிறுநீர்ப்பைப் புண், சிறுநீர்ப் பையில் கல் தோன்றுதல், ஆஸ்துமா, வலிப்பு நோய், உடல் உளைச்சல், சோர்வு, அசதி, இளைப்பு போன்றவற்றை நீக்கவும் அத்திப் பழம் மிகச் சிறந்த பலன் தருகிறது.

அத்திப்பிஞ்சை பருப்புடன் கூட்டாகச்செய்து 10—20 நாள் சாப்பிட உள் மூலம், வெளிமூலம், குடல் தள்ளல் ஆகிய நோய்கள் குணமாகும். பூண்டு, மிளகு, மஞ்சள் கூட்டில் சேர்க்க வேண்டும். பொரியலாகவும் சாப்பிடலாம். உலர்ந்த

அத்திப் பழங்களில் அதிக நார்ச்சத்து இருக்கும். குறைவான நீர்ச்சத்து இருக்கும். அத்திப்பழங்களில் வேறு எந்தப் பழத்திலும் இல்லாத அளவு கால்சியம் சத்தும், நார்ச்சத்தும் உள்ளது.

அத்திப்பழத்தில் அடங்கியிருக்கும் அதிசய ஆரோக்கிய நன்மைகள் பற்றி இங்கு அறிந்து கொள்ளலாம்.

அத்தி மரம் மிகுந்த மருத்துவ குணம் நிறைந்தது. அத்தி மரத்தின் இலை ,பிஞ்சு ,காய் ,பழம் ,பால் , பட்டை போன்ற அனைத்து பாகங்களும் ஆரோக்கிய பலன்களை அள்ளி வழங்கும் தன்மை









கொண்டன.

அத்திப்பழங்கள் மிகவும் சுவையானது.அதேசமயம் ஆரோக்கியமானதும் கூட. அத்தி பழம் இரு வகைப்படும். இவற்றை சீமை அத்தி மற்றும் நாட்டு அத்தை என்று குறிப்பிடுவார்கள். அத்தி பழங்கள் கொத்துக் கொத்தாக மரத்தின் பல்வேறு இடங்களிலும் காய்த்துத் தொங்கும். ஒரே அத்தி மரத்தில் 180 முதல் 300 அத்தி பழங்கள் வரை காய்க்கும்.

இந்த அத்திப்பழங்களைப் பச்சையாகவோ அல்லது உலர வைத்தோ சாப்பிடுவதால் பல நல்ல பயன்கள் கிடைக்கும்.இந்த பழங்களை உலரவைத்துப் பயன்படுத்தும் போது வெகுநாட்கள் வரை வைத்துச் சாப்பிட்டுக் கொள்ளலாம்.

அத்தி பழங்களில் என்னென்ன வைட்டமின்கள் மற்றும் மினரல்கள் உள்ளன என்று முதலில் பார்க்கலாம்.

வைட்டமின் ஏ
வைட்டமின் சி
வைட்டமின் பி
வைட்டமின் கே
பொட்டாசியம்
மெக்னீசியம்
இரும்புச்சத்து
காப்பர்
ஜிங்க்
மான்கனீஸ்
உள்ளிட்ட பல்வேறு சத்துக்கள் நிறைந்துள்ளன.

அத்தி பழம் தரும் நன்மைகள் என்ன?

வாய் துர்நாற்றம் நீங்கும்

அத்தி பழங்களை சாப்பிடுவதன் மூலம் வாயில் உள்ள கிருமிகள் அளிக்கப்படும். இதனால் வாயில் ஏற்படும் துர்நாற்றம் நீங்கும். நெடுநாளாக இது மாதிரி தொந்தரவு உள்ளவர்களுக்கு அத்தி பழம் ஒரு நல்ல தீர்வை அளிக்கும்.

டாக்டர்
ஜெயச்சந்திரன்

கொழுப்பு கிடையாது

அத்தி பழங்களில் கொழுப்புச்சத்து கிடையாது. உடல் எடை குறைய வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் இந்த அத்திப்பழங்கள் சிறந்த தேர்வாகும்.மேலும் இந்த பழங்கள் கெட்ட கொழுப்பை குறைக்க உதவுகின்றன.

நார்ச்சத்து நிறைந்தது

ஒரு அவுன்ஸ் காய்ந்த அத்திப்பழங்களில் 300 கிராம் நார்ச்சத்து உள்ளது. இந்த நார்ச்சத்து மலச்சிக்கலைச் சரிப்படுத்த உதவும். அத்திப்பழங்களை சாப்பிட்டால் வயிறு நிறைந்த






உணர்வு நெடுநேரம் இருக்கும். குழந்தைகளுக்கு இந்த பழங்களை தருவதன் மூலம் அவர்கள் நாள் முழுவதும் உற்சாகமாகச் செயல்படுவர். ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்க உதவும்

அத்தி பழங்கள் ரத்தத்தின் சர்க்கரை அளவை சீராக வைத்துக் கொள்ள மிகவும் உதவுகின்றது. மேலும் இந்த அத்தி பழங்கள் இன்சுலின் செயல்பாட்டைச் சிறப்பாக மேம்படுத்துகிறது. அத்திப் பழங்கள் சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றுதான் கூறவேண்டும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் இந்த பழங்களை சாப்பிடுவதன் மூலம் ரத்தத்தின் சர்க்கரை அளவை சரியான முறையில் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

சருமம் நலம் காக்கும்

எக்சிமா, சோரியாசிஸ் போன்ற பல்வேறு சரும பிரச்னைகளுக்கு அத்திப்பழம் மருந்தாகச் செயல்படுகின்றது. அத்திப்பழங்ளை எடுத்துக் கொள்வதன் மூலம் தோலில் ஏற்படும் வெண் புள்ளிகள், வெண்குஷ்டம் போன்ற பல பிரச்னைகள் குணமாகும். மேலும் இவற்றை அவ்வப்போது சாப்பிடுவதன் மூலம் சருமம் பொலிவடையும், முகம் பிரகாசமாகும்.

வயதான தோற்றம் ஏற்படாது

அத்தி பழத்தில் உள்ள ஆன்டி—ஆக்ஸிடெண்ட்கள் உடலில் உள்ள கழிவுகளை அகற்றப் பெரிதும் உதவுகின்றன.இந்த செயல்பாட்டால் அத்தி பழத்தைத் தினம் எடுத்துக் கொள்பவருக்கு வயதான தோற்றம் சீக்கிரம் தோன்றாது. இது அத்தி பழத்தின் சிறந்த குணமாகக் குறிப்பிடலாம்.

முடி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்

அத்தி பழங்களில் நிறைந்துள்ள ஜிங்க் சத்து முடியில் ஏற்பட்டுள்ள பிளவுகளைக் குணப்படுத்த உதவும். குறிப்பாக மெனோபாஸ் காலத்தில் பெண்களுக்கு அதிகமாக முடி உதிர்தல் பிரச்னை இருக்கும். அந்த சமயங்களில் அத்தி பழங்களைச் சாப்பிடுவதன் மூலம் முடி கொட்டுதலைத் தவிர்த்துக் கொள்ளலாம். ரத்த உற்பத்தி அதிகரிக்கும்

அத்தி பழங்களைச் சாப்பிடுவதன் மூலம் உடலில் இரத்த உற்பத்தி மேம்படும். ஆக இதன் மூலம் ரத்தசோகை போன்ற வியாதிகள் விரட்டி அடிக்கப்படும்.

கல்லீரல் வீக்கம் குணமாகும்

இந்த பழங்களைத் தொடர்ச்சியாக எடுத்துக்கொள்வதன் மூலம் கல்லீரல் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தீரும். குறிப்பாகக் கல்லீரல் வீக்கம் ஏற்பட்டு இருந்தால், அது பூரணமாக நிவாரணம் அடையும்.

பித்த பிரச்னை தீரும்


அத்தி மரத்தின் இலைகளைப் பறித்து சுத்தம் செய்து உலர வைக்கவும். இவற்றைக் காயவைத்து பொடியாக்கி, தேனில் கலந்து சாப்பிட்டு வர பித்தம் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளும் குணமடையும்.

ரத்த அழுத்தம் சீராக இருக்கும்

ஆரோக்கியமான வாழ்வுக்கு ரத்த அழுத்தம் சீரான நிலையில் இருக்க வேண்டும். ரத்த அழுத்தம் அதிகமாகும் பட்சத்தில் பல்வேறு பிரச்னைகளைச் சந்திக்க நேரிடும். இதற்குத் தீர்வாக அத்தி பழங்கள் உள்ளன. இதில் உள்ள பொட்டாசியம் சத்தானது ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க உதவுகின்றது.

புற்றுநோய் வராது

இன்று அத்தி பழங்களை குறித்து பல்வேறு ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆய்வுகளின் மூலம் கிடைக்கப் பெற்றவரோ முத்தாய்ப்பான தகவல் தான் இந்த விஷயம். அதாவது அத்தி பழங்களை சாப்பிட அவர்களுக்குப் புற்றுநோய் அபாயம் கிடையாது. குறிப்பாகப் பெண்களுக்கு மார்பக புற்று நோய் வராது.




தலைமுடி வளர்ச்சி சிறப்படையும்

அத்தி பழத்தில் நிறைந்துள்ள விட்டமின் சி மற்றும் விட்டமின் ஏ சத்து மூடியின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவசியமானது. இதில் உள்ள மெக்னீசியம் சத்து தலைமுடியின் வளர்ச்சியை அதிகப்படுத்தும். அத்தி பழங்களைச் சாப்பிடுவோருக்கு முடியின் நீளம் அதிகரிக்கும் என்பது உறுதி.

கண்பார்வை சிறக்கும்

அத்தி பழங்களில் கண்களுக்கு அவசியமான விட்டமின் ஏ ,நிக்கோடினிக் அமிலம் மற்றும் அஸ்கார்பிக் அமிலம் அதிகளவு காணப்படுகின்றது. இவற்றைச் சாப்பிடுவதன் மூலம் கண் வளம் மேம்படும். குறிப்பாகக் குழந்தைகளின் கண் பார்வை சிறப்பாக இருக்க அவர்களுக்கு இந்த பழங்களைத் தினமும் சாப்பிடத் தருவது மிகவும் நல்லது.

எலும்புகள் பலமடையும்

இந்த பழங்களில் கால்சியம் சத்து உள்ளது. ஆக அத்தி பழங்களைச் சாப்பிடுவதன் மூலம் எலும்புகள் பலமடையும். மூட்டு வலி ,எலும்பு தேய்மானம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குணமடையும்.

நல்ல தூக்கம் கிடைக்கும்

அத்தி பழத்தில் விட்டமின் பி ,சி நிறைந்துள்ளன. ஆக இந்த பழத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் தூக்கமின்மை பிரச்சனை தீரும்.மேலும் இதில் உள்ள ட்ரிப்டோபன் என்னும் வேதிப் பொருள் தூக்கத்தை தூண்டும் தன்மை கொண்டது. இன்சோம்னியா போன்ற பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு அத்திப்பழம் அருமருந்தாகும்.

மூச்சுக்குழாய் அலர்ஜி குணமாகும்

அத்திப் பழங்கள் சாப்பிடுவதன் மூலம் மூச்சு குழாயில் உள்ள அசுத்தங்கள் குணமாகும். மேலும் இவை மூச்சுக்குழாய் ஆரோக்கியமாக இருக்க வழி வகுக்கும்.

நீர்ச்சத்து தக்க வைக்கப்படும்

அத்தி பழங்களில் நல்ல அளவு நீர்ச் சத்து உள்ளது. ஆக இந்த பழங்களைத் தினமும் சாப்பிடுவதன் மூலம் உடலில் நீர்ச்சத்தைத் தக்க வைத்துக் கொள்ளலாம்.

இதயம் சிறப்பாகச் செயல்படும்

இதய பிரச்னைகள் உள்ளவர்களுக்கு அத்திப்பழம் ஏற்றது. அத்திப் பழம் ரத்தத்தைச் சுத்திகரிக்கப் பெரிதும் வழிவகுக்கும். மேலும் இரத்த ஓட்டம் சீராக நடைபெற அத்தி பழம் உதவும். அந்த வகையில் இதய வியாதி உள்ளவர்களுக்கு அத்தி பழம் பல நன்மைகளைப் பயக்கும்.

இதைத் தவிர மேலும் அத்தி பழங்கள் செய்யும் பலன்கள்—

உடல் வீக்கம் குறையும்.

நீர்க் கட்டிகள் இருந்தால் சரியாகும்.

வாய்ப் புண் குணமடையும்.

ஆஸ்துமா பிரச்னை தீர உதவும்.

உடல் சோர்வு தீரும்.

வலிப்பு நோய்க்குச் சிறந்த மருந்து.

மூலநோய் குணமாகும்.

ஏன் அத்தி பழங்கள் பெரும்பாலும் உலர வைத்துச் சாப்பிடப்படுகின்றன?

அத்தி பழங்கள் நல்ல மணத்துடன் இருக்கும். இருப்பினும் இந்த பழங்களை அறுத்துப் பார்த்தால், அதற்குள் மெல்லிய பூச்சிகள் மற்றும் புழுக்கள் தென்படும். அதனால் பெரும்பாலும் அத்தி பழங்கள் அப்படியே சாப்பிடப்படுவதில்லை. ஆகவே தான் இந்த பழங்கள் உலர வைக்கப்பட்ட பின்னர் சாப்பிடப்படுகின்றன.



# தரம்

## முன்மாதிரியாக மாறுவோம்

கோடை நாள் ஒன்றின் மதியவேளை அது. எமது பள்ளியில் பயிலும் மாணவர் ஒருவர், தான் சாப்பிட்ட தட்டைக் கழுவிய பின்னர், தட்டில் கொஞ்சம் தண்ணீரைக் குழாயில் பிடித்து அருகிலிருந்த செடியில் கொட்டி விட்டுச் சென்றார்.

குழந்தைப் பருவம் தொடங்கி சிறார் பருவம் வரை அற்புதமான குணநலன்களுடன் தமது நாட்களை நகர்த்தும் இவர்கள்தானே பின்னாளில் இளையோராக ஆகின்றனர். இப்படி பொறுப்பானாரோய் வளரும் பலரும் எப்படி பொறுப்பில்லாதவர்களாக மாறுகின்றனர்? இதுவரை விடைகாண இயலாத புதிர்களுள் இதுவும் ஒன்று.


'இங்கே எச்சில் துப்பாதீர்கள்' என்ற எழுதப்பட்ட இடத்தைச் சுற்றி எச்சில் நிறைந்திருக்கும். பொது இடங்களின் மாடிப்படிகளில் திரும்பும் இடங்களில் வெற்றிலைப் பாக்கோ, பான் பாராக்கோ சுவைத்துத் துப்பிய கறை இருக்கும். குப்பைத் தொட்டியைச் சுற்றிலும் குப்பை கூளங்கள் நிறைந்திருக்க குப்பைத் தொட்டி சுத்தமாக இருக்கும்.

கழிவுநீர் செல்லும் கால்வாய்களில் நெகிழிப்பைகள், பாட்டில்கள் உள்ளிட்ட பலவும் மிதந்து செல்லும். ஒரு காலத்தில் அருமையாக ஓடிக்கொண்டிருந்த நீரோடைகள் பலவும் இன்று சாக்கடையாகக்காட்சியளிப்பதை நாம் வருத்தத்துடன் பார்த்து வருகிறோம். எந்த நகரில் பத்து நிமிடம் புழங்கினாலும் நமக்குக் காணக்கிடைக்கும் காட்சிகள் இவை.

நமது நாட்டின் சராசரி எழுத்தறிவு 77 சதவீதம் எனப் பெருமையோடு நாம் சொல்லிக் கொள்கிறோம். கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லை என்பது எழுதப்படாத சட்டமாகி விட்டதோ என்ற சந்தேகம் கூட எழுகிறது. சமூகத்தில் புழங்கும் பலருக்கும் ஒழுங்கீனமாக இருப்பதே ஒழுக்கம் என்ற நினைப்பு மாறும்வரை இதிலும் மாற்றமிருக்காது. விதிவிலக்குகள் இருக்கலாம்.

குப்பைகளை அவற்றிற்குரிய இடங்களில் போடுவது, கழிவுகளை உரிய முறையில் அகற்றுவது, கூடியவரை கழிவகளைத் தவிர்ப்பது போன்ற செயல்பாடுகள் எல்லாரும் எளிதில் கடைபிடிக்கக்கூடிய பழக்கங்களே. அதுபோலவே நெகிழிப் பொருள்களை மறுசுழற்சிக்கு உட்படுத்த உதவுவதும் எளிதில் கடைபிடிக்கக்கூடிய பழக்கமே.

தனிமனித ஒழுங்கு மட்டுமல்ல, சமூகச் சூழல் சார்ந்த சில ஒழுங்குகளும் உள்ளன. பிறரின் கருத்துக்கு செவி சாய்ப்பது, அவர்களின் கருத்து ஏற்கவியலாததாயினும் நம் எதிர்வினையை நயமாக





# நிரந்தரம்!

முனைவர்
**என். மாதவன்**

உரைப்பது, எப்போதும் எளிமையாக இருப்பது போன்ற குணநலன்களைக் குறிப்பிடலாம். இக்கால மனிதர்களிடம் இந்த குணநலன்கள் அரிதாகி வருகின்றன.


சமூகச் சூழல் என்பது, மக்கள் வாழுகின்ற, அல்லது ஏதாவது நடைபெறுகின்ற அல்லது உருவாகின்ற பௌதீக, சமூகப் பின்னணி அமைப்பு ஆகும். இது தனிப்பட்டவர்கள் கற்றுக்கொள்கின்ற அல்லது வாழுகின்ற பண்பாடு, அவர்கள் ஊடாடுகின்ற மக்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. தொடர்பாடல் நேரடியானதாகவோ, தொடர்பு ஊடகங்கள் வழியானதாகவோ இருக்கலாம். அடையாளம் காட்டாமலோ, ஒருவழித் தொடர்பாகவோகூட இருக்க முடியும். இது சமமான சமூகத் தகுதிநிலையோடு இருக்கவேண்டியது இல்லை. இதனால், சமூகச் சூழல் என்பது சமூக வகுப்பு, சமூக வட்டம் போன்றவற்றிலும் பரந்த கருத்துரு ஆகும்.

ஒரே சமூகச் சூழலைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலும் சமூக ஒருமைப்பாட்டு உணர்வை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அவர்கள் பெரும்பாலும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொள்வதுடன் உதவியும் செய்துகொள்வர். அத்துடன் அவர்கள் சமூகக் குழுக்களாகக் கூடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. முடிவுகள் வெவ்வேறாக இருக்கக்கூடும் ஆயினும், அவர்கள் பெரும்பாலும் ஒரே விதமாகவே சிந்திக்கின்றனர்.

தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக மக்கள் இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால், இயற்கைச் சூழலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனிதக் குடியிருப்புக்கள், சாலைகள், தோட்டங்கள், அணைகள், மற்றும் பல இவ்வாறாக உருவாகியுள்ளன. இவ்வாறான மனிதன் உருவாக்கிய கூறுகள் அனைத்தும் பண்பாட்டுச் சூழலில் அடங்குகின்றன. எர்விங் கோஃப்மன் என்பவர் தனிப்பட்ட சூழல்களின் சமூக இயல்பு குறித்துக் குறிப்பாக வலியுறுத்துகின்றார்.

எமில் டுர்கெயிம் சமூகச் சூழல் குறித்து ஒரு பரந்த நோக்கைக் கொண்டிருந்தார். இவர், சமூகச் சூழல் உள்ளமைந்த விதிமுறைகளையும் சமூகக் காரணிகளின் சார்பாண்மைகளையும் கொண்டிருப்பதாக வாதித்தார். நமது சமூகச் சூழல் நமது மனங்களில் மட்டுமே இருக்கக்கூடிய காரணிகளால் நிரம்பி இருப்பதாகத் தெரிகிறது.







பொதுவாக, ஒழுங்கின்மையாக வாழ்வதே பண்பாடு என்பது கற்பிக்கப்பட்டு விடுகிறது. இது பணியிடத்தில் மட்டுமல்ல. மாறாக பொதுவாழ்வில் இயங்கும் அனைவருக்குமான அடையாளமாகி வருகிறது. இது இன்னொரு ஆபத்தான போக்காகும். ஒவ்வொரு தேர்தலின் போதும், பணப்புழக்கம் இல்லாத தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் படும்பாட்ட நாம் நன்கறிவோம்.

பொதுவாழ்வில் நேர்மையாக இருப்பது, பணியாளர்களாயிருப்போர் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் இருப்பது, அன்றன்று முடிக்க வேண்டிய பணிகளை அன்றன்றே முடித்து விடுதல் போன்றவையும் நல்ல குணநலன்களாகும். இதற்கேற்ற வகையில் தேவையான எண்ணிக்கையில் பணியாளர்கள் நியமிக்கப்படவேண்டும் என்பதும் நியாயமே.

அதுபோலவே எந்த நிலையிலும் கையூட்டு பெறாமல் பணிபுரிவது, சக ஊழியர்களை நண்பர்களாக நடத்துவது போன்ற குணங்கள் ஒருசிலரிடம் மட்டுமே இருப்பதால் அவை அரிதான விஷயங்களாகப் பார்க்கப்படுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். சீரிய குணநலன்களைக் கொண்டோராக அனைவரும் மாற வேண்டும்.

இவ்வாறாகவாழ்வோர்க்குதமது பணி நிறைவாலும், அச்சமற்ற வாழ்க்கை முறையாலும் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது. இவ்வகையிலான ஆனந்தம் நிலையானது. எல்லாவற்றுக்கும் மேல் என்றென்றைக்கும் நினைத்து மகிழ உதவும் நல்ல நினைவுகளைத் தரவல்லது.

மாறாக, இன்று விரும்பத்தகுந்த குணநலன்களுடன் இருப்போர் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பதால் அவர்கள் பிறரின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகின்றனர். பொது ஒழுங்கிற்கு மாறாக இருப்போர் எண்ணிக்கை அதிகமாகிறது. இந்த எண்ணிக்கை அதிகமாவதால் கும்பல் மனப்பான்மை உண்டாகிறது. இதனால் நேர்மையாய் வாழ முயல்வோர் படும்பாடு சொல்லி மாளாது.





ஒழுங்கற்ற ஒரு அமைப்பிலோ, ஒரு தொடர் செயற்பாட்டிலோ ஒரு ஒழுங்கை தேடும் இயலை பற்றி விவரிப்பது தான் இந்த ஒழுங்கின்மைக் கோட்பாடு (Chaos Theory). இக்கோட்படானது உயிரியல், கணிதம், பொறியியல், மெய்யியல், இயற்பியல், அரசியல் மற்றும் உளவியல் போன்ற துறைகளில் பயன்படுகின்றது.

குழப்பவாதம் என்பது ஒழுங்கின்மையையும், எதிர்பாராத விளைவுகளையும் தன்னகத்தே கொண்டது. எதிர்பாராததை எதிர்பார்க்க கற்றுக்கொடுக்கும் ஒரு விஞ்ஞான வாதம். பெரும்பாலான பாரம்பரிய விஞ்ஞானங்கள் விளைவுகளை முன்னரே யூகிக்கக்கூடிய ஈர்ப்பு விசை, மின்சாரம் மற்றும் இரசாயன பரிசோதனைகள் போன்றவை குறித்து விளங்கங்களை தந்தவண்ணம் இருக்கையில் குழப்பவாதம் மாத்திரம் வானிலை, பங்குச்சந்தை மற்றும் மூளையில் ஏற்படும் உணர்ச்சி மாற்றங்கள் போன்ற அடிக்கடி மாற்றமடையும், முன்னறிவிப்பு செய்யமுடியாத விடயங்கள் பற்றிய ஆய்வுகளிலும், கணிப்புகளிலும் ஈடுபட்டுள்ள வண்ணம் காணப்படுகிறது.

“Coming together is a beginning; keeping together is progress; working together is success.”

–Henry Ford

குழப்பங்களுக்கு என்றும் குறைவில்லாத கணிதத்துறையின் ஒரு விளக்கமே குழப்பவாதம் (ஒழுங்கின்மை வாதம்). இந்த நடத்தையானது சிக்கலான, அதீத உணர்திறன் மிக்க எந்தவொரு அமைப்பிலும் ஏற்படும்.அது கணினியாகவும் இருக்கலாம், சமூகமாகவும் இருக்கலாம். ஒரு பல்தேசிய கம்பெனியும், அரசியல் தலைமையும் தங்களின் நலனுக்காக எடுக்கும் முடிவுகள் பொதுஜனத்தின் கழுத்துக்களை நெறிப்பதும், அடக்குமுறைகளுக்கு எதிராக எங்கேயோ ஒரு மூலையில் எழுப்பப்படும் வலுவான எதிர்ப்புக்குரல் ஒட்டுமொத்த உலகத்தையும் புதியதொரு பாதைக்கு அழைத்துச்செல்வதும் மேற்சொன்ன குழப்பவாதத்தின் வெளிப்பாடுகளே. சிறியதொரு மரம் நடுவதின் பயன்கூட இப்போது நமக்கு தெரியாது போகலாம், ஆனால் காலத்தின் வேகத்தில் அவை நிச்சயமாக பெரும் அர்த்தத்தை வழங்கும். சிரியதோ அல்லது பெரியதோ அளவுகள் என்பது எப்போதும் முக்கியம் பெறுவதில்லை. சமூகத்திற்கு நலம் பயக்கும் விடயம் ஒன்று இருக்குமெனில் தயக்கமின்றி அச்செயலை செய்யலாம். இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் அவை உலகுக்கு நன்மை செய்யக்கூடும்.




எப்படி இதனை சரி செய்யப்போகிறோம்? இது மாற்ற இயலாதது இல்லை. ஆங்காங்கே பல நல்ல முயற்சிகளும் மேற்கொள்ளப்படாமல் இல்லை. அவ்வாறு நல்ல முயற்சிகளில் ஈடுபடுவோர், பெருகிவரும் தகவல் தொடர்புகளின் மூலம் ஓர் இணைப்புடன் செயல்பட முயல வேண்டும்.

இதன் மூலம் நாம் மட்டுமல்ல நம்மைப் போலவே நல்ல குணநலனுடன் பலரும் சேவை செய்கின்றனர் என்ற பாதுகாப்பு உணர்வுடனும், பயமற்றும் பலர் செயல்பட இயலும். இதன் மூலம் சமூகத்தின் நன்மைக்குத் தேவையான ஒழுங்குடன் வாழ்வதைப் பெருமிதமாகக் கருதுவோர் எண்ணிக்கை அதிகமாகும்.

நாம் காட்டுமிராண்டி சமூகத்திலிருந்து பல மடங்கு நாகரிக ரீதியாக முன்னேற்றமடைந்துவிட்டோம் என்பது உண்மையே. ஆனால், நவீன உடை உடுத்துவதையும் , சமைக்கப்பட்ட உணவை பாதுகாப்பான கூரையின் கீழ் அமர்ந்து சிந்தாமல் உண்பதையும மட்டுமே நாகரிகம் என்றும் ஒழுங்கு என்றும் கொள்ள இயலுமா?

இப்படியொரு கேள்வி எழும்போதுதான் நாகரிக சமூகத்தின் அடுத்தடுத்த படிகள் கவனம் பெறுகின்றன. சமூகம் எதிர்பார்க்கும் ஒழுங்குகளோடு வாழ்வதை மனிதர்கள் பெருமிதமாக எண்ணும் காலம் கனியவேண்டும். அடுத்தவர்கள் போல் வாழ முயலாமல் நம் மனத்துக்கு சரி என்றுபட்டதை மகிழ்வோடு செய்ய வேண்டும்.

இவை எளிதானதல்ல; ஆனால் முயன்றால் முடியாததும் இல்லை. எவ்வளவு நாட்களுக்குத்தான் அன்றைய தலைவர்களையே முன்மாதிரியாகச் சொல்லிக் கொண்டிருப்பது? இன்றைய தலைமுறையில் முன்மாதிரிகளை உருவாக்குவோம். நாமே முன்மாதிரியாக மாறுவோம்.



# தமிழ் 2023

நற்றமிழரின் நாடித்துடிப்பு


## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |


## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

Email: editor@ithamil.com




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers